KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

மலர்:- 33, 02 January 2026 இதழ்:- 01

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

# புதிய திருப்புமுனையில் தையிட்டி விகாரை விவகாரம்!

## விகாரைக்குரிய காணி சட்டவிரோதம் என்றால் அதை ஏற்கவும் தயார்! -பௌத்தகுரு!



தையிட்டி விகாரை விவகாரம்: காணி உரிமை, மத ஒற்றுமை, நியாயம் என்று ஒரு முக்கியமான திருப்பத்தில் உள்ளது. தையிட்டி திஸ்ஸ விகாரை யைச் சுற்றியுள்ள காணிகளை உரிய காணி உரிமை யாளர்களுக்கு விடுவிப்பது தொடர் பாக யாழ்ப்பாணம் மாவ ட்ட அரச அதிபருடன் நடைபெற்ற சந்திப்பில் இணக்கம் காணப்பட்டு ள்ளமை, நீண்ட காலமாக நீடித்து வரும் ஒரு மிக முக்கியமான சமூக அரசி யல் மதச் சிக்கலில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க திருப்பமாகும். இந்த இணக்கம், வெறுமனே ஒரு (16ம் 24ம் பக்கங்களைப் பார்க்க).



# டக்ளஸைப் புனிதராக்கும் முயற்சிகள்?

டக்ளஸ் தேவானந்தின் கைது என்பது தே.ம.சக்தி அரசாங்கத்தின் ஒரு அரசியல் நாடகம் மட்டுமே. அதையிட்டு மகிழ்ச்சி கவலை அவசியமற்றவை. அது ஆழமாக ஆராயப்பட வேண்டிய விடயம். ஆனால் அக் கைது தொடர்பாக சில தரப்புகளின் வெளிப்பாடுகள் மறுதலிக்க ப்பட வேண்டியவை. நியாயமாகச் சிந்திப்பவர்கள் அதனைக் கண்டிக்க வேண்டும். (4ம்பக்கம் பார்க்க)



யாழ்ப்பாண அபிவிருத்திக் கூட்டத் தில் அர்ச்சுனா எம்.பி. கஜேந்திரகுமார் எம்.பி. ஸ்ரீதரன் எம்.பி ஆகியோருக்கிடையே நிகழ்ந்த வாய்த்தர்க்கம் (2ம் பக்கம்)

## பேச்சின் மரியாதை சிதைந்தால் அரசியலும் சமூகமும் சிதையும்



## ஆளுமை இழந்த தமிழ் அரசியல்

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# பேச்சின் மரியாதை சிதைந்தால் அரசியலும் சமூகமும் சிதையும்



யாழ்ப்பாண அபிவிருத்திக் கூட்டத்தில் அர்ச்சுனா எம்.பி, கஜேந்திரகுமார் எம்.பி, ஸ்ரீதரன் எம்.பி ஆகியோருக்கிடையே நிகழ்ந்த வாய்த்தர்க்கம், அரசியல் வேறுபாடுகளின் எல்லையைத் தாண்டி, யாழ்ப்பாணச் சமூகத்தின் பண்பாட்டையே காயப்படுத்திய ஒரு அவமானகரமான நிகழ்வாகப் பதிவாகியுள்ளது. கருத்து வேறுபாடு ஜனநாயகத்தின் உயிர் ஆனால் அந்த வேறுபாடு பேசப்படும் மொழியும், காட்டப்படும் மரியாதையும் தான் சமூகத்தின் முகம். அந்த முகம் அன்று களங்கமடைந்தது.

யாழ்ப்பாணம் அறிவின், அடக்கத்தின், விவேகத்தின் அடையாளம். இங்கு அரசியல் வாதம் கூட நெறியுடனும் நயம் கொண்டும் நடந்த காலங்கள் உண்டு. ஆனால் மக்கள் நலன் பேச வேண்டிய மேடையில், சொற்கள் கத்திகளாக மாறி, தனிப்பட்ட தாக்குதல்களாகச் சிதறிய போது அது அபிவிருத்திக் கூட்டமா அல்லது அவமதிப்பு அரங்கமா என்ற கேள்வி எழாமல் இருக்க முடி யாது.

புலம்பெயர் தமிழர்கள் தூரத்திலிருந்து பார்ப்பவர்கள் அல்ல. தாயகத்தின் ஒவ்வொரு துடிப்பிலும் தங்களின் துடிப்பை உணர்பவர்கள். நாங்கள் அனுப்புவது பணம் மட்டும் அல்ல நம்பிக்கையும் கனவுகளும். எங்கள் வாக்கும் வலியும் ஒப்படைக்கப்பட்ட பிரதிநிதிகள், தங்களின் அகங்காரத்தைத் துறந்து, மக்களின் குறைகளை ஒருமித்த குரலாக மாற்றுவார்கள் என்ற எதிர்பார்ப்போடு தான் நாங்கள் உங்களை அனுப்பினோம். ஆனால் அங்கே கேட்டது மக்களின் குரலா? அல்லது ஈகோவின் ஆர்ப்பாட்டமா?

அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கப் பேச்சுத் திறன் அவசியம் ஆனால் அந்தத் திறன் மரியாதை இழந்தால் அது மக்களுக்கான ஆயுதமாக அல்ல மக்களைத் தள்ளும் கம்பியாக மாறி விடும். ஒருவரையொருவர் அவமதிப்பதன் மூலம் எதையும் வெல்ல முடியாது. வெல்லப்படுவது மக்கள் நம்பிக்கையே அது ஒருமுறை உடைந்தால், மீண்டும் இணைப்பது கடினம்.

இந்தப் பேச்சு யாழ்ப்பாணச் சமூகத்தின் பண்பாட்டைச் சிதைத்தது என்பதே புலம்பெயர் தமிழர்களின் வேதனை. மொழி எங்கள் அடையாளம் மரியாதை எங்கள் மரபு. அந்த மரபை மிதித்துச் செல்லும் அரசியல், எவ்வளவு பெரிய பதவியிலிருந்தாலும், சிறுமை தான். மக்கள் அனுப்பிய பிரதிநிதிகள், மக்களின் மரியாதையை மேடையில் காவல் காக்க வேண்டும் அதைத் தகர்க்க அல்ல.

எமது வேண்டுகோள் எளிது, ஆனால் ஆழமானது. பேச்சு மரியாதை அவசியம். கருத்து வேறுபாடு இருக்கட்டும் குரல் உயரட்டும் ஆனால் சொல் தாழக்கூடாது. யாழ்ப்பாணம் அரசியல் சண்டைகளின் களமாக அல்ல தமிழ் நாகரிகத்தின் ஒளி விளக்காகவே திகழ வேண்டும்.

இனி ஒவ்வொரு மேடையும் சுய விமர்சனத்துக்கான வாய்ப்பாக மாற வேண்டும். நான் சரி என்ற அகங்காரத்தை விடுத்து, மக்கள் சரி என்ற பணிவே அரசியலின் உயரம். அதுவே தாயகத்தையும் புலம்பெயர்ந்த தமிழர்களின் நம்பிக்கையையும் இணைக்கும் பாலம்.

மரியாதை பேசத் தெரியாத அரசியல், அபிவிருத்தியைப் பேசத் தகுதியற்றதே. இந்த உண்மை மீண்டும் மீண்டும் நினைவு ஊட்டப்பட வேண்டிய காலகட்டத்தில் தான் நாம் இருக்கிறோம்.

- கனடாவில் இருந்து அமுதன்

## வெசாக் பண்டிகைத் திகதியை மாற்றுமாறு மகாநாயக்கர்கள் அநுராவுக்கு அவசர கடிதம்!



2026 ஆம் ஆண்டு மே மாதத்தில் இரண்டு பௌர்ணமி தினங்கள் வருவதால் அவற்றில் எதனை வெசாக் தினமாக அறிவிப்பது என்பது குறித்து பௌத்த மதத் தலைவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய அரச நாட்காட்டியில் மே முதலாம் திகதி வெசாக் தினமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அன்றைய தினத்தில் அதற்குரிய நட்சத்திர பொருத்தம் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

மே 30ஆம் திகதியை அதிகாரப்பூர்வ வெசாக் தினமாக மாற்றியமைக்குமாறு மதகுருமார்கள் வலியுறுத்தியுள்ளனர். எனவே அன்றைய தினத்தில் சகல அரச விழாக்கள் மற்றும் சமய நிகழ்வுகளையும் நடத்துவதற்குரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களிடமிருந்து அவசியமும் அவசரமுமான நிதி திரட்டல்!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டு களாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வருபவர்கள் நீங்கள். அதுமட்டுமல்ல அவர்களது கல்வி - பாதுகாப்பு - உடை - சுகாதாரம் - பராமரிப்பு உட்பட அனைத்துச் செலவு களையும் வருடாந்த இன்னிசை விழாவும் இராப்போசன விருந்தும் நிகழ்வு மூலம் உதவி வருபவர்களும் நீங்களே.

ஆனால் அண்மையில் இலங்கையில் ஏற்பட்டு இன்று வரை வெள்ளப் பாதிப்பால் சேதமடைந்த முல்லைத்தீவு முள்ளிய வளையில் அமைந்துள்ள பாரதி இல்லம் மற்றும் கிளிநொச்சியில் அமைந்துள்ள செஞ்சோலை அன்பு இல்ல ங்கள் இந்த இயற்கை அனர்த்தத்தில் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது. குறிப்பாக முல்லைத்தீவு பிராந்தியத்தில் உள்ள முள்ளியவளையில் அமைந்துள்ள பாரதி இல்லம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று இல்லங்களும் பல ஆண்டுகளாக சங்கடங் களையும் சவால்களையும் கடந்து பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு பாதுகாப்பான தங்கும் சூழல், உணவு, கல்வி, ஆலோசனை மற்றும் எதிர்கால நம்பிக்கை வழங்கி வருகின்றன. ஆனால் அண்மையில் இலங்கை முழுவதும் ஏற்பட்ட கொடுமையான மழை, வெள்ளப்பெருக்கு மற்றும் நீர்மட்ட உயர்வு காரணமாக இல்லங்களின் கட்டிட வசதி கள், குடிநீர் அமைப்புகள், சமையல் அறைகள், படுக்கை யறைகள் குழந்தைகளின் உடமைகள் உள்ளிட்ட பல அத்தியாவசிய பகுதிகள் கடுமையாக சேதமடைந்துள்ளன. குழந்தைகளின் தினசரி வாழ்வாதாரத்துக்கே நேரடியான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்த அத்தியாவசியமானதும் அவசரமானதுமான சூழ் நிலையை முன்னிட்டு உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை கனடா தமிழ்ச்சமூகத்திடம் அவசர நிதி உதவிக்கான திரட்டல் முயற்சியை 05 டிசம்பர் 2025 வெள்ளிக்கிழமை முதல் ஒரு மாதத்திற்கு ஆரம்பித்துள்ளது. (05 ஜனவரி 2026 வரை)

இல்லங்களின் உடனடி பழுது பார்ப்பு, குழந்தைகளின் உணவு, உடை, படுக்கை உள்ளிட்ட அடிப்படை வசதி கள் மீளமைத்தல் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை மேம்பாடுகள் பாதிக்கப்பட்ட கற்றல் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மாற்றுதல் என்பன உடனடித் தேவையாக வுள்ளது.

நமது குழந்தைகள் பாதுகாப்பாகவும் மரியாதையுடனும் வாழ்வதை உறுதி செய்ய கனடா தமிழர் சமூகத்தின் இரக்க மிக்க பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது. ஒவ் வொரு நன்கொடையும் ஒரு குழந்தையின் எதிர்காலத் திற்கு புதிய ஒளியையும் நம்பிக்கையையும் வழங்கும் என்பதை உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை வலியுறு த்துகிறது. ஈழநாடு பரமேஸ் 416 841 9600 என்ற எமது தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிதி உதவி வழங்க விரும்பும் அன்பர்கள் தயவு செய்து பெயர், தொலைபேசி இலக்கங் களைத் தவறாது பதிவு செய்யவும்.

வங்கியில் நேரடியாக பணம் செலுத்த விரும்புபவர்கள் **T.D.BANK Eelanadu Anpuillam A/C 3026 - 5013835** என்ற வங்கிக் கணக்கில் செலுத்தவும். முக்கியமாக உங்களது பெயர் விபரங்களை எமக்கு அறியத் தரவும்.

**E-Transfer**செய்ய விரும்பும் அன்பர்கள் **Eelanadu 1993@gmail.com** என்ற மின்னஞ்சலில் அனுப்பலாம். நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு டொலர்களும் மூன்று இல்லக் குழந்தைகளுக்கு உரிய முறையில் பயன்படுத்தப்படும்.

அன்பர்களே! உங்களது பெயர் விபரங்கள் அனுப்பிய பணத் தொகை சரியாக உள்ளதா என்பதை எம்முடன் தொடர்பு கொண்டு அல்லது முகநூல் மூலமாகவோ - **Eelanadu.ca** மின்னிதழ் மூலமும் உறுதிப்படுத்திக் கொள் ளுங்கள். உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை கனடியத் தமிழ்சமூகத்தில் 32 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிரு ப்பதுடன் 3 இல்லங்களின் வாழும் குழந்தைகளின் நலனுக்காக 14 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக கனடியத் தமிழ் சமூகத்தின் ஆதரவோடு அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். என்றும் உங்கள் அன்புக்குரிய

T.K.பரமேஸ்வரன் - ஆசிரியர் ஈழநாடு 416 841 9600

அவசர நிதி உதவி வழங்கியோர் விபரங்கள்

திரு சாந்தா பஞ்சலிங்கம் 1000.00

ஈழநாடு பத்திரிகை 500.00

திருமதி சாருமதி மனோகாந்தன் 250.00

திரு.திருச்செல்வன் சிவசாமி 50.00

திரு விசு கணபதிப்பிள்ளை (உதவும் பொற்கரங்கள் அமைப்பு கனடா) 250.00

இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் கனடா 1000.00

திருமதி வதனி ஹரிஸ் 500.00

திரு ம.தயாகுணன் 100.00

திரு ஜெயபாலசிங்கம் நாகமணி (டென்மார்க்) 500.00

திருமதி ரஜனி நித்தி (கனடா) 500.00

செல்வி வைதினி விஜயகுமார் 100.00

திரு குலசேகரம்பிள்ளை அநுராகரன் 200.00

திரு பாஸ்கரன் வைரமுத்து 100.00

திரு பாலசிங்கம் உதயகுமார் குடும்பம் 250.00

திரு பாலகுமாரன் மாசிலாமணி குடும்பம் 200.00

திரு கதிரித்தம்பி சுப்பிரமணியம் 1000.00

திரு ஞானபண்டிதன் பாலசுப்பிரமணியம் 150.00

திருமதி இராஜேஸ்வரி சிதம்பரநாதன் 500.00

திரு தீபன் கிருஷ்ணபிள்ளை 250.00

திரு திருமொழி முருகேசபிள்ளை 100.00

திரு இரத்தினேஸ்வரன் இரத்தினம் 100.00

திரு வில்வரத்தினம் பொன்னையா 50.00

பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர் 75.00

திரு. திருமதி தம்பிஜயா குடும்பம் 500.00

ஐயப்பன் ஆலய தொண்டர்களின் நன்கொடை1000.00

கனடா ஐயப்பன் பக்தர்களும் தொண்டர்களும் 2150.00

திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் நினைவாக 500.00

திரு செ.கிருஷ்ணகோபால் (அம்மா அடைவுமாடம்)200.00

28 டிச 2025 இது வரை 12.025.00 டொலர்கள் (தொடரும்)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# டக்ளஸைப் புனிதராக்கும் முயற்சிகள்?

டக்ளஸ் தேவானந்தின் கைது என்பது தே.ம.சக்தி அரசாங்கத்தின் ஒரு அரசியல் நாடகம் மட்டுமே. அதையிட்டு மகிழ்ச்சி கவலை அவசியமற்றவை. அது ஆழமாக ஆராயப்பட வேண்டிய விடயம்.

ஆனால் அக் கைது தொடர்பாக சில தரப்புகளின் வெளிப்பாடுகள் மறுதலிக்கப்படவேண்டியவை.

நியாயமாகச் சிந்திப்பவர்கள் அதனைக் கண்டிக்க வேண்டும்.

மனச்சாட்சி உள்ளவர்கள் இக்கைதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இக்கைது என்.பி.பியின் நம்பகத்தன்மை மீது ஐயம் கொள்ள வைக்கிறது.

மக்களுக்கு எத்தனை உதவிகள் செய்த ஒரு அரசியல் தலைவர்.

அவர் அடுத்த ஆட்டத்துக்கு தயாராகி விட்டார்.

அவர் சீதை போலத் தீக்குளித்து தன்னைப் புனிதராக்கித் திரும்பி வருவார். இது போல இன்னும் உண்டு

இப்படிச் சொல்பவர்கள் மக்களை மடையர்கள் என்று எண்ணுகின்றனரா? இவர் உண்மையான விடுதலைப் போராளியா? அல்லது நேர்மையான அரசியல் தலைவரா?

உண்மையான போராளி என்றால் இறுதி வரை அவ்வாறே இருந்திருக்க வேண்டும். இல்லை இவர் சரியென்றால் கருணா பிள்ளையான் போன்ற இன்னும் பலரும் சரியானவர்களே.

நேரமையான அரசியல்வாதியா? அதுவும் இல்லை. அப்படியானால் இவர் யார்?

விடுதலைக்காகப் போராடப் புறப்பட்டு மிக மோசமானவராக மாறிய அரசியல்



வாதி.கொலை கொள்ளை, கடத்தல், கப்பம், காட்டிக்கொடுப்பு, ஊழல், அதிகார முறைகேடுகள் செய்த ஒரு துணை இராணுவத் தளபதி. அமைச்சராக கௌரவத்துடன்? வலம் வந்த பாதாளக் குழுத் தலைவர். எல்லாவற்றுக்கும் மேலாக எம்மினத்தின் துரோகி.

முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக மக்கள் கொல்லப்பட்டபோது இதற்குக் காரணம் புலிகள் என்று கூறியிருந்தால் அரசியல்வாதி எனலாம். ஆனால் துணை இராணுவமாக அரசுடன் சேர்ந்து இனத்துக்கெதிராகச் செயற்பட்டது மட்டுமன்றி ஐ.நாவில் மகிந்தவுடன் நின்று கொண்டு அங்கு கொல்லப்படுபவர்கள் எல்லோரும் புலிப்பயங்கரவாதிகளே என்று கூறியவரை எப்படி அழைப்பது?

இவர் இவ்வாறு மாறியதற்குப் புலிகள் தான் காரணம் எனப் புலிகள் மீது பழியைப் போட்டுத் தப்பிவிட முடியாது.

புலிகள் தேர்தலைப் புறக்கணித்ததால் தான் இவரின் அரசியல் அத்திபாரம் உறுதியானது என்பது தான் உண்மை. புலிகளால் தான் இவர் அரசியல் செய்யவும் முடிந்தது. புலிகள் இல்லாத போதும் தன்னை அவர் மாற்றிக் கொள்ளவில்லை.

அண்மிய உதாரணம் ஒன்று. சாவகச்சேரியில் இவர் தனது ஆயுத அதிகார பலத்தால் ஆக்கிரமித்திருக்கும் வீட்டினது உரிமையாளன் பல முயற்சிகளின் பின்னர் இவருடன் நேரடியாக கதைக்கப் போன போது அவரைப் பார்த்து இவர் சொன்ன வார்த்தை. உம்மை அடிச்சுப் போட்டு கிணத்துக்குள்ளயெல்லோ இவங்களைப் போடச் சொன்னனான். இவங்கள் செய்யேல்லை என்பது.

தனது அரசியல் அதிகாரத்தால் வடக்கின் அதிகாரிகளைத் தவறான முறையில் இவர் பயன்படுத்தியதின் தொடர்ச்சி தானே அங்கஜனும் அடுத்து சந்திரசேகரும். யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் யார் என்று தியேட்டரில் தானே தீர்மானிக்கப்பட்டது.

இவர் மூலம் பலர் வேலை பெற்றனர் என்பது உண்மை. ஆனால் அவை வடக்கிற்குரிய வேலைகள் தான். இனத்தை விற்றதன் மூலம் அந்த வேலைகளை அரசாங்கங்களிடமிருந்து கொந்தராத்து எடுத்து தனது வாக்கு அரசியலுக்காக முறைகேடாக வழங்கினார் என்பது தான் உண்மை. அவற்றில் பல வேலைகளுக்கு இவரின் அள்ளக்கைகள் பணத்தைக் கறந்தனர் என்பதும் உண்மை.



இவரின் கொலை முயற்சிகளிலிருந்து தப்பியவர்கள் பலருண்டு. அதில் நானும் ஒருவன். டக்ளஸில் விசுவாசம் கொண்டவர்கள் பலர் உள்ளீர்கள். அது தவறல்ல. ஆனால் உங்கள் விசுவாசத்தைக் காட்டுவதற்காக அவரைப் புனிதராக்க முயலாதீர்கள். ஏனெனில் அது எமது சமூகத்துக்குத் தவறான முன்னுதாரணமாக அமைந்து விடும்..

**கந்தையா அருந்தவபாலன்**


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# 33வது ஆண்டில் உங்கள் ஈழநாடு! ஊடகப் பொறுப்பும் சமூகப் பொறுப்பும்!

கனடா மண்ணில் கடந்த 33 ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் ஈழநாடு பத்திரிகை, ஒரு சாதாரண புலம்பெயர் ஊடகமாக மட்டும் இல்லாமல், இனம் மொழி தேச விடுதலை தாயகம் என்ற கோட்பாடு களைத் தனது தாரக மந்திரமாகக் கொண்டு பயணித்து வரும் ஒரு தமிழ்த்தேசியக் குரலாகவே தன்னை நிலை நிறுத்தி யுள்ளது.

ஈழநாடு பத்திரிகையின் தனித்துவம், வெறுமனே செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிடுவ திலோ தன்னைச் சார்ந்தோர் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கில் அவர்களை மேன்மைப்படுத்துவதோ இல்லை.

இனம் மற்றும் சமூகம் சார்ந்த பார்வையே அதன் முதன்மை இலக்கு. பத்திரிகை என்பது நடுநிலை யான பார்வையாளன் என்ற குறுகிய வரை யறையை மீறி ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு நெறிசார்ந்த நிலைப்பாட்டை ஈழநாடு வெளிப்படு த்தி வருகிறது. இதுவே இதனை மற்ற புலம்பெயர் ஊடகங்களிலிருந்து வேறுபடுத்துகிறது.

ஈழநாடு பத்திரிகையின் வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் அது நெடுங்காலமாகவே சமூகப் பணி களைப் பொறுப்புணர்வுடன் காலத்தின் தேவைக்கேற்ப செய்து வருவதைக் காணலாம்.

குறிப்பாக இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்யும் நோக்கில் சட்ட உதவிக்காக கனடாவில் பாரிய அளவில் நிதி சேகரித்து, திரு பழ. நெடுமாறன் அவர்களிடம் ஒப்படைத்த நிகழ்வாகும். இது ஒரு ஊடகம், நீதியும் மனித உரிமையும் தொடர்பில் எவ்வளவு தூரம் தலையிட முடியும் என்பதற்கான தெளிவான சான்று.

அதேபோல் பொடா சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்ட தமிழேந்தல் ஈழவேந்தன் அவர்களுக்கான சட்ட உதவிக்கும் நிதி சேகரித்து வழங்கியமை, எல்லை தாண்டிய தமிழ்ச் சமூகப் பொறுப்பை ஈழநாடு எவ்வளவு ஆழமாக உணர் கிறது என்பதைக் காட்டுகிறது. அதேபோன்று உணர்ச்சிக்கவிஞர் காசிஆனந்தன் அவர்கள் தமிழ்நாட்டில் நிதி நெருக்கடியை எதிர்நோக்கி இருந்த வேளை தமிழ் இன உணர்வாளர் திரு வேலுப்பிள்ளை தங்கவேலு அவர்களின் அன்பு வேண்டுகோளுக்காக ஈழநாடு பத்திரிகை தனது ஆதரவாளர்களிடம் இருந்து நிதியைத் திரட்டிக் கொடுத்தது.

2009 யுத்தம் முடிவுற்ற பின்னர், எல்லாம் போய் விட்டது என்று பலரும் தாயகத்தை மறந்த காலகட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டு தாய் தந்தையரை இழந்த குழந்தைகளைப் பராமரிக்க வேண்டும் அவர்கள் தான் எம் மண்ணின் அடுத்த சந்ததி என்பதை உணர்ந்து முல்லைத்தீவு — கிளிநொச்சி பகுதிகளில் இயங்கி வரும் பாரதி இல்லம், செஞ்சோலை அன்பு இல்லம் ஆகிய இல்லக் குழந்தைகளுக்காக, கடந்த 14 ஆண்டு களாக உணவு, உடை, கல்வி உள்ளிட்ட அடிப் படை தேவைகளை கனடா தமிழ்ச்சமூகத்தின் குறிப்பாக ஈழநாடு பத்திரிகையின் வாசகர்களின் பங்களிப்போடு தொடர்ந்து வழங்கி வருவது ஈழநாடு பத்திரிகையின் மனிதநேயப் பணியின் உச்சமாகும். இது தற்காலிக உதவி அல்ல, தொடர்ச்சியான மிகப் பெரிய பொறுப்பு.

அண்மையில் ஏற்பட்ட புயலால் பாதிக்கப்பட்ட எமது இல்லங்களுக்காக வும் உடனடியாக நிதி சேகரித்து அனுப்பியமை, செய்தி வெளியிடுவதோடு நிற்காத ஊடகமாக ஈழநாடு செயல்படு கிறது என்பதைக் மீண்டும் உறுதி செய்தது.

கனடாவில் இயங்கும் பல தமிழ் பத்திரிகைகள் செய்தி, விளம்பரம், கருத்துப் பதிவு என்ற வட்டத்திற்குள் சுருங்கிக் கிடக்கும் நிலையில், ஈழநாடு பத்திரிகை மட்டும் ஊடகப் பணியுடன் தாயகம் — சமூகம் சார்ந்த நேரடி செயல்பாடுகளில் ஈடுபடுகிறது. இது ஒரு கடுமையான ஆனால் தவிர்க்க முடியாத ஒப்பீடு. ஒரு சவால். இதனா லேயே, ஈழநாடு மீது புலிகளின் குரல் என மறை முக விமர்சனங்கள் இருந்தாலும், அதன் சமூகப் பங்களிப்பை மறுக்க முடியாது.

33வது ஆண்டை நோக்கி பயணிக்கும் ஈழநாடு பத்திரிகை, ஒரு ஊடக நிறுவனமாக மட்டுமல்ல, ஒரு இயக்கமாக, ஒரு பொறுப்புள்ள குரலாக, ஒரு சமூகச் சாட்சியாக தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. ஊடகம் என்பது கேள்வி கேட்பதற்காக மட்டு மல்ல, தேவைப்படும் இடத்தில் கை கொடுக்கவும் வேண்டும் என்பதற்கான உயிருள்ள எடுத்துக் காட்டாக ஈழநாடு திகழ்கிறது.

இந்தப் பயணம் தொடர வேண்டும். இந்தக் குரல் தளரக் கூடாது. ஈழநாடு எழுத்தின் வழி செயல்! செயலின் வழி தேசியம்.! தொடர்ந்து பயணிக்க வாசகர்களாகிய நீங்கள் தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவையும் அன்பையும் போற்றி வணங்கி 33வது ஆண்டில் உங்கள் கரம் பற்றிப் பயணிப்போம்.

பாதை கரடு முரடாக இருந்தாலும் எமது இலட்சியத்தை நோக்கிய பயணம் தெளிவானது! வாருங்கள் எம்மோடு இணைந்து தாயகத்தில் வாழும் குழந்தைகளை - பிள்ளைகளைக் காப் பாற்றுவோம். எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்ற கவலைப்படுவதை விட ஒரு ஏழைக் குழந்தைக்கு வயிற்றுப் பசி போக்கினோம் என்ற மகிழ்வோடு வாழ்வோம்.

எதிர்வரும் 21 மார்ச் 2026 அன்று 33வது ஆண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடவுள்ளது. காலத்தின் சவால்களை எதிர்கொண்டு தன் பாதை யைத் தளராமல் தொடரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் விழாவில் கலந்து கொள்ள தயாராகுங்கள்! உங்கள் வரவு எமக்கு மகிழ்ச்சி என்பதற்கு அப்பால் உங்கள் பங்களிப்பு தேசம் நோக்கி செல்கிறது என்பதையும் மறவாதீர்கள். (மேலதிக விபரங்கள் அடுத்த வாரம். நன்றி)

# தையிட்டி சட்டவிரோத விகாரை:- காணி உரிமையாளர்களின் நயினாதீவு நோக்கிய பயணமும் உரிமை மீட்புக்கான குரலும்!

சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுள்ளதாக குற்றஞ் சாட்டப்படும் விகாரை தொடர்பான காணி விவகார த்தில், அந்தக் காணிகளின் சட்டபூர்வ உரிமையாளர் கள் 27 டிசம்பர் 2025 நயினாதீவுக்குச் சென்று நாகதீப விகாராதிபதியை நேரில் சந்தித்துள்ளனர். தமது காணி உரி மையை உறுதிப்படுத்தும் ஆவணங் களையும் காணி உறுதிகளையும் விகாராதிபதியிடம் கையளித்து, தமக்கு சொந்தமான காணிகளை மீள வழங்க உதவு மாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்ட காலமாக இழுபறியாகி வரும் இவ்விவகாரம், வடபகுதி தமிழர்களிடையே பெரும் மனவேதனையை யும் அவநம்பிக்கையையும் உருவாக்கிய நிலையில் சட்டத்திற்கும் நீதிக்கும் உட்பட்டு ஒரு தீர்வு கிடை க்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் இந்தச் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டதாகக் காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக குறித்த விகாரை கட்டப்பட்ட காணிகள் தமது குடும்பங்களுக்குப் பூர்வீகமாகச் சொந்தமானவை என்றும், உரிய சட்ட நடைமுறைகள் இன்றியே அவை கையகப்படுத்தப்பட்டு கட்டுமானம் மேற் கொள்ளப்பட்டதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டினர். இதனை நிரூபிக்கும் வகையில் காணி அனுமதிப்



பத்திரங்கள், பதிவுகள், வரி செலுத்திய ஆவணங்கள் உள்ளிட்ட சட்டரீதியான உறுதிகளை விகாராதிபதி யிடம் அவர் கள் சமர்ப்பித்துள்ளனர்.

நாகதீப விகாராதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பு அமைதியான முறையில் நடை பெற்றதாகவும் தமது கோரிக்கை பகைமையோ மோதலோ அல்ல, நீதியும் உண்மையும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே தமது எதிர்பார்ப்பு (22ம் பக்கம் பார்க்க)

# ஆளுமை இழந்த தமிழ் அரசியல்

இலங்கைத் தமிழ் அரசியலின் இன்றைய நிலை யைப் பார்க்கும் போது ஒரு கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகிறது தமிழ் அரசியல் அறிவின் பாதையிலிருந்து நழுவி கேலிக்குரிய மேடையாக மாறிவிட்டதா?

யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத் தும் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராம நாதனின் தொடர்ச்சியான தரமற்ற பேச்சுகளும், பொறுப்பற்ற நடத்தைகளும், தனிநபர் அரசியல் சிதறலாக மட்டும் பார்க்க முடியாத அளவிற்கு முழு தமிழ் சமூகத்தின் கண்ணியத்தையே குலைக்கும் நிலையைக் கொண்டு சென்றுள்ளன.

பாராளுமன்றம் என்பது தனிப்பட்ட ஆவேசங் களை வெளிப்படுத்தும் மேடை அல்ல. அது ஒரு இனத்தின் அரசியல் முதிர்ச்சியையும், நாகரிகத்தையும் பிரதிபலிக்கும் உயரிய அவை. அந்த அவையில் ஒலிக்கும் ஒவ்வொரு சொல் லும், உச்சரிக்கப்படும் ஒவ்வொரு வாக்கியமும், தாயகத்திலும் புலம்பெயர்ந்த உலகளாவிய தமிழ் சமூகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் வலிமை கொண்டது.

ஒரு காலத்தில் தமிழ் அரசியல் என்பது அறிவின் உயரம் கொண்டதாக இருந்தது.

சேர். பொன். இராமநாதன் அவர்களின் அரசியல் தெளிவு, சேர். பொன். அருணாசலம் அவர்களின் நிர்வாக ஆளுமை, ஜி. ஜி. பொன்னம்பலம் அவர் களின் வாதத்திறன், எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் நிதானம் அமிர்தலிங்கம் அவர்களின் பேச்சாற்றல்

இவை அனைத்தும் எதிரிகளே மதிக்கும் அளவு க்கு தமிழ் அரசியலை உயரத்தில் நிறுத்திய காலகட்டங்கள். அன்று அரசியல் என்பது மரியாதை கொண்ட போராட்டமாக இருந்தது. இன்று அது பல சந்தர்ப்பங்களில் மரியாதையற்ற அரங்காக மாறியிருக்கிறது.

கூச்சமற்ற வார்த்தைகள், கேலிச்சித்திரப் போக்கு, சமூக ஒழுக்கம் இழந்த பேச்சுகள் இவையெல் லாம் தனிப்பட்ட நபரின் பிழையாக முடிவ தில்லை. அவை இலங்கைத் தமிழர் அரசியல் இப்படித் தான் என்ற தவறான பிம்பத்தை உலகிற்கு உருவாக்குகின்றன.

இதனை நாம் சாபக்கேடென்று சொல்லி தப்பித்துக் கொள்ள முடியுமா? இல்லை.

இது தமிழ் மக்கள் தொடர்ந்து மேற்கொண்டு வரும் தவறான தலைமைத் தேர்வுகளின் விளைவு. கைதட்டல் வாங்குபவன் தலைவன் என நினைக்கும் மனநிலை.

ஆவேசப் பேச்சையே துணிச்சல் என மதிக்கும் அறியாமை, அறிவை விட ஆரவாரத்தை முன்னிறுத்தும் அரசியல் சோம்பல் இவையே இந்த வீழ்ச்சியின் அடித்தளம்.

தமிழ் அரசியலுக்கு இன்று தேவைப்படுவது மேடை கோமாளிகள் அல்ல. மௌனத்திலும் கனத்த பொருள் கொண்ட தலைவர்கள்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் கூச்சலால் வெல்லப்படாது. அது அறிவு, ஒழுக்கம், அரசி யல் நயம் ஆகியவற்றால் மட்டுமே முன்னேறும்.

தமிழ் அரசியல் மீண்டும் அறிவின் பாதைக்குத் திரும்புமா? அல்லது கேலிக்கும் அவமதிப்பு க்கும் உரிய அரசியலாக உறைந்து போகுமா?

அதற்கான பதில் பாராளுமன்றத்தில் இல்லை. தமிழ் மக்களின் அரசியல் விழிப்புணர்வில் தான் உள்ளது.தமிழ் மக்களுக்கு இன்று தேவை கோமாளிகள் அல்ல. கண்ணியமான தலைவர்கள்.

வாக்குவாதம் செய்யத் தெரிந்தவர்கள் அல்ல. வாதத்துக்கு வலு சேர்ப்பவர்கள். திமிருடன் பேசுபவர்கள் அல்ல. தீர்க்கதரிசனத்துடன் பேசுபவர்கள். இந்த சீரழிவைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கும் உண்டு.

சிந்திக்காத வாக்குகள் சீரழிந்த தலைமைக்கு வழி வகுக்கும். அந்தத் தலைமை ஒரு இனத் தின் கண்ணியத்தையே சிதைக்கும்.

இப்போது கேள்வி ஒன்று மட்டுமே நிற்கிறது தமிழ் அரசியல் மீண்டும் அறிவின் பாதைக்கு திரும்புமா? அல்லது கோமாளித்தனத்தின் பள்ளத் தாக்கில் முழுமையாக வீழுமா? இந்தக் கேள்விக் கான விடை தமிழ் மக்களின் மனசாட்சியில் தான் உள்ளது.

ஆகவே இந்தத் தலையங்கம் ஒரு நபரைக் குற்றம் சாட்டுவதற்கல்ல. ஒரு சமூகமாக நாம் சிந்திக்க வேண்டிய தருணத்தை நினைவு ஊட்டுவதற்கே.- ஆசிரியர்

# இந்திய வெளிவிவகார அமைச்சர் - தமிழ்க்கட்சிகள் சந்திப்பு!

## தமிழரசுக்கட்சியின் நிலைப்பாடு பற்றி கஜேந்திரகுமாருக்கு பாடம் எடுத்த சி.வி.கே



இலங்கை தமிழ் அரசுக் கட்சி சமஸ்டி கட்சி ஆகவே சமஷ்டியை பற்றி நாங்கள் பேசாமல் விடுவோமா? இந்திய வெளியுறவு அமைச்சரிடம் அதனையே வலியுறுத்தினோம் என சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். சமஷ்டியை பற்றி நாங்கள் பேசவில்லை என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தது ஆச்சரியமளிக்கிறது எனவும் கூறியுள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் இது தொடர்பில் கேள்வி எழுப்பியதுடன் சமகால நிலைமைகள் தொடர்பாக நடத்திய ஊடக சந்திப்பில் இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பில் அவரிடம் மனு கையளிக்கப்படவில்லை எனவும் உயர்ஸ்தானிகரிடமே மனு கையளிக்கப் பட்டதாக கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான சந்திப்புக்களில் அமைச்சர் மனுவை கையேற்பதில்லை என்ற, இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அறிவுத்தலுக்கமைய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடம் மனு கையளிக்கப் பட்டது.

இந்த சந்திப்பின் அடிப்படை நோக்கம், கால தாமதமாகியுள்ள மாகாண சபைத் தேர்தலை நடத்த இலங்கை அரசாங்கத் திடம் இந்தியா வலியுறுத்த வேண்டும் என்பதே ஆகும். மாகாண சபை தேர்தலை நடத்த நானும் ஏனையவர் களும் வலியுறுத்தினோம்.

கலந்துரையாடலை ஆரம்பித்து நானே. கலந்துரையாடலின் இறுதியிலும் சமஸ்டியை பற்றி பேசினோம். பல விடயங்களை பேசினோம்.

சந்திப்பு முடியும் தருணத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு நாம் முன்வைத்த கடிதத்தின் நோக்கத்தை மீண்டும் ஜெய்சங்கருக்கு தெளிவுபடுத்தினோம்.

மாகாண சபை இந்தியா இலங்கையுடன் செய்த ஒப்பந்தம் மூலமே அது உருவானது. அதே போல குறித்த சந்திப்பில் எமது இறுதி இலக்கும் நோக்கும் கூட்டாட்சி சமஷ்டி தான் என்பதை தெரிவித்தோம். மனுவில் இந்த விடயம் இருக்கிறது. நாங்கள் பொய் சொன்னதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்கிறார். நான் உண்மையை தான் கூறுகிறேன்.

சந்திப்பில் பங்கேற்ற ஏனைய கட்சித் தலைவர்கள் இதை தெளிவுபடுத்துமாறு வலியுறுத்தினார்கள். சர்வதேச ரீதியில் எமது இலக்கை அடைவதற்கான ஆதரவு தேவை. இந்தியா இதற்கு உதவ வேண்டும் என சந்திப்பில் சொன்னோம். நான் சொன்னது பொய் என்றால் இந்தியா மறுதலிக்கும். இராஜ தந்திரிகள் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல மாட்டார்கள் .செயலிலேயே அதை செய்வார்கள்.

நாங்கள் சமஸ்டி கட்சி, ஆகவே சமஷ்டியை பற்றி பேசாமல் விடுவோமா? நான் சந்திப்பின் பின்பகுதியில் அதனை வலியுறுத்தினேன் என்றார்.

# மலேசிய மண்ணில் சர்வதேச தமிழ் விவாதப் போட்டியில் வென்று சாதனை படைத்த ஈழத்து மாணவர்கள்!



மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச அளவிலான தமிழ் விவாதப் போட்டிகளில், இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்திய தமிழ் மாணவர் அணி சம்பியன் பட்டத்தை வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. மலேசியாவின் 'உத்தாரா' பல்கலைக்கழகம் (Universiti Utara Malaysia – UUM) ஏற்பாடு செய்திருந்த சம்பந்தன் பைந்தமிழ்ச் சுடர் 5.0 எனும் பெருமன்ற விவாதப் போட்டியில், மலேசிய மற்றும் சிங்கப்பூர் மாணவர்களின் நீண்டகால ஆதிக்கத்தை முறியடித்து, முதன் முறையாகக் கிண்ணம் கடல் கடந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளாக மலேசிய அணிகளே ஆதிக்கம் செலுத்தி வந்த இக்களத்தில், இம்முறை இலங்கையின் 'தேசிய தமிழ் விவாத அணி (National Tamil Debating Development Squad) களம் இறங்கியது. வடக்கும் தெற்கும், கிழக்கும் ஒன்றிணைந்த ஒரு தேசிய அணியாக இவர்கள் செயற்பட்டதே இந்த வெற்றியின் முக்கிய சிறப்பம்சமாகும். இறுதிச் சுற்றில் நடப்புச் சம்பியனான மலேசியாவின் சிலாங்கூர் மாநிலத் தெரிவு அணியை இலங்கை அணி எதிர் கொண்டது. இன்றைய சூழலில் தமிழர்களின் அடையாளத்தைப் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிப்பது தாயகத் தமிழர்களா? அல்லது புலம் பெயர் தமிழர்களா? என்ற அனல் பறக்கும் தலைப்பில் தாயகத் தமிழர்களே எனும் சாராம்சத்தில் இலங்கை மாணவர்கள் முன் வைத்த ஆழமான வாதங்கள் நடுவர்களைப் பிரமிக்க வைத்தன.

வரலாற்றுச் சாதனை படைத்த சம்பியன் அணியினர் இறுதிப் போட்டியில் அபாரமான வாதங்களை முன்வைத்து வெற்றியைக் கவசமாக்கிய முதன்மை அணியினர் நால்வர்:

ஹரீஷ் ஜெயரூபன் (அணித் தலைவர்): றோயல் கல்லூரி, கொழும்பு மைக்கேல் ஜெனுஷன்: சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் சிவாஜினி பிரதீபன்: மெதடிஸ்ட் பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை லக்ஷ்மிதா சிவசங்கரன்: ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை யாழ்ப்பாணம், பருத்தித்துறை, திருகோணமலை மற்றும் கொழும்பு என நாட்டின் பல்வேறு திசைகளிலிருந்தும் வந்த மாணவர்கள், தமிழால் ஒன்றிணைந்து இந்த வெற்றியைப் பெற்றுள்ளனர். இவர்களுக்கு 10,000அமெரிக்க டாலர்கள் பணப் பரிசும், சுழற்கேடயமும் வழங்கப்பட்டது.

இந்த முதன்மை வெற்றியைத் தவிர, மலேசியாவின் புகழ்பெற்ற மலாயா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விவாதக் களத்திலும் இலங்கை மாணவர்கள் திறம்படப் போட்டியிட்டனர். அந்த அணியில் நிரஞ்சன் யுகப்பிரியன் (புனித தோமையார் கல்லூரி, கல்கிசை), தரனிகா தவரூபரசன் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்) மற்றும் ஸ்ரீ அக்ஷஜா ரெஜி ஜனகன்(திருகோணமலை) ஆகியோர் பங்காற்றினர். மேலும், ஆய்வுக் கட்டுரை மற்றும் விளக்கவுரைச் சமர்ப்பிப்புப் பிரிவில் கொழும்பு பிஷப்ஸ் கல்லூரி மற்றும் லேடீஸ் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் (சரவணநீர்த்திகா, பிரகதிஸ்ரீ, தனேந்திரன், சுரநிதா, சங்கவி) இலங்கையின் திறமையை வெளிப்படுத்தினர்.

மலேசியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திரு. ரிஸ்வி அவர்கள், வெற்றி பெற்ற மாணவர்களை நேரில் அழைத்து, இவர்கள் இரு நாட்டு உறவின் கலாச்சாரத் தூதுவர்கள் எனப் புகழாரம் சூட்டினார். போர் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும், ஈழத்து மாணவர்களின் கல்வித் தரமும், மொழிப்புலமையும் சற்றும் குறையவில்லை என்பதை இந்த வெற்றி உலகுக்கு உணர்த்தியுள்ளது. புலம்பெயர் தமிழர்கள் இந்த வெற்றியைத் தங்களது சொந்த வெற்றியாகக் கொண்டாடி வருகின்றனர்.

# தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி தமிழ்மக்களுடையது!

## நயினாதீவு விகாராதிபதியைத் தொடர்ந்து யாழ்.நாகவிகாராதிபதி!



தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி தமிழ் பொது மக்களுடையது. அதனை அந்த மக்களுக்கே வழங்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு அதனை நான் அரசாங்கத்திற்கும் கூறியுள்ளேன் என யாழ். நாக விகாரையின் விகாராதிபதி விமலதர்ம தேரர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 30 டிசம்பர் 2025 ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி பொது மக்களின் காணி என நீதி அமைச்சர் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்க தரப்புக்களுக்கு நான் தெளிவு படுத்தியுள்ளேன். இந்த பிரச்சனையை அரசியலாக்கி முரண்பாடுகளை வளர்க்க வேண்டாம் என தமிழ் சிங்கள மக்களிடம் கோருகிறேன்.காணிகளை காணி உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும். அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதே என் பிரார்த்தனை என தெரிவித்தார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா வடக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வடக்கில் உள்ள ஒரு விகா ரையை ஜனவரி 3ஆம் திகதி தாக்கி வகுப்புவாத கலவரத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் மனதை மூளைச் சலவை செய்து பிரிவினைவாதத்தை ஊக்குவிக்க முயற்சிப்பதாக அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் தையிட்டி ஆக்கிரமிப்பு விகாரைக்கெதிராக குரல் எழுப்பி வரும் தரப்புக்களிற்கு சீற்றத்தை தோற்றுவித்துள்ளது.

# தையிட்டி திஸ்ஸ விகாரை:- உண்மைக்காக எழுந்த ஒரு பௌத்த குரல்!

தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பான பிரச்சனை இன்று ஒரு மத விவகாரம் அல்ல. அது சட்டம், மனித உரிமை, நில உரிமை, வரலாற்று உண்மை ஆகியவற்றின் மையத்தில் நிற்கும் ஒரு அரசியல் சமூகப் பிரச்சனையாக மாறியுள்ளது. இவ்விவகாரத்தில் மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது, பௌத்த மதத்தின் உயரிய மரபைச் சேர்ந்த ஒரு மதத் தலைவர் நயினாதீவு நாகதீப விகாராபதிபதி நவதகல பதுமகீர்த்தி தேரர் அவர்கள் தமிழ்மக்களுக்காக வெளிப்படையாக வும் துணிச்சலாகவும் குரல் கொடுத்து வருவது தான்.

பொதுவாக விகாரை என்ற சொல்லே புனிதத்தையும், அஹிம்சையையும், தர்மத்தையும் நினைவு ஊட்டு கிறது. ஆனால் தையிட்டியில் எழுந்துள்ள இந்தக் கட்டிடம், அந்தப் புனித அர்த்தத்திற்கு நேர்மாறாக, சட்ட விரோதமாகவும், இராணுவத்தின் நேரடி ஆதரவு டன் தமிழ்மக்களின் பாரம்பரியக் காணிகளை கையகப் படுத்தி கட்டப்பட்ட ஒரு போலி விகாரை என்கிற குற்றச்சாட்டை எதிர்கொள்கிறது. இதனை தமிழ்த் தரப்பிலிருந்து மட்டும் அல்ல, பௌத்த சமயத் தலை வராகிய நாகதீப விகாராபதிபதி அவர்களே உறுதியாகக் கூறி வருவது இவ்விவகாரத்தின் முக்கியத்துவத்தை பல மடங்கு உயர்த்துகிறது.

அவர்கள் கூறும் கருத்தின் மையம் மிகவும் தெளி வானது சட்டத்திற்குப் புறம்பாக இராணுவத்தின் பாது காப்பில் ஒரு இனத்தின் நிலத்தை அபகரித்து கட்டப் படும் எந்தக் கட்டிடமும் பௌத்த தர்மத்தின் அடை யாளமாக இருக்க முடியாது. இந்த ஒரே வரி, தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பான முழுப் பிரச்சனையையும் சுருக்கமாக விளக்குகிறது.

நாகதீப விகாராபதிபதி அவர்கள், தையிட்டியில் காணப் படும் விகாரைக்கு உரிய சட்ட அனுமதிகள், நில உரிமை ஆவணங்கள், வரலாற்றுச் சான்றுகள் எதுவும் இல்லையென வெளிப்படையாகக் கேள்வி எழுப்புகின் றார். இது பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்காகவும், அதனை அரசியல் கருவியாக மாற்றி விடும் முயற்சி களுக்கு எதிரான ஒரு நேர்மையான நிலைப்பாடாகவும் பார்க்கப்பட வேண்டும். பௌத்த மதம் எங்கும் அநீதி யின் மேல் கட்டப்படக் கூடாது அது ஒடுக்குமுறை யின் அடையாளமாக மாற்றப்படக் கூடாது என்பதே அவர்களின் வாதம்.

மேலும் இந்த விகாரை கட்டுமானம், வடக்கில் தொடர்ச்சியாக நடைபெறும் பௌத்தமயமாக்கல் முயற்சிகளின் ஒரு பகுதியாக இருப்பதாகவும், அது இன ஒற்றுமைக்கு எதிரானது எனவும் அவர்கள்



சுட்டிக் காட்டுகின்றார். தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து, இராணுவ முகாம்களின் அருகே அல்லது அவற்றின் பாதுகாப்பில் மதச் சின்னங்களை நிறுவு வது, அமைதிக்கான பாதை அல்ல் அது எதிர்கால மோதல்களுக்கு விதை விதைப்பதற்குச் சமம் என்கிற எச்சரிக்கையும் அவரது குரலில் ஒலிக்கிறது.

இந்த நிலையில், நயினாதீவு நாகதீப விகாராபதிபதி அவர்களின் குரல், தமிழ்மக்களுக்கான ஒரு நெறிமுறை ஆதரவாக மட்டுமல்ல பௌத்த சமூகத்திற்குள்ளேயே எழும் ஒரு சுயவிமர்சனக் குரலாகவும் பார்க்கப்பட வேண்டும். எல்லா பௌத்தர்களும் இந்த அநீதிக்கு உடன்பட்டவர்கள் அல்ல என்பதை அவரது நிலைப் பாடு தெளிவாக நிரூபிக்கிறது.

தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரத்தில் உண்மை வெளிச்சத்திற்கு வர வேண்டுமெனில், இன அடிப்படை யிலான கூச்சல்களை விட, இப்படிப்பட்ட நேர்மையான மதத் தலைவர்களின் குரல்களைச் சமூகம் கவனமாகக் கேட்க வேண்டும். சட்டம், தர்மம், மனிதநேயம் இந்த மூன்றின் அடிப்படையில் மட்டுமே எந்த மதச் சின்ன மும் நிலைபெற வேண்டும். அதுவே உண்மையான சமாதானத்தின் அடித்தளம்.

இன்று தையிட்டி விவகாரத்தில் நாகதீப விகாராபதிபதி அவர்கள் எழுப்பும் குரல், நாளைய இலங்கைக்கு ஒரு முக்கியமான கேள்வியை முன்வைக்கிறது:

அநீதியின் மேல் கட்டப்படும் கட்டிடமா மதம்? அல்லது நீதியின் மேல் நிலைபெறும் தர்மமா மதம்? இந்தக் கேள்விக்கான பதில் தான், தையிட்டி திஸ்ஸ விகாரையின் எதிர் காலத்தையும், வடக்கின் இன நல்லிணக்கத்தையும் தீர்மானிக்கப் போகிறது.

T.K.பரமேஸ்வரன் – ஈழநாடு

# தையிட்டியில் காணிகளை இழந்தவர்களுக்கு மாற்றுக்காணி அல்லது இழப்பீடு?



தையிட்டி திஸ்ஸ விகாரையால் காணிகளை இழந்த பொது மக்களுக்கு மாற்றுக்காணிகளை பெற்றுக் கொடுப்பது அல்லது இழப்பீடுகளை பெற்றுக் கொடுப்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு என கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

அவரை தொடர்பு கொண்டு வினவியவேளை அவர் இதனை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டி திஸ்ஸ விகாரை தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் ஏற்கிறோம். ஆனால் குறித்த விகாரை எமது ஆட்சிக்காலத்தில் அமைக்கப்படவில்லை என்பதும் அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஆனால் அரசாங்கம் என்ற வகையில் குறித்த பிரச்சினையை நீடிக்காமல் முடிவுறுத்தவே எதிர் பார்க்கின்ற நிலையில் விகாரைக்காக காணிகளை இழந்த மக்களுக்கு உரிய மாற்றுக் காணிகளை வழங்குவது அல்லது தற்போதைய சூழ்நிலைக் கேற்ற அவர்களுக்கான இழப்பீடுகளை பெற்றுக் கொடுப்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு.

இழப்பீடு அல்லது மாற்றுக்காணிகளை வழங்குவ தற்கு கூட எத்தனை பேரிடம் ஆவணங்கள் சரியாக இருக்கிறது என்பது ஒரு புறம் இருக்க குறித்த பிரச்சனையை அரசியல் ரீதியாக மாற்றிக்கொண்டு செல்கிறார்கள்.

நாட்டின் மூவினங்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எமது அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கின்ற நிலை யில் மதம் மற்றும் இனங்களுக்கு இடையில் மோதல்களை உருவாக்க முயற்சிக்கக் கூடாது. ஆகவே அரசாங்கம் திடமான ஒரு நிலைப்பாட்டில் இருக்கிறது. தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக காணிகளை இழந்த மக்களுக்கு இழப்பீடு அல்லது மாற்றுக்காணியே என்றார்.

இது இவ்வாறிருக்க பருத்தித்துறை நகரசபையின் அமர்வு தவிசாளர் வின்சன் டீபோல் டக்ளஸ் தலைமையில் ஆரம்பமானது. அமர்வில் இரண்டு உறுப்பினர்கள் சமூகமளிக்கவில்லை. அமர்வில் 2026 ஆம் ஆண்டு நடமாடும் சேவைகளுக்கான அனுமதிகள், வாகன திருத்தங்களுக்கான அனுமதி கள் மற்றும் மின் இணைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான அனுமதிகள், உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன் அண்மையில் தையிட்டியில் வேலன் சுவாமிகள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்ட மைக்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டன தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# புத்தாண்டில் அகிம்சையும் தர்மமும்:- அநுர அரசின் முன் நிற்கும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு!



புத்தாண்டு என்பது நாள்காட்டியில் ஒரு எண் ணிக்கை மாற்றம் மட்டுமல்ல. சமூகத்தின் மன நிலையிலும் அரசியலின் திசையிலும் மாற்றம் வேண்டும் என்ற நம்பிக்கையின் தொடக்கம். அகிம்சை தர்மம் என்ற சொற்கள் இலங்கையின் அரசியல் உரையாடலில் அடிக்கடி உச்சரிக்கப் படுகின்றன. ஆனால் அவை ஆட்சி நெறிகளாக வும், நடைமுறை முடிவுகளாகவும் மாறுகிறதா என்பதே தமிழ்மக்களின் அடிப்படை கேள்வி. புத்தாண்டில் அநுர தலைமையிலான அரசு அந்தச் சொற்களுக்கு உயிரூட்டுமா? நல்லிணக்கத்தை உண்மையாக்குமா?

தமிழ்மக்களின் எதிர்பார்ப்பு மிகைப்படுத்தப்பட்ட கனவுகள் அல்ல. நீண்ட காலமாக ஒத்தி வைக்க ப்பட்ட நீதியின் கோரிக்கைகள். காணி அபகரிப்பு கள் நிறுத்தப்பட வேண்டும் இராணுவத்தின் குடி மக்கள் வாழ்வில் உள்ள அநாவசிய தலையீடுகள் குறைக்கப்பட வேண்டும் மத பண்பாட்டு அடை யாளங்கள் அரசியல் கருவிகளாக மாற்றப் படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். தையிட்டி போன்ற விவகாரங்கள், சட்டமும் நீதியும் சமமாக நடை முறையில் இருப்பதா என்பதற்கான பரீட்சை களாகவே பார்க்கப்படுகின்றன.

அகிம்சை என்பது வன்முறை இல்லாமை மட்டு மல்ல. அது அரசின் மொழியிலும் நடவடிக்கை யிலும் பிரதிபலிக்க வேண்டிய நெறி. கருத்து வேறுபாடுகளை எதிரியாக அல்ல, உரையாடலு க்கான வாய்ப்பாகப் பார்க்கும் மனப்பாங்கு வேண் டும். போருக்குப் பிந்தைய காலத்தில் 'பாதுகாப்பு' என்ற பெயரில் நிரந்தர அவசரநிலையைத் திணி ப்பது அகிம்சை அல்ல. நம்பிக்கையை வளர்க்கும் நிர்வாகமே அகிம்சை.

தர்மம் என்பது சமநீதி. சட்டம் அனைவருக்கும் ஒன்றே என்ற அடிப்படை உண்மை நடை முறை யில் உறுதியாக வேண்டும். காணி உரிமைகள், மொழி உரிமைகள், நினைவுச் சின்னங்கள், கல்வி வேலை வாய்ப்புகள் எங்கும் சமச்சீர் அணுகுமுறை தேவை. உண்மை நீதிக் கணக்கெடுப்பு அர்த்த முள்ள அதிகாரங்களுடன் செயல்பட வேண்டும் இழப்பீடுகள் மரியாதையுடன் வழங்கப்பட வேண்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உண்மை வெளிச்சத்துக்கு வர வேண்டும்.

நல்லிணக்கம் என்பது மறதி அல்ல. உண் மையை ஒப்புக் கொண்டு முன்னேறுதல். கடந் ததை மறந்து விடுங்கள் என்ற அறிவுரை காயங் களை ஆற்றாது. கடந்த தவறுகளை அரசு தைரிய மாக ஏற்றுக் கொண்டு, மீண்டும் நிகழாத வகை யில் நிறுவனச் சீர்திருத்தங்களை மேற் கொண்டால் தான் நல்லிணக்கம் சாத்தியம். மொழி சமத்துவம், மாகாண அதிகாரப் பகிர்வு, உள்ளாட்சி சுயாட்சி இவை உரையாடலுக்கான அட்டவணையில் தெளிவாக இடம் பெற வேண்டும்.

புத்தாண்டு, அநுர அரசுக்கு ஒரு வாய்ப்பு. வாக் குறுதிகளைச் சொற்களாக அல்ல, செயல்களாக மாற்றும் வாய்ப்பு.

தமிழ்மக்கள் அரசிடம் எதிர் பார்ப்பது கருணை அல்ல நீதி. அனுதாபம் அல்ல, உரிமை.

அச்சம் அல்ல, நம்பிக்கை. அகிம்சையும் தர்ம மும் ஆட்சி நெறிகளாக நிலை பெற்றால், நல்லி ணக்கம் அரசியல் முழக்கமாக அல்ல, சமூக வாழ் வாக மாறும்.

இந்த புத்தாண்டு, இலங்கை ஒரு புதிய அத்தி யாயத்தைத் தொடங்குமா? பதில் அரசின் செயல் களில் உள்ளது.

தமிழ்மக்கள் கவனமாகக் காத்திருக்கிறார்கள் நம்பிக்கையோடு, ஆனால் விழிப்போடு.

# டக்ளஸ் கைது முதல் வைத்தியசாலை வரை என்ன நடந்தது?



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (EPDP) செயலாளர் நாயகமும், முன்னாள் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உடல்நலக் குறைவு காரணமாக 30 டிசம்பர் 2025 சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவருக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாகவே, சிறைச்சாலை மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் அவர் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

வடக்கின் நீண்ட கால அரசியல்வாதியான டக்ளஸ் தேவானந்தா, கடந்த வாரம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் (CID) கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டதைத் தொடர்ந்து, இந்தச் சம்பவம் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டக்ளஸ் தேவானந்தா கைது செய்யப் பட்டதற்கான முக்கிய காரணம், பாதாள உலகக் கோஷ்டியின் தலைவராகக் கருதப்பட்டவரும், டுபாயில் வைத்து கைது செய்யப்பட்டு பின்னர் கொல்லப்பட்டவருமான 'மாகந்துரே மதுஷ்' என்பவருடன் தொடர்புடைய துப்பாக்கி விவகாரமாகும். விசாரணைகளின்படி, மாகந்துரே மதுஷிடம் இருந்து மீட்கப்பட்ட துப்பாக்கியொன்று, டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாப்பிற்காக கடந்த காலங்களில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ துப்பாக்கி என கண்டறியப்பட்டுள்ளது. அமைச்சராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்த ஒருவருக்கு வழங்கப்பட்ட அரச துப்பாக்கி, எவ்வாறு ஒரு பாதாள உலகத் தலைவரின் கைக்குச் சென்றது என்பது குறித்தே குற்றப்புலனாய்வுத் துறையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக வாக்குமூலம் அளிப்பதற்காகக் கடந்த சில தினங்களுக்கு முன்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தா, நீண்ட நேர விசாரணையின் பின்னர் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை ஜனவரி மாதம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டிருந்தார். சிறைச்சாலையில் இருந்த நாட்களில் அவருக்கு ஏற்கனவே இருந்த சில மருத்துவப் பிரச்சனைகள் அதிகரித்ததாகவும், அதன் காரணமாகவே தற்போது அவர் தீவிர மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவரது கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலில், டக்ளஸ் தேவானந்தாவின் கைது ஒரு முக்கிய திருப்பமாகக் கருதப்படுகிறது. கடந்த காலங்களில் ராஜபக்ச அரசாங்கம் உட்பட தென்னிலங்கை அரசாங்கங்களுடன் இணக்க அரசியல் நடத்தி வந்த டக்ளஸ் தேவானந்தா வடக்கின் அதிகார மையங்களில் ஒருவராகத் திகழ்ந்தார். எனினும், அண்மையில் ஆட்சியமைத்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், ஊழல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராகக் கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. அரசியல்வாதிகள் மீதான பழைய கோப்புகளைத் தூசி தட்டி வரும் இவ்வேளையில், டக்ளஸ் தேவானந்தாவின் கைது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை வெளிக்காட்டும் ஒரு நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத் தீவுப் பகுதிகள் மற்றும் வடக்கின் அரசியல் களத்தில் டக்ளஸ் தேவானந்தா தனக்கென ஒரு வாக்கு வங்கியையும், ஆதரவுத் தளத்தையும் கொண்டிருந்தார். அவரது கைது மற்றும் தற்போதைய மருத்துவமனை அனுமதி ஆகியவை அவரது ஆதரவாளர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளன. அதேவேளை, தமிழ் அரசியல் கைதிகள் பலர் நீண்ட காலமாக சிறைகளில் வாடும் நிலையில், அரசியல்வாதிகளுக்கு மட்டும் சிறைச்சாலை மருத்துவமனைகளில் சொகுசு வசதிகள் கிடைப்பதாகப் பொதுமக்கள் தரப்பில் விமர்சனங்களும் எழுந்துள்ளன. எதிர்வரும் நாட்களில் நீதிமன்ற விசாரணை மீண்டும் நடைபெறவுள்ள நிலையில், டக்ளஸ் தேவானந்தா மீதான பிணை கோரிக்கை மற்றும் வழக்கின் போக்கு எத்திசையில் செல்லும் என்பதை அரசியல் அவதானிகள் உற்று நோக்கி வருகின்றனர்.


Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation


Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை


Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# புதிய அரசியலமைப்பு உருவாக்கமும் மாகாண சபைக்கான தேர்தலும் காணாமலாக்கப்படும் தீர்வுகள்!

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி 13ம் திருத்தத்தின் ஊடாக மாகாண சபை முறைமையை உருவாக்கிய இந்தியா இது விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடக்குமாயின் இவர்களுடன் தமிழர் தரப்பு பேச்சு நடத்துவதால் என்ன பயன்?

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வரையினானே என்று ஒவ்வோர் ஆண்டு நிறைவிலும், புத்தாண்டு பிறப்பிலும் நாம் கூறுவது வழமை. அரசியல் கருத்தாடல்கள், பத்தி எழுத்தாளர்கள் மறவாது இதனைச் சுட்டி விமர்சிப்பது



ஆண்டாண்டு தோறும் இடம் பெறும். இதனை ஒரு முதுமொழியென்றும் கூறுவதுண்டு. பவுணந்தி முனிவர் கூறிய இந்த வாக்கியத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டால் வாழ்வில் எதனைத் தவிர்ப்பது, எது பொருந்திப் போகாதது, எதனை மேம்படுத்தி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நியாயத்தை தெரிந்து கொள்ளலாம்.

இதில் முக்கியமானது அரசியல். அரசியலை ஆங்கிலத்தில் பொலிரிக்ஸ் என்பர். இது பொலிறிக்ஸ் என்ற பெயரிலிருந்து பெயர்ந்ததாகக் கூறுவர். பொலி என்றால் பல என்றும் றிக்ஸ் என்றால் தநதிரம், வஞ்சகம் என்றும் அகராதி அர்த்தம் சொல்கிறது.

ஆக ஏமாற்றுத்தனம், தந்திரப் போக்கு என்பவைகள் பொலிறிக்ஸின் ஆதாரங்கள் என்று கொள்ளப்படுகிறது. இதனை தங்கள் வாழ்வாகக் கொள்ளும் அரசியல்வாதிகள் யார் என்பதை இதனூடாக அறிந்து கொள்ளலாம். அரசியலும், அரசியல்வாதிகளும் பொதுவாழ்வில் பிரிக்க முடியாதவர்கள். இவர்களைப் புரிந்து கொண்டும், தெரிந்து கொண்டும் மக்கள் வாழப் பழக வேண்டுமென்பதை, நம்ப நட நம்பி நடவாதே எனக் கொள்ளலாம்.

புதுவருடத்தில் எதிர்பார்ப்பவைகளை எழுத முனையும்போது ஒன்றே ஒன்று முதலில் வரும். அது கடந்தாண்டின் கடைசி வாரத்தில் அல்லது இந்த ஆண்டின் முதல்வாரத்தில் எழுதப்பட்ட விடயமாக இது இருக்கும். கடந்த வருட கடைசியில் இப்பத்தியை எழுதும் போது அநுர குமர திஸ்ஸநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற முதல் நூறு நாட்களின் மீள் பார்வையாக இருந்தது. ஆட்சித் தலைவர் ஒருவரின் ஆளுமையைத் தரிசிப்பதற்கு அவரது பதவிக்கால முதல் நூறு நாட்கள் போதாது. இருப்பினும், அவரது பாதை எதை நோக்கியதாக உள்ளதென்பதை ஓரளவு கண்டுகொள்ள இக்காலம் பயன்பட்டது.

இவரது தேர்தல் கால மகுட வாசகமாக ஊழல் ஒழிப்பும், வறுமை ஒழிப்பும் அமைந்திருந்தன. இவரது தேசிய கொள்கையாக அனைவரும் ஏற்றுக்கொள்ளும் புதிய அரசியல் அமைப்பு, விரைவான மாகாண சபைத் தேர்தல் என்பவை இடம்பெற்றன. முன்னைய இரண்டும் நாடு முழுவதுக்குமானதாகவும், பின்னைய இரண்டும் தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வழிகளாகவும் தோற்றம் காட்டின.

முன்னைய ஆட்சிக் காலங்களில், முக்கியமாக ராஜபக்ச குடும்ப ஆட்சியின் போது உச்சத்தைத் தொட்ட ஊழலை ஒழிப்பதும், ஊழல்வாதிகளை அடையாளம் காண்பதுமாகக் காட்டி சட்டத்தின் முன் நிறுத்துவதே அநுர குமரவின் தலையாய செயற்பாடாக நம்பிக்கை தரப்பட்டது. ஊழல்வாதிகளால் முடக்கப்பட்ட கோடானுகோடி பணம் நாட்டுக்கு கொண்டு வரப்படும் எனவும் மேடைகளில் கூவிக்கூவி சொல்லப்பட்டது.

கடந்த பதினைந்து மாத ஆட்சியில் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக காட்சி ஏற்படுத்தப்பட்டது. முன்னைய ஆட்சிக் காலங்களில் ஊழல், மோசடி, லஞ்சம் தொடர்பாக பலர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள். ஆனால் எவர் மீதும் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படவில்லை.

வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்ட பணத்தில் ஒரு ரூபா கூட இன்னமும் மீட்கப்படவில்லை. இது தொடர்பாக எவர்மீதும் குற்றப் பத்திரிகையும் தாக்கலாகவில்லை. கொழும்பு சொகுசு வாழ்க்கையிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் சொந்த ஊரான அம்பாந்தோட்டைக்கு தமது மூட்டை முடிச்சுகளுடன் சென்ற மகிந்த ராஜபக்ச நோயாளி என்ற பெயரில் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொழும்பு திரும்பி இப்போது கொழும்பில் குடியேறியுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மகன் நாமல் ராஜபக்சவின் எதிர்கால அரசியலுக்கு இது தேவையாக உள்ளது. அதே சமயம், உகண்டாவில் பதுக்கப்பட்டதாக தேர்தல் காலங்களில் கூறிய பணத்தை மீட்டு வாருங்கள் என ஆட்சித் தரப்பைப் பார்த்து நாமல் நையாண்டிச் சவால் விடும் நிலைமை இன்று உருவாகியுள்ளது.

அதேசமயம் அரசாங்க தரப்பிலும் பலர் மீது பல்வகையான குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சியினர் ஆதாரங்களோடும், அது இன்றியும் சுமத்தி வருகின்றனர். அநுரகுமர அரசின் முதலாவது சபாநாயகரான அசோக ரண்வெல தேர்தல் காலத்தில் தமது கலாநிதி பட்டங்கள் பற்றி கூறியதை நிரூபிக்க முடியாததால் பதவி துறக்க நேர்ந்தது. வருமானத்துக்கு மேலதிகமாக சொத்துச் சேர்த்ததாக வணிகத்துறை அமைச்சர் வசந்த சமரசிங்க மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு பிரதியமைச்சர் அநுர ஜெயசேகர போர்க்காலக் குற்றங்களிலும், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலிலும் சம்பந்தப்பட்டதாக எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்துள்ளன. எரிசக்தி அமைச்சர் குமர ஜெயக்கொடி முன்னர் உரக்கூட்டுத்தாபன தலைவராக இருந்த போது அரசாங்கத்துக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. மூத்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க மீதும் எதிரணியினர் நாடாளுமன்றத்தில் குற்றங்களை முன்வைத்துள்ளனர்.

இவைகள் எதற்கும் ஆட்சித் தரப்பிலிருந்து பதிலளிக்கப்படவில்லை. நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இவைகளை ஜனாதிபதி அநுரகுமர கண்டுகொள்ளவும் இல்லை.

மிக முக்கியமானதாக அறிவிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு பற்ற நம்பகமான பதில் அரச தரப்பில் காணப்படவில்லை. அடுத்த மூன்று ஆண்டுகளின் பின்னரே புதிய அரசியலமைப்பு பற்றி நடவடிக்கை எடுக்கப்படுமென்று தேசிய மக்கள் சக்தியின் தாய்க் கட்சியான ஜே.வி.பி. இந்த வருட முற்பகுதியில் தெரிவித்திருந்தது. அப்படியானால் அந்த அறிவிப்பு வரவே இன்னும் இரண்டு வாரங்கள் காத்திருக்க வேண்டும்.

புதிய அரசமைப்பு உருவாக்கும் விடயத்தில் தமிழரசு கட்சி உட்பட அனேகமான எதிர்கட்சிகளும் குரலளவில் முனைப்புக் காட்டுகின்றன. ஆனால் இவர்களால் எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாதுள்ளது. புதிய அரசியலமைப்பை உருவாக்க அநுர அரசுக்கு வரலாற்று வாய்ப்பு கிடைத்துள்ளது என்றும், மூன்றிலிரண்டு பெரும்பான்மை இதற்கு ஏற்றதாக உள்ளது என்றும் சர்வதேச சிறுபான்மையினர் குழு வலியுறுத்தியுள்ளதாக இதனை எழுதும்போது ஒரு செய்தி வந்துள்ளது. வரவேற்க வேண்டிய அறிக்கை இது. ஆனால், யார் காதில் விழப்போகிறது?

1972ம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோதபாய ஆகிய அனைவருக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்தது. அநுர குமர மட்டும்தான் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் நாடாளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றியதாக சொல்ல முடியாது.

சிங்களத் தரப்பில் துணிச்சல் இருந்திருந்தால் 1972, 1978 ஆண்டுகளில் புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டபோது இதனைச் செய்திருக்க முடியும். ஆனால், எல்லோருமே சிங்களத் தலைமைகளாகவும், சிங்களவர்களே ஆளும் இனமாகவும் இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் ஆட்சி புரிந்ததால் இனப்பிரச்சனைக்கு தீர்வு இல்லாததாகவே போய் விட்டது.

இறுதியாக, மாகாண சபைத் தேர்தலை பார்க்கலாம். இத்தேர்தலுக்கு நிதி ஒதுக்கிவிட்டு பின்னர் நிதி இல்லையென்று காரணம் கூறி தேர்தலை நடத்தாது விட்டவர் ரணில் விக்கிரமசிங்க. இப்போதைய ஆட்சியாளர்களுக்கும் நல்லதொரு வசதியான உதாரணம் கிடைத்துள்ளது. நாட்டை மீழெழுப்புவதற்கு மட்டுமே முக்கியத்துவம் என்று கூறி தேர்தலை கால வரையறையின்ற ஒத்தி வைக்கலாம்.

தேர்தல் நிச்சயம் நடைபெறுமென்று ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் கிளிப்பிள்ளை போல சொல்லி வருகிறார்கள். 2026ல் இது நிச்சயம் நடைபெறுமென சில மாதங்களுக்கு முன்னர் சொல்லப்பட்டது..

டித்வாபுயல் பேரிடரிலிருந்து நாட்டை மீழெழுப்ப வேண்டுமெனும் முக்கியத்துவம் இன்று முதன்மை பெற்றுள்ளது. இப்போதைக்கு மாகாண சபை தேர்தல் நடத்த முடியாதென்று கூறுவதற்கு ஆட்சித் தரப்புக்கு இது ஒரு நல்வாய்ப்பு. மக்கள் வாழ்வை புனரமைக்க சர்வதேசம் வழங்கும் நிதியுதவியை தேர்தல் நடத்துவதற்கு பயன்படுத்த முடியாதென ஒரேயடியாக தள்ளி விடவும் ஆட்சியினர் முன்வரலாம்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை தங்கள் இஷ்டப்படி முடிவு செய்து, அதனடிப்படையில் 13ம் திருத்தத்தை ஏற்படுத்தி, அதனூடாக மாகாண சபை முறைமையை அறிமுகம் செய்த இந்தியா இப்போது அதனை ஓரம் தள்ளிவிட்டதுபோல செயற்படுகிறது. தமிழர் தரப்பினரை சந்திக்கும்போது மட்டும் இது விடயத்தில் தாம் அக்கறை உள்ளவர்கள்போல காட்டிக் கொள்ளப்படுகிறது.

அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் தமிழரசு கட்சியும் தமிழ் தேசிய கூட்டணியும் சந்தித்த போது இவ்விடயத்தில் இலங்கையை இந்தியா வலியுறுத்த வேண்டுமென வாய் மூலமும் எழுத்து மூலமும் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், அமைச்சர் ஜெய்சங்கர் சரியான பதில் எதுவுமே கூறாது மழுப்பி விட்டார்.

2024ம் ஆண்டில் இதேபோன்ற ஒரு சந்திப்பில் தமிழர் பிரதிநிதிகளைப் பார்த்து இல்லாததை கேட்பதைவிட இருப்பவைகளை முழுமையாக பயன்படுத்துங்கள் என்று புரியும் படியான ஆலோசனையைக் கொடுத்தவர் இதே ஜெய்சங்கர்.

ஜனாதிபதி அநுரவைச் சந்தித்த இவர் இந்தியா இருக்க பயமேன் என்று கூறி (22ம் பக்கம் பார்க்க)

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. "தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

27 டிசம்பர் 2025 முதல் 02 ஜனவரி 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 27 டிசம்பர் 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கம்மா சதாசிவம்

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஏழாவது ஆண்டு நாள் நினைவு நாள் 30 டிசம்பர் 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்ட வனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பார்வதி சதாசிவம்

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பார்வதி சதாசிவம் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 31 டிசம்பர் 2025 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பார்வதி சதாசிவம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வசந்தா தவரத்தினம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி, கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது ஐந்தாவது ஆண்டு நாள் நினைவு நாள் 30 டிசம்பர் 2025. செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 48வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னப்பு நல்லையா

யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்கு ஊரெழுவைச் சேர்ந்த அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களது 48வது ஆண்டு நினைவு நாள் 05 ஜனவரி 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 34வது ஆண்டு நினைவஞ்சலி




### திரு சுப்பர் பொன்னுத்துரை
### திருமதி நாகமுத்து பொன்னுத்துரை

நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களது 34வது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2026 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல்
### திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 01 ஜனவரி 2026 வியாழக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். இணையர்கள் இருவரையும் நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



27 டிசம்பர் 2025 சனிக்கிழமை உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரிராஜசிங்கம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




27 டிசம்பர் 2025 சனிக்கிழமை கனடாவில் வாழும் திரு ஜெகதீஸ்வரன் விஜயரூபன் அவர்கள் சகல ஜஸ்வரியங்களும் கிடைக்கப் பெற்று நல்வாழ்வு வாழ ஆசீர்வாதம் வேண்டிய அன்பளிப்பாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




28 டிசம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை கனாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் ஞானகுமாரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் முகுந்தன் நந்தகுமாரின் 37வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் முகுந்தன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



28 டிசம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சற்குணநாதன் சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் கிசோர் சற்குணநாதனின் 14வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கிசோர் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



30 டிசம்பர் 2025 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




30 டிசம்பர் 2025 செவ்வாய்க்கிழமை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி, கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி வசந்தா தவரட்னம் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



31 டிசம்பர் 2025 புதன்கிழமை கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பார்வதி சதாசிவம் அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




01 ஜனவரி 2026 வியாழக்கிழமை நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களது 34வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் இணையர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



01 ஜனவரி 2026 வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் இணையர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



01 ஜனவரி 20226 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




01 ஜனவரி 20226 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்

## 37வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் முகுந்தன் நந்தகுமார்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி நந்தகுமார் ஞானகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகுந்தன் நந்தகுமார் அவர்களின் 37வது பிறந்த நன்நாள் 28 டிசம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் செல்வன் முகுந்தன் நந்தகுமார் தனது பெற்றோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை 37 காணும் செல்வன் முகுந்தன் நோய் நொடியின்றி அனைத்து வளங்களும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து வாழ்த்துகின்றார்கள்.



01 ஜனவரி 20226 வியாழக்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வாழும் திரு விஜயரத்தினம் சாந்தகுமார் குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்



01 ஜனவரி 20226 வியாழக்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வாழும் திரு சிங்கநாயகம் குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்

# டக்ளஸ் தேவானந்தா:- விடுதலைப் போராளியாக இருந்து துணை இராணுவக் குழுவாக மாறிய அரசியல் எழுச்சி - சரிவு - கைது!



இலங்கைத் தமிழ்த் தேசிய அரசியலில் ஆயுதப் போராட்ட காலத்திலிருந்து அரச ஆதரவுள்ள துணை இராணுவ அரசியல் வரை பயணித்தவர்களில், டக்ளஸ் தேவானந்தா தனித்துவமான ஒரு இடத்தைப் பிடித்தவர்.

கொழும்பு பத்திரிகை ஒன்றில் மூத்த ஊடகவியலாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் எழுதிய நீண்ட கட்டுரை டக்ளசின் அரசியல் பயணத்தை வரலாற்றுச் சாட்சிகளோடு மீள்பார்க்கிறது. இன்று அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் பயணம் ஒரு முக்கியமான அரசியல் கட்டத்தை எட்டியுள்ளது.

1970—80களில் இலங்கைத் தமிழர் அரசியல் அமைதிப் போராட்டத்திலிருந்து ஆயுதப் போராட்டமாக மாறிய காலத்தில் ஆயிரக்கணக்கான இளம் தமிழர்கள் போலவே டக்ளஸ் தேவானந்தாவும் இந்தியாவை நோக்கிப் பயணித்தார். தமிழகத்தில் அமைந்த பயிற்சி முகாம்கள், அரசியல் விவாதங்கள், இராணுவ ஒழுங்கமைப்புகள் இவை அனைத்தும் அவரது ஆரம்ப அரசியல் உருவாக்கத்திற்கு அடித்தளமாக அமைந்தன.

அந்தச் சூழலில் அவர் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்துடன் இணைந்து செயற்பட்டார். இந்திய அரசின் நேரடி மறைமுக ஆதரவு, குறிப்பாக இந்திய உளவுத் துறையின் மேற்பார்வை, அந்தக் கால ஆயுத இயக்கங்களின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியது. இந்திய மண்ணில் கிடைத்த அந்த அரசியல் இராணுவ அனுபவமே, டக்ளஸ் தேவானந்தாவின் எதிர்கால அரசியல் திசையை தீர்மானித்தது.

ஆயுத இயக்கங்களுக்குள் ஏற்பட்ட உள்பிளவுகள், கருத்து முரண்பாடுகள், அதிகாரப் போட்டிகள் ஆகியவை, ஒருங்கிணைந்த விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தின. ஈ.பி.ஆர்.எல்.எப் -இற்குள் ஏற்பட்ட இந்த முரண்பாடுகள், டக்ளஸ் தேவானந்தாவை தனி பாதையைத் தேர்வு செய்ய வைத்தன.

அதன் விளைவாக உருவானதே ஈ.பி.டி.பி (EPDP). ஆரம்பத்தில் ஒரு ஆயுத அரசியல் அமைப்பாக இருந்த இது காலப்போக்கில் தனது அடையாளத்தை மாற்றத் தொடங்கியது.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்குப் பின்னர், இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்த காலம், டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் வாழ்வில் முக்கியமான திருப்பு முனையாக அமைந்தது. இந்திய ஆதரவுடன் இலங்கைக்குத் திரும்பிய அவர், வடக்கில் ஆதிக்கம் செலுத்திய விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஆயுத இயக்கங்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தார்.

இதன் மூலம், ஈ.பி.டி.பி மெதுவாக இலங்கை அரசின் பாதுகாப்புப் படைகளுடன் இணைந்த துணை இராணுவக் குழுவாக மாறியது. இராணுவ பாதுகாப்பு, அரசியல் ஆதரவு, ஆயுத வசதி பண வசதி இவையுடன் வடக்கில் அரசுக்கு ஆதரவான ஒரு சக்தியாக அது செயல்பட்டது.

அன்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் கீழ் பிரதி பாதுராகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்னவை அந்தரங்கமான பேச்சுவார்த்தை ஒன்றுக்காக தேவானந்தா சந்தித்தார். அசாதாரணமான ஆற்றல் கொண்டவரான விஜேரத்னவினால் தேவானந்தா கூறியதை மறுக்க முடியவில்லை. தனது புதிய கட்சிக்கு பாதுகாப்பையும் ஆதரவையும் தந்தால் அரசாங்கம் கூறுவதைச் செய்து முழுமையான ஒத்துழைப்பையும் தாராளமான ஆதரவையும் தருவதற்கு தேவானந்தா தயாராக இருந்தார்.

தேவானந்தா அரசாங்கத்துக்கு வழங்க முன் வந்த ஆதரவு அந்த நேரத்தில் ஒரு புதிய திருப்பமாக இருந்தது. ஏனென்றால், பிரதான எதிரிக்கு' நேரடியாக உதவவதற்கு முன் வருவதற்கு அதுவரையில் எந்த தமிழ்த் தீவிரவாத இயக்கமும் இருக்கவில்லை. இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலை புலிகள் இயக்கத்துக்கும் இடையில் சஞ்சலமான ஒரு போர் நிறுத்தம் அந்த வேளையில் நடைமுறையில் இருந்தது. ஆனால் போர் மீண்டும் மூண்டால் அரசாங்கத்துக்கு பயனுடையவராக தன்னை நிரூபிக்க தேவானந்தாவினால் முடியும். தேவானந்தாவின் சேவைகளைப் பெற்றுக் கொள்வது கொழும்புக்கு அனுகூலமானதாக அமையும் என்று நம்பப்பட்டது.

இந்த அரசியல் மாற்றத்தின் விலை மிகக் கடுமையானது. கடத்தல்கள், கொலைகள், அச்சுறுத்தல்கள், தேர்தல் வன்முறைகள் என ஈ.பி.டி.பி மீது தொடர்ச்சியாக பல குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன. சாதாரண தமிழ்மக்களுக்கு இது விடுதலையின் அரசியல் அல்ல. அச்சத்தின் அரசியலாகவே அனுபவப்பட்டது.

இதேவேளை அக்கால கட்டத்தில் போர் தீவிரமடையவே யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அப்பால் உள்ள தீவுகளில் இருந்து விடுதலை புலிகள் விலகிக் கொண்டனர். அது தேவானந்தாவுக்கு வாய்ப்பாகிப் போனது. அவரும் அவரது பொடியன்களும் கடல் வழியாக உணவையும் ஏனைய பொருட்களையும் கொண்டு வந்து வடக்கில் பல வருடங்களுக்கு பிறகு கால் பதித்தனர். தீவுப்பகுதிகளை ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் ஈ.பி.டி.பி.யின் கண்காணிப்பில் ஒப்படைத்தது. இதனால் ஊர்காவற்துறை தொகுதியின் கீழ் வருகின்ற பகுதிகளில் ஈ.பி.டி.பி.யினால் வலிமையான பிரசன்னத்தை நிறுவக்கூடியதாக இருந்தது.

அதற்கு பிறகு தேவானந்தாவின் நிலை மேம்படத் தொடங்கியது. தீவுப் பகுதிகள் மீது தனது இயக்கம் கொண்டிருக்கும் கட்டுப்பாட்டைப் பயன்படுத்தி அவர் கொழும்புக்கு கடலுணவுகளை அனுப்பத் தொடங்கினார். பெரும் வருவாயைத் தரக்கூடியதாக கருவாடு வர்த்தகத்தில் ஈ.பி.டி.பி. ஈடுபட்டது. தீவுப்பகுதிகளில் இருந்து வெளிப்பகுதிகளுக்கு பொருட்களை ஏற்றி அனுப்புவதன் மூலமும் வெளியில் இருந்து தீவுப் பகுதிகளுக்கு பொருட்களை கொண்டு வருவதன் மூலமும் பெரும் வருவாய் பெறப்பட்டது.

அதே நேரத்தில், டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்ற அரசியலில் நுழைந்து, அமைச்சுப் பதவிகளையும் அரச அதிகாரத்தையும் பெற்றார். ஒரு காலத்தில் ஆயுதம் ஏந்திய போராளி, பின்னர் அரசின் ஒரு அங்கமாக மாறிய இந்த மாற்றம், தமிழ்த் தேசிய அரசியலில் ஆழ்ந்த முரண்களை உருவாக்கியது.

1994 தொடக்கம் 2024 வரை 30 வருடங்களாக தேவானந்தா தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்தார். 2000 -- 2002, 2004 -- 2010, 2010 -- 2015, 2019 -- 2024 என்று 18 வருடங்களாக தேவானந்தா கபினெட் அமைச்சராக பதவி வகித்தார். அத்தகைய ஒரு சாதனையை வேறு எந்தவொரு இலங்கைத் தமிழ் அரசியல்வாதியும் சாதித்ததில்லை.

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி எதிர்பாராத வகையில் 2024 ஆம் ஆண்டில் வடக்கில் பெற்ற வெற்றி தேவானந்தாவுக்கு பெரும் அரசியல் பாதகமாகிப் போனது. அவரால் பாராளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை. இப்போது அவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். மஹர சிறைச்சாலையின் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தேவானந்தாவுக்கு அடுத்து என்ன நேரப் போகிறது?

இந்த நீண்ட அரசியல் பயணத்தின் இறுதிக் கட்டமாக, இன்று டக்ளஸ் தேவானந்தா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தனிப்பட்ட துப்பாக்கியை பாதாள உலகக் குழுவினரிடம் வழங்கியதாகக் கூறப்படும் கடுமையான குற்றச்சாட்டின் கீழ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் அவர் கைது செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரு காலத்தில் அரசின் பாதுகாப்புடன் செயல்பட்டவர், இன்று அதே அரசின் சட்டப் பிடியில் சிக்கியிருப்பது, இலங்கை அரசியலின் பரிதாபமான இரு முகத் தன்மையைக் காட்டுகிறது. ஆயுத அரசியல், துணை இராணுவப் பின்னணி, அதிகார அரசியல் இவை அனைத்தும் இறுதியில் சட்டத்தின் முன் கேள்விக்குள்ளாகும் என்பதை இந்த கைது சுட்டிக்காட்டுகிறது.

இந்திய மண்ணில் தொடங்கிய போராளி வாழ்க்கை துணை இராணுவ அரசியலாக மாறி, இன்று சிறைச் சாலையில் முடங்கியிருப்பது, அதிகாரம் நிரந்தரமல்ல. வரலாறு ஒருநாள் கணக்குக் கேட்கும் என்பதற்கான கடும் நினைவு ஊட்டலாகும்.

(நன்றி:- டி.பி.எஸ்.ஜெயராஜ் அவர்களது கட்டுரையில் இருந்து)


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# சிங்கள - தமிழ் நல்லிணக்கம் தர்மமும் மனித நேயமும் சந்திக்கும் பாதை!

இலங்கை கடந்த எழுபது ஆண்டுகளாக சந்தித்து வரும் அரசியல், சமூக, பொருளாதார வீழ்ச்சிக்கு பல காரணங்கள் சொல்லப்படலாம். ஆனால் ஒரு உண்மையை மறைக்க முடியாது:

இனவெறியும் மதவெறியும் அரசியலாக்கப்பட்டதே இந்த நாட்டின் நீண்டகால துன்பத்தின் மூல காரணம்.

இலங்கைத்தீவின் வரலாறு சிங்களருக்கும் தமிழருக்கும் பகைமையின் வரலாறாக அல்ல. பகிர்ந்த வாழ்வின் பகிர்ந்த பண்பாட்டின் வரலாறாகவே தொடங்கியது. ஆனால் அதிகார அரசியல் அந்த வரலாற்றைத் திரித்து, ஒருவரை ஒருவர் சந்தேகிக்கவும், வெறுக்கவும் கற்றுக் கொடுத்தது.

இன்றைய நிகழ்வுகள், இலங்கை எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

வடக்கில் நயினாதீவு நாகதீப விகாராதிபதி அவர்கள், தமிழ்மக்களது காணிகள் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டு தையிட்டி பகுதியில் விகாரை கட்டப்பட்டதை எதிர்த்து குரல் கொடுக்கிறார்.

அவர் பேசுவது இனத்தின் மொழி அல்ல. நீதியின் மொழி.

அவர் முன் வைப்பது அரசியல் கோரிக்கை அல்ல. தர்மத்தின் அடிப்படைச் சத்தியம். அநீதி எவருக்கு நடந்தாலும் அது தவறு.

அதே நேரத்தில் கிழக்கில் அம்பினுப்பிட்டய சுமணதேரர் வடக்கில் உள்ள தமிழர்களை வெட்டிக் கொலை செய்வேன் என்று பேசும் அளவிற்கு வன்முறையைப் போற்றுகிறார். இன்று அவர்





நீதிமன்ற விசாரணையை எதிர்கொள்கிறார்.

அவருக்கு எதிராக வழக்கு தொடர்ந்திருப்பது ஒரு சிங்களச் சட்டத்தரணி என்பது, இந்த நாட்டில் இன்னும் மனித நேயத்தின் விளக்குகள் அணையவில்லை என்பதற்கான சான்று.

இந்த இரு சம்பவங்களும் ஒன்றைத் தெளிவாகச் சொல்கின்றன இது சிங்களம் எதிர் தமிழ் என்ற போர் அல்ல. இது தர்மம் எதிர் தர்மமின்மை. புத்தர் போதித்த தர்மம் எளிமையானது: அஹிம்சை, கருணை, சமநிலை. சபே பாணா பியாரா – எல்லா உயிர்களும் தமக்குப் பிரியமானவை. ஒரு இனத்தைக் கொல்லப் பேசும் சொல், புத்தரின் போதனையைச் சுமக்க முடியாது.

அதேபோல் தமிழ் மரபும் அறம், மனித மரியாதை, சமநீதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதே. திருக்குறளும், புத்த தர்மமும், முரண்பாடுகளல்ல. ஒரே மனிதநேயத்தின் இரு மொழிகள்.

இலங்கையின் சீரழிவு பௌத்தத்தினால் அல்ல. தமிழர்களின் உரிமைப் போராட்டத்தினாலுமல்ல. இரண்டையும் எதிரிகளாக மாற்றிய இனவெறி அரசியலினால் தான். இந்த உண்மையை உணராமல், நல்லி ணக்கம் சாத்தியமில்லை.

இன்றைய தேவை, சிங்களரும் தமிழரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவது அல்ல. இருவரும் சேர்ந்து இன வெறியை நிராகரிப்பதே.

தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்: அனைத்து சிங்களரும் எதிரிகள் அல்ல.

நீதிக்காக குரல் கொடுக்கும் பௌத்த துறவிகளும், சட்டத்தரணிகளும், சமூக செயற்பாட்டாளர்களும் இந்த நாட்டில் உள்ளனர். சிங்களர்கள் புரிந்து கொள்ள வேண்டும் தமிழர்களின் கோரிக்கை பிரிவினை அல்ல. மரியாதையுடனான சமவாழ்வு தான். நல்லிணக்கம் அரசியல் ஒப்பந்தங்களால் மட்டும் உருவாகாது. அது அநீதியை அநீதியாக ஏற்கும் தைரியத்தாலும், தவறை திருத்தும் மனப்பக்குவத்தாலும், மற்றவரின் வலியைத் தன் வலியாக உணரும் மனிதநேயத்தாலும் மட்டுமே உருவாகும்.

நயினாதீவு விகாராதிபதியின் குரலும்,. சுமணதேரருக்கு எதிராக சட்டத்தின் வழியில் நிற்கும் சிங்களச் சட்டத்தரணியின் செயலும் இலங்கைக்கு ஒரு செய்தியைச் சொல்கின்றன:

இந்த நாடு இன்னும் காப்பாற்றப்படலாம். தர்மமும் மனிதநேயமும் வழிகாட்டினால். சிங்கள தமிழ் நல்லிணக்கம் ஒரு தரப்பின் வெற்றியல்ல. இது இலங்கையின் மீட்பு.

அந்த மீட்பு வெறுப்பின் அரசியலை மறுத்து அறத்தின் அரசியலைத் தேர்வு செய்யும் நாளில் தான் ஆரம்பமாகும்.

**- நவா**

# இஸ்ரேல் சோமாலிலாந்து அங்கீகார அரசியல்!

ஆப்பிரிக்காவின் கொம்புப் பகுதி (Horn of Africa) மீண்டும் சர்வதேச அரசியல் கவனத்தின் மையமாக மாறியுள்ளது. இதற்குக் காரணமாக இஸ்ரேல் சோமாலிலாந்தை அங்கீகரிக்க முனைவதாக வெளியான தகவல்களும், அதற்கு எதிர் வினையாக ஐரோப்பிய ஒன்றியம் சோமாலியாவின் பிராந்திய ஒருமைப்பாட்டை உறுதியாக ஆதரிப்பதாக அறிவித்ததும் தான்.

இந்தப் பரபரப்பின் பின்னணியில் இரு தேசங்களின் சோமாலிலாந்தும் சோமாலியாவும் தனித்த வரலாறுகள் மட்டுமல்ல, மத்திய கிழக்கு, செம்மரக்கடல், ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளை இணைக்கும் பெரும் புவியியல் அரசியலும் அடங்கியுள்ளது.

சோமாலிலாந்து, 1960ஆம் ஆண்டு வரை பிரித்தானிய பாதுகாப்புப் பிரதேசமாக இருந்தது. அதே ஆண்டில் இத்தாலிய சோமாலியாவுடன் இணைந்து சோமாலியா குடியரசு உருவானது.

ஆனால் மொகதீவை மையமாகக் கொண்ட அரசியல் ஆதிக்கம், இன சாதிப் பாகுபாடுகள், மற்றும் சியாத் பரே ஆட்சியின் அடக்குமுறை காரணமாக, வடக்கு பகுதி மக்களிடம் ஆழ்ந்த விரக்தி ஏற்பட்டது.

1991ஆம் ஆண்டு சோமாலியா முழுவதும் உள்நாட்டுப் போரில் மூழ்கிய போது சோமாலிலாந்து தனி நாடாகத் தன்னை அறிவித்தது. அதன்பின் தனி அரசாங்கம் அரசியல் சட்டம் தேர்தல்கள் ஒழுங்கான பாதுகாப்பு அமைப்பு என அனைத்தையும் கட்டியெழுப்பிய போதிலும், ஐ.நா. உட்பட எந்த முக்கிய சர்வதேச அமைப்பாலும் இதுவரை அங்கீகரிக்கப்படவில்லை.

இஸ்ரேல் சோமாலிலாந்தை நோக்கிப் பார்ப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன: செம்மரக்கடல் ஏடன் வளைகுடா உலக வர்த்தகத்துக்கும் பாதுகாப்புக்கும் மிக முக்கியமான கடற்பாதை.




ஈரான் ஹஜீத்தி தாக்குதல் அச்சுறுத்தல்கள் யெமனில் இருந்து வரும் பாதுகாப்பு சவால்களை கண்காணிக்க சோமாலிலாந்தின் புவியியல் இடம் முக்கியம். ஆப்பிரிக்காவில் புதிய கூட்டாளிகள் அரபு நாடுகளின் எதிர்ப்பை சமநிலைப் படுத்த, இஸ்ரேல் ஆப்பிரிக்க நாடுகளு டன் உறவுகளை வலுப்படுத்தி வரு கிறது. இதனால், சோமாலிலாந்தை அங்கீகரிப்பது இஸ்ரேலுக்கான ஒரு மூலோபாய நகர்வாகக் கருதப்படுகிறது.

இந்தச் சூழலில், ஐரோப்பிய ஒன்றியம் தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளது சோமாலியாவின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் அரசியல் ஒன்றுமை மாற்றமற்றது. ஐரோப்பிய ஒன்றியம் சோமாலிய அரசாங்கத்திற்கு மனிதாபிமான உதவி பாதுகாப்புப் பயிற்சி அரசியல் மறுசீரமைப்பு ஆதரவு என பல்வேறு வழிகளில் நீண்ட காலமாக துணை நிற்கிறது. சோமாலிலாந்து அங்கீகாரம் பெற்றால், அது ஆப்பிரிக்காவில் புதிய பிரிவினைவாத அலைகளை உருவாக்கும் என்ற அச்சமே ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய கவலையாக உள்ளது.

மொகதீ அரசு, சோமாலிலாந்து தொடர்பான எந்தவொரு வெளிநாட்டு அங்கீகார முயற்சியையும் அரசியல் தலையீட்டையும் தேசிய இறையாண்மைக்கு எதிரான செயல் என்று கடுமையாக விமர்சிக்கிறது.

இஸ்ரேல் உண்மையில் அங்கீகாரம் வழங்கினால், அரபு உலகம், ஆப்பிரிக்க ஒன்றியம், ஐ.நா. மேடைகளில் அது பெரும் தூதரக மோதலை உருவாக்கும்.

இஸ்ரேல் சோமாலிலாந்து விவகாரம் ஒரு சிறிய இருதரப்பு அரசியல் முடிவல்ல. அது ஆப்பிரிக்காவின் எதிர்கால எல்லைகள் மத்திய கிழக்கின் பாதுகாப்பு அரசியல் சர்வதேச சட்டத்தின் ஒருமைப்பாடு என பல பரிமாணங்களில் தாக்கம் செலுத்தக் கூடியது.

அங்கீகாரம் கிடைக்காத ஒரு நிலையான நாடாக தொடருமா சோமாலிலாந்து? அல்லது, சர்வதேச அரசியல் சமநிலையைப் பிளக்கும் புதிய திருப்பமா இது? இந்தக் கேள்விகளுக்கான விடை வரவிருக்கும் நாட்களில் உலக அரசியலை புதிய திசைக்கு இட்டுச் செல்லலாம்.

# சிறப்பாக நடைபெற்ற இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் (கனடா) 13வது ஆண்டு விழா!





















கனடாவில் இயங்கும் இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் தனது 13வது ஆண்டு விழாவை மிகச் சிறப்பாக 27 டிசம்பர் 2025 சனிக்கிழமை நடத்தி முடித்துள்ளமை, கனடா தமிழ்ச் சமூகத்தின் முதிர்ச்சியையும் பொறுப்புணர்வையும் வெளிப்படுத்தும் முக்கியமான தருணமாக அமைந்தது. இது வெறும் ஆண்டு விழா அல்ல. வணிகச் சாதனைகளையும் சமூக அக்கறையையும் ஒன்றிணைத்த ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது.

வர்த்தகத்துறையில் சாதனை படைத்த ஏழு பேருக்கு விருதுகள் வழங்கி கௌரவித்தனர். தனிநபர் வெற்றியை சமூக மதிப்பாக மாற்றும் முயற்சியாக இந்த விருது வழங்கலைப் பார்க்கப்பட வேண்டும். இலாபம் மட்டுமே குறிக்கோளாக இல்லாமல், ஒழுக்கம், சமூக நலம் ஆகியவற்றை மதிப்பீட்டின் அடிப்படை யாக எடுத்துக் கொண்டது சங்கத்தின் பரிணாமத்தை வெளிப்படுத்துகிறது. இவ்வகை கௌரவிப்புகள் இளம் தலைமுறைக்கு வணிகம் சமூகத்திலிருந்து பிரிக்க முடியாதது என்ற தெளிவான செய்தியைக் கூறுகின்றன.

இந்த விழாவின் மையமாக அமைந்தது, மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 10 குடும்பங்களுக்கு வீடு அமைக்கும் திட்டத்தின் பங்களிப்பு. வெறும் வாய் வீச்சு உரையோடு நிற்காமல், திட்டமாகவும் செயல்பாடாகவும் தாயகப் பற்றை முன்னெடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

மேலும் ஏழு வர்த்தகர்கள் அபிமானிகள் அரங்கத்திற்கு நேரில் வந்து இந்தத் திட்டத்திற்கு தமது ஆதரவு தெரிவித்தது சமூக நம்பிக்கையும் கூட்டு பொறுப்பும் இன்னும் உயிருடன் இருப்பதை உறுதிப்படுத்துகிறது. மட்டக்களப்பு மண்ணில் இப்பணி ஆரம்பிப்பதற்கு ஊன்றுகோலாக இருந்தவர் திரு விசு கணபதிப்பிள்ளை அவர்கள். அவர் செய்யும் பணியையும் நாம் இந்நேரத்தில் பாராட்ட வேண்டும்.

இதேவேளை ஈழநாடு பத்திரிகையின் ஊடாக முல்லைத்தீவு பாரதி இல்லத்திற்கு வழங்கப்பட்ட நிதி உதவி, ஊடகமும் சமூகப் பணியும் ஒன்றிணையும் அரிய எடுத்துக் காட்டாகும். போர் பாதிப்புகளால் பின்தங்கிய பகுதிகளை மறக்காமல் கவனத்தில் எடுத்தது, சங்கத்தின் தேசிய உணர்வை மேலும் உறுதிப்படுத்துகிறது.

இந்தச் சாதனைகளுக்கிடையில் சில எதிர் பார்ப்புகளும் முன் வைக்கப்பட வேண்டியவை. வீடமைப்புத் திட்டம் தொடர்ச்சியான கண்காணிப்பு, வெளிப்படைத்தன்மை, பயனாளிகளின் பங்கேற்பு ஆகியவற்று டன் நடைமுறைப்படுத்தப்பட்டால் அதன் தாக்கம் மேலும் ஆழப்படும். அதே போல் தாயகத்தில் கல்வி, தொழில் பயிற்சி, சிறு தொழில் தொடக்க உதவி போன்ற நீடித்த திட்டங்களும் இணைக்கப்பட்டால், வறுமை ஒழிப்பின் வட்டம் விரிவடையும் எனலாம்.

மொத்தத்தில் இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் கனடா தனது 13வது ஆண்டு விழாவினூடாக, வணிக வெற்றியும் தேசியப் பொறுப்பும் ஒரே மேடையில் இணைந்து நிற்க முடியும் என்பதை நிரூபித்துள்ளது. இது பாராட்டுக்குரியதுடன் பின்பற்றத்தக்க முன் மாதிரியும் ஆகும். இந்தப் பாதையில் தொடர்ந்தும் பயணித்து தாயகத்திற்கான அக்கறையை திட்டங்களாக மாற்றும் சங்கமாக இது திகழ வாழ்த்துக்கள்.

விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்கள் வணிகமும் சமூக சேவையும் இணைந்த வாழ்நாள் சாதனையாளராக திரு சுகுமார் கணேசன் அவர்களும் கணக்கியல் துறையில் தொழில்முறை சிறப்புத் திறன் விருதினை திரு வேல். புருசோத்தமன் அவர்களும் இசைத் துறையின் வாழ்நாள் சாதனையாளர் விருதினை மெகா ரியுனஸ் திரு அரவிந்தன் மகேசன் அவர்களும் சிறந்த சமூக சேவையாளர் விருதினை திருமதி ஜோதி பிரபாகரன் அவர்களும் கணக்கியல் நிதித்துறை சிறப்பு சேவை விருதினை திரு சின்னத்துரை மகேந்திரநாதன் அவர்களும் சிறந்த தொழில் முனைவோர் விருதினை திரு பொன்னையா வில்வரத்தினம் அவர்களும் சிறந்த சமூகத் தோழமை விருதினை திரு அருண் குலசிங்கம் அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

அதே போன்று வீட்டுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கும் திரு திருமதி வேல். புருசோத்தமன் இணையர்கள் திரு திருமதி யுகநீதருபன் இணையர்கள் திரு திருமதி கணா இணையர்கள் திரு திருமதி நரேந்தரா இணை யர்கள் திரு திருமதி கிருஷ்ணகோபால் இணையர்கள் திரு திருமதி தனம் இணையர்கள் திரு திருமதி ஜெயம் இணையர்கள் அரங்கத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டனர். சங்கத்தின் வளர்ச்சிக்கு அயராதும் தளராதும் உழைக்கும் தலைவர் சோம.சச்சிதானந்தன் உட்பட அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் நன்றிகள்.

படஉதவி:- ஐயா 4 U

T.K. பரமேஸ்வரன் - ஆசிரியர் ஈழநாடு



# 2025 அநுர அலையில் தொடங்கி மனிதாபிமான அலையில் முடிந்த ஆண்டு

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –





இந்த ஆண்டு பிறந்த போது நாட்டில் அனுர அலை வீசியது. இந்த ஆண்டு முடியும் போது புயலுக்கு பின்னரான ஒரு மனிதாபிமான அலை நிலவுகிறது. இரண்டுமே அலைகள் தான். இரண்டுமே அரசாங்கத்தைப் பலப்படுத்தும் அலைகள் தான்.

அனுர அலை என்பது தமிழ் நோக்கு நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகளை பின்னுக்குத் தள்ளியது. அது நாடாளுமன்றத் தேர்தலில் நிரூபிக்கப்பட்டது. தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த அதீயளவு ஆசனங்கள் தான் அரசாங்கத்துக்கும் கிடைத்தன. யாருக்கு வாக்களிக்கிறோம் என்பது தெரியாமலேயே தமிழ்மக்கள் வாக்களித்திருந்தார்கள். இப்படிப் பார்த்தால் இந்த ஆண்டு தொடங்கும் பொழுது அது தமிழ்த்தேசிய அரசியலுக்குப் பதகமான ஓர் ஆண்டாகத் தான் தொடங்கியது.

அந்தத் தோல்விக்கான காரணங்களைக் கண்டு பிடித்து அவற்றைச் சரி செய்யும் விடயத்தில் தமிழ்த்தேசிய அரசியல் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது? உள்ளூராட்சி சபைகளில் பெற்ற வெற்றிகள் சற்று ஆறுதல் தரக்கூடும். ஆனால் கடந்த வாரம் கரைத்துறைப் பற்று பிரதேச சபையில் என்ன நடந்தது? வடக்கில் அரசாங்கம் முதலாவது உள்ளூராட்சி சபையை கைப்பற்றியிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? சந்தேகத்துக்கிடமின்றி தமிழ் கட்சிகளுக்கு இடையிலான ஐக்கியமின்மை தான் முதலாவது காரணம். அந்த ஐக்கியமின்மையை சரி செய்யத் தேவையான தலைமைத்துவம் தமிழரசுக் கட்சியிடம் இல்லை என்பது தான் இரண்டாவது காரணம்.

சிதறிக் கிடக்கும் தமிழ்த்தேசிய கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு கடந்த ஓராண்டுக்கு மேலான காலப்பகுதியில் அதாவது ஜனாதிபதி தேர்தலுக்குப் பின் மூன்று முயற்சிகள் எடுக்கப்பட்டன. முதலாவது, தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றாக்கும் முயற்சி. தமிழரசுக் கட்சி அதைத் தோற்கடித்தது.

இரண்டாவது, தமிழ்த்தேசியப் பேரவை என்ற பெயரில் கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சி. அதுவும் இப்பொழுது ஏறக்குறைய தோற்கும் நிலைக்கு வந்துவிட்டது.

மூன்றாவது அண்மையில் தமிழரசுக் கட்சியும் டிரிஎன்ஏயும் சந்தித்து மாகாண சபைத் தேர்தல்களை ஒன்றாக எதிர் கொள்வைத்தற்கான பேச்சுவார்த்தை. ஆனால் அந்த ஒற்றுமை முயற்சிகள் எவ்வளவு தூரம் வெற்றி பெறும் என்பதற்கு கரத்துறைப் பற்று பிரதேச சபை ஓர் ஆகப் பிந்திய உதாரணமாக அமையுமா? தேர்தலை நோக்கி உருவாக்கப்படும் கூட்டுக்கள் நிலைத்திருக்காது என்பதைத் தான் கடந்த 16 ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன.

எனவே தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் ஆண்டு தொடங்கும் போது இருந்த அதே கட்சி நிலைமைகள் தான் ஆண்டு முடியும் போதும் காணப்படுகின்றன. மே 18ஐ நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் கிராமம் அமைந்திருக்கும் கரத்துறைப் பற்று பிரதேச சபையைத் தக்க வைக்க முடியாத தமிழ் கட்சிகள் இனி மேல் மாகாண சபைத் தேர்தல் ஒன்று நடந்தால்,அதில் ஒன்றாக நின்று அரசாங்கத்தை எதிர்கொள்ளும் என்று எப்படி நம்புவது?

இந்த ஆண்டு பிறந்த போது ஒரு புறம் அனுர அலையின் விளைவுகளால் தமிழ் தேசிய அரசியல் சேதத்துக்கு உள்ளாகியிருந்தது. அதே சமயம் இன்னொருபுறம் யாரும் எதிர்பாராமல் திறக்கப்பட்ட செம்மணிப் மனித புதை குழியானது தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு புதிய அனைத்துலக வாய்ப்புகளைத் திறந்து விட்டது. மனிதப் புதைகுழி என்பது உணர்வு பூர்வமானது. அது உள்ளூரில் மக்களைத் திரட்ட உதவும். இன்னொரு புறம் பொறுப்புக் கூறும் விடயத்தில் உலக சமூகத்துக்கு எடுத்துக் காட்டத்தக்க ஆகப் பிந்திய உதாரணமாகவும் அது அமைந்தது. அதன் காரணமாகத் தான் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணிக்கு வர வேண்டியிருந்தது. ஆனால் ஐநா செம்மணிக்கூடாக பொறுப்புக்கூறலை அணுகவில்லை என்பதைத் தான் கடைசியாக நிறைவேற்றப்பட்ட ஐநா தீர்மானம் உணர்த்துகின்றது. அதாவது தமிழ் மக்கள் ஐநாவில் பலமாக இல்லை என்பதைத் தான் அது உணர்த்தியது.

உள்நாட்டிலும் தமிழ் மக்கள் பலமாக இல்லை அனைத்துலக அளவிலும் தமிழ் மக்கள் பலமாக இல்லை. ஆண்டு பிறந்த போதும் பலமாக இல்லை. ஆண்டு முடியும் போதும் பலமாக இல்லை. இந்த ஆண்டின் ஆகப்பிந்திய தோல்வி கரைத்துரைப் பற்று பிரதேச சபை. ஒரு புயலுக்கு பின்னரான அரசியலில் தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் ஆதீனத் தலைவரும் உட்பட பல போராட்டக்காரர்கள் மீது பலப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்ட நாளுக்கு அடுத்த நாள் அதிலும் குறிப்பாக, இந்திய வெளியுறவு அமைச்சர் கொழும்புக்கு வருகை தந்த அதே நாளில் வடக்கில் முதலாவது பிரதேச சபையை தமிழ் தேசியத் தரப்பு அரசாங்கத்திடம் இழந்திருக்கிறது.

அரசாங்கம் புயலுக்கு பின் முன்னரை விடப் பலமாகக் காணப்படும் ஓர் அரசியல் சூழலில் தமிழ்த் தேசியத் தரப்புக்கு ஏற்பட்ட தோல்வி இது. ஆண்டின் முடிவில் நாட்டைத் தாக்கிய புயலின் விளைவாக ஒரு மனிதாபிமானச் சூழல் உருவாகியது. அந்த மனிதாபிமானச் சூழலை ஜேவிபி உள்நாட்டில் கிராமங்கள் தோறும் நிவாரண அரசியலாக தொண்டு அரசியலாக திட்டமிட்டுக் கட்டமைத்தது. அதன் மூலம் எதிர்க்கட்சிகளை பெருமளவுக்கு பலவீனப்படுத்தியது. ஆண்டு தொடங்கும் போது பலவீனமாக இருந்த எதிர்க்கட்சிகள் இடையில் நுகேகொட பேரணி மூலம் தலையெடுக்க முயற்சித்தன.

ஆனால் புயல் வந்து அரசாங்கத்தை மீண்டும் பலப்படுத்தி விட்டது.

அண்மையில் உலகளாவிய 120 நிபுணர்கள் அடங்கிய குழு வெளியிட்ட அறிக்கை அதைக் காட்டுகிறது. கடனை மீளக்கட்டமைக்கும் விடயத்தில் அரசாங்கத்துக்குச் சாதகமாக முடிவெடுக்குமாறு அந்த அறிக்கை கேட்டிருக்கிறது. அதாவது புயலுக்கு பின்னரான மனிதாபிமான அலை என்பது உள்நாட்டில் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளை கடந்து போவதற்கு அரசாங்கத்துக்கு உதவுகிறது. அனைத்துலக அளவில் கடனை மீள கட்டமைக்கும் நெருக்கடியிலிருந்து விடுபட உதவியிருக்கிறது.

புயலின் பின்னரான மனிதாபிமானச் சூழலுக்குள் முதலில் இறங்கியது இந்தியா. அதிகமாக உதவியதும் இந்தியா. இயற்கை அழிவு ஒன்றுக்குப் பின்னரான இலங்கைத் தீவின் அரசியலில் இந்தியா தன்னுடைய பிடியை மேலும் பலப்படுத்தியிருக்கிறது. இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்தது அனுர அலை, அது மூன்றில் இரண்டு பெரும்பான்மை. இந்த ஆண்டின் முடிவில் இருப்பது மனிதாபிமான அலை. அது இலங்கை அரசாங்கத்தைப் பலப்படுத்தும் அலை. எதிர்க்கட்சிகளை மேலும் வாயடைக்கச் செய்யும் அலை. இந்த இரண்டு அலைகளுமே எதிர்கட்சிகளை மட்டுமல்ல தமிழ்த்தேசியக் கட்சிகளையும் பலவீனப்படுத்தியிருக்கின்றன.

புயலுக்குப் பின்னரான மனிதாபிமான அலையின் பின்னணியில், தமிழ்த் தேசியப் பேரவை தமிழகத்தை நோக்கிச் சென்றது. தமிழரசுக் கட்சியும் டிரிஎன் ஏயும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தை நோக்கிச் சென்றன. ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியாவை நோக்கிச் சென்ற அதே காலகட்டத்தில், இந்தியா கொழும்பை நோக்கி அதன் வெளிவிவகார அமைச்சரை அனுப்பியது. தமிழ்க் கட்சிகள் இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தபோது ஒருமித்த நிலைப்பாட்டோடு இருக்கவில்லை என்பதைத் தான் பின்னர் வெளிவந்த அறிக்கைகள் காட்டுகின்றன.

அதிலும் குறிப்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கு வந்த அதே நாளில் தான் கரைத்துறைப் பற்று பிரதேச சபையை தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்திடம் பறி கொடுத்தன. எனவே இந்த ஆண்டு முடியும் போது தமிழ் மக்களின் உடனடி பிரச்சினைகளுக்கும் இந்த அரசாங்கம் தீர்வைத் தரவில்லை. உதாரணமாக, அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவில்லை அதற்குப் பதிலாக புதிய சட்டம் வருகிறது.சிங்கள பௌத்த மயமாக்கல், நிலப்பறிப்பு போன்ற பெரும்பாலான உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. திருமலையில் அண்மையில் வைக்கப்பட்ட புத்தர் சிலை வைக்கப்பட்ட இடத்திலேயே இருக்கிறது. அதாவது தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கவில்லை .நிரந்தரப் பிரச்சனைக்கும் பேச்சுவார்த்தைகள் தொடங்கவில்லை.

அதே சமயம் ஆண்டின் இறுதியில் வீசிய புயல் அரசாங்கத்தைப் பலப்படுத்தியிருக்கிறது. அது எதிர்கொள்ளக் கடினமான பிரச்சினைகளையும் வாக்குறுதிகளையும் ஒத்தி வைப்பதற்கு வேண்டிய அவகாசத்தை அரசாங்கத்திற்கு வழங்கியிருக்கிறது.

கடந்த மூன்று தசாப்த காலத்துக்குள் ஏற்பட்ட இரண்டாவது இயற்கைப் பேரிடர் ஒன்றுக்குப் பின்னரான மனிதாபிமான அலை இது. இந்த மனிதாபிமான அலையை ஜேவிபியின் கிராமமட்ட வலையமைப்பு திட்டமிட்டு எதிர்க்கட்சிகளுக்கு எதிராகவும் அரசாங்கத்தை பலப்படுத்தும் நோக்கத்தோடும் கட்டமைத்து வருகிறது. ஜேவிபியின் கிராமமட்ட வலைப்பின்னலுக்கூடாக உள்ளூர் தொண்டர்களும் தன்னார்வலர்களும் இந்த மனிதாபிமான அலையைக் கட்டியெழுப்பினார்கள். இலங்கைக்கான ஐநாவின் வதிவிடப் பிரதிநிதி கூறுவது போல, இது ஓர் அசாதாரணமான சகோதரத்துவ நிலை தான்.

ஆனால் இதே போன்றதொரு மனிதாபிமான அலை 2004ஆம் ஆண்டு சுனாமிப் பேரழிவின் பின்னரும் தோன்றியது. அப்பொழுது யுத்த நிறுத்தம் நிலவியது. எனவே அது நாடு முழுவதுமான ஒரு மனிதாபிமான அலையாகக் காணப்பட்டது. அந்த மனிதாபிமானச் சூழலை அரசியல் தீர்வு ஒன்றுக்கான சாதகமான நிலைமைகளைக் கனியவைப்பதற்கான ஒரு சூழலாக மாற்றலாமா என்று பரிசோதிப்பதற்கு அப்பொழுது சமாதானத்தை முன்னெடுத்த மேற்கு நாடுகள் முயற்சித்தன. அதன் விளைவாக உருவாக்கப்பட்ட மனிதாபிமானக் கட்டமைப்புத ் தான் சுனாமிக்கு பின்னரான பொதுக் கட்டமைப்பாகும். அந்தக் கட்டமைப்பு வெற்றிகரமாக இயங்கி இருந்திருந்தால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு பரிசோதனைக் கட்டமைப்பாக அது அமைந்திருக்கக்கூடும். ஒரு மனிதாபிமானச் சூழலை(22ம் பக்கம் பார்க்க)

# பிரிட்டனில் ஈழத்தமிழ் மகன் பேராசிரியர் நிஷான் கனகராஜாவுக்கு கிடைத்த அதிஉயர் விருது!

பிரித்தானியாவின் கல்வித்துறையில் ஆற்றிய அளப்பரிய சேவைக்காக, இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட ஈழத்தமிழ் கல்வியாளரான பேராசிரியர் நிஷான் கனகராஜா (Professor Nishan Canagarajah) அவர்களுக்கு, பிரித்தானிய மன்னர் சார்லஸ் அவர்களால் உயரிய நைட்ஹூட் (Knighthood) எனப் படும் சேர் பட்டம் அறிவிக்கப் பட்டுள்ளது. 2026ஆம் ஆண்டிற்கான மன்னரின் புத்தாண்டு கௌரவப் பட்டியலில் இவரது பெயர் இடம் பெற்றுள்ளது உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்குப் பெருமை சேர்ப்ப தாக அமைந்துள்ளது.



தற்போது லெய்செஸ்டர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும் தலைவராகவும் பணியாற்றி வரும் பேராசிரியர் நிஷான் கனகராஜா, உயர் கல்வித்துறையில் சமத்துவத்தையும் உள்ளடக்கத்தையும் மேம்படுத்து வதில் ஆற்றிய பங்களிப்பிற்காகவே இந்த உயரிய விருது வழங்கப்பட்டு ள்ளது.

குறிப்பாக, பல்வேறு பின்னணியிலிரு ந்து வரும் மாணவர்களுக்குக் கல்வி யில் வாய்ப்புகளை உருவாக்கித் தந்த தில் இவரது தலைமைத்துவம் முக்கியப் பங்காற்றியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்த நிஷான் கனகராஜா, தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியில் பயின்றார். அங்கு அவர் கல்வியில் சிறந்து விளங் கியது மட்டுமின்றி 1985ஆம் ஆண் டில் கல்லூரியின் மாணவ தலைவராக வும் பொறுப்பு வகித்துள்ளார். இலங்கையில் போர்ச் சூழல் தீவிர மடைந்திருந்த அக்கால கட்டத்தில், தனது பாடசாலைக் கல்வியை முடித்த பின்னர், 1980களின் பிற்பகுதியில் (ஏறத்தாழ 1986ல்) அவர் உயர் கல்விக்காகப் பிரித்தானியா சென்றார். புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்த அவர் அங்கு தனது இளங்கலை மற்றும் முனைவர் பட்டங்களைப் பெற்றார். சிக்னல் ப்ராச ஸிங் துறையில் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிபுணராகத் திக ழும் இவர், பிரிஸ்டல் பல்கலைக் கழகத்தில் நீண்ட காலம் பணியாற்றிய பின்னர் 2019ஆம் ஆண்டு லெய் செஸ்டர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பொறுப்பேற்றார்.

இந்த கௌரவம் குறித்துப் பேராசிரியர் நிஷான் கனகராஜா நெகிழ்ச்சியுடன் குறிப்பிடுகையில், போரினால் பாதிக்க ப்பட்ட ஒரு நிலத்திலிருந்து வந்த ஒரு சிறுவன், இன்று அரச குடும்பத் தால் அங்கீகரிக்கப்படுவது என்பது நம்ப முடியாத ஒரு பயணம். கல்வி யின் மாற்றும் சக்திக்கு இதுவே சாட்சி என்று கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தில் அவர் கற்ற கல்வியும், இங்கிலாந்தில் அவர் அடைந்த உயரமும் புலம்பெயர் தமிழ் இளைஞர்களுக்கு ஒரு மிகப் பெரிய முன்னுதாரணமாகத் திகழ் கிறது.

பேராசிரியர் நிஷான் கனகராஜா அவர்கள் மேன்மேலும் கல்வியில் புகழ்பூத்த கல்விமானாக வளர ஈழநாடு வாசகர்கள் சார்பில் வாழ்த்துகின்றோம்.

# புதிய திருப்புமுனையில் தையிட்டி விகாரை விவகாரம்

தையிட்டி விகாரை விவகாரம்: காணி உரிமை, மத ஒற்றுமை, நியாயம் என்று ஒரு முக்கியமான திருப்பத்தில் உள்ளது. தையிட்டி திஸ்ஸ விகாரை யைச் சுற்றியுள்ள காணிகளை உரிய காணி உரிமையாளர்களுக்கு விடுவிப் பது தொடர்பாக, யாழ்ப்பாணம் மாவ ட்ட அரச அதிபருடன் நடைபெற்ற சந்திப்பில் இணக்கம் காணப்பட்டு ள்ளமை, நீண்ட காலமாக நீடித்து வரும் ஒரு மிக முக்கியமான சமூக அரசியல் மதச் சிக்கலில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க திருப்பமாகும். இந்த இணக்கம், வெறுமனே ஒரு நிர்வாகத் தீர்மானமாக அல்ல. அது நீதியையும் நல்லிணக்கத்தையும் நோக்கி எடுக்கப் பட்ட ஒரு அடையாளமான ஒன்றாகப் பார்க்கப்பட வேண்டும்.

தையிட்டி விகாரை தொடர்பான பிரச்சினை, சட்டவிரோதமாகக் காணி கள் கைப்பற்றப்பட்டதாகவும், இராணு வத்தின் துணையுடன் கட்டமைப்பு கள் எழுப்பப்பட்டதாகவும் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், வடக்கு முழுவதும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. காணி உரிமையாளர் கள், சமூக அமைப்புகள், மதத் தலை வர்கள் என பலரும், அகிம்சை வழி யில் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டங்கள், மத எதிர்ப்பாக அல்ல. காணி உரிமை சட்ட ஆட்சி சமத்துவம் என்பவற்றை மையமாகக் கொண்டதாக இருந்ததே அதன் வலிமை.

### நியாயத்துக்கான வலுவான குரலாக ஒலித்த நயினாதீவு விகாராதிபதி

இந்தப் போராட்டப் பயணத்தில் மிக முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தி யவர் நயினாதீவு நாகதீப விகாராதிபதி அவர்களாவார். ஒரு பௌத்த விகாராதி பதியாக இருந்து கொண்டு,

பௌத்த தர்மம் அநியாயத்தின் மீது கட்டப்படும் எந்தக் கட்டிடத்தையும் ஏற்றுக்கொள்ளாது என்று அவர் வெளிப்படையாகக் கூறியது, இன மத எல்லைகளைத் தாண்டிய ஒரு அறநெறிக் குரலாக ஒலித்தது. தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டி ருக்கின்றது அவை மீள வழங்கப்பட வேண்டும் என்றும், சட்டவிரோதமாக கட்டப்பட்ட எந்த மதக் கட்டுமான மும் தர்மத்திற்கு முரணானதே என்றும் அவர் வலியுறுத்தினார். இந்தக் குரல், வடக்கிலும் தெற்கிலும் பலரின் மனச்சாட்சியை உலுக்கியது.

### யாழ்.நாகவிகாரை விகாராதிபதியின் அமைதியான ஆதரவு

அதே போன்று யாழ் நாகவிகாரையின் விகாராதிபதியும், நேரடியாக அரசியல் மேடைகளில் இல்லாவிட்டாலும் மதம் என்பது வலுக்கட்டாயத்தின் கருவி யாக மாறக் கூடாது என்ற நிலைப் பாட்டை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். பௌத்த மதத்தின் பெயரில், மற்றொரு சமூகத்தின் உரிமைகள் பறிக்கப்படுவது, இறுதியில் மதத் திற்கே அவமதிப்பாக மாறும் என்பதை அவர் சுட்டிக் காட்டியமை குறிப்பிடத் தக்கது.

### தையிட்டிவிகாராதிபதியின் குரல்

இதேவேளை தையிட்டி விகாரையின் விகாராதிபதியின் கருத்துகளும் விவாத த்தில் தவிர்க்க முடியாதவை. அவர் முன்வைக்கும் நிலைப்பாடு,

இந்த விகாரை பாதுகாப்பு படை யினரின் தேவைகளின் அடிப்படையில் உருவானது. மத விரோத நோக்கம் எதுவும் இல்லை.

காணியை உரிமை கோரும் நபர்களும் தமது காணி தான் என்பதற்கான ஆவணங்களை அரசிடம் கையளித்து ள்ளனர். இந்த விவாகரத்தில் இதொரு சட்டவிரோத செயல் என தீர்பளிக்கப் பட்டால் அதனையும் ஏற்க நான் தயார் என்பதாக இருக்கிறது.

ஆனால் ஒரு மத நிறுவனத்தின் நோக்கம் எவ்வளவு புனிதமாக இருந் தாலும், அது சட்டவிரோத காணி கைப்பற்றலின் மீது கட்டப்பட்டிரு ந்தால், அந்தப் புனிதம் கேள்விக்குறி



யாகவே மாறுகிறது. இங்கு விமர்சனம் என்பது தனிநபரைக் குறி வைப்பதல்ல முறையற்ற கட்டமைப்பை கேள்வி க்குள்ளாக்குவது தான்.

யாழ் அரச அதிபருடன் 31 டிசம்பர் 2025 நடைபெற்ற சந்திப்பில் காணி உரிமையாளர்களின் ஆவணங்கள், சட்ட ஆதாரங்கள் பரிசீலிக்கப்பட்டு, காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற இணக்கம் ஏற்பட்டுள்ளது. இது நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில், சட்ட ஆட்சிக்கு மீண்டும் மதிப்பு கிடைக்கும். மத நல்லிணக்கம் வலுப் படும் எதிர்காலத்தில் இது போன்ற சர்ச்சைகள் தவிர்க்கப்படும்.

இக்கூட்டம் தொடர்பில் தையிட்டி விகாரை அமைந்திருக்கும் இடம் தவிர்ந்த, அதைச் சூழவுள்ள ஏனைய காணிகளை கட்டம் கட்டமாக விடு விக்கும் யோசனைக்கு காணி உரிமை யாளர்கள் இணக்கம் தெரிவித்துள் ளதை அடுத்து குறித்த காணிகளை விடுவிப்பதற்கான யோசனை அடங்கிய வரைபொன்று மாவட்டச் செயலாளரி னால் துறைசார் தரப்பினருக்கு அனு ப்பி வைக்கப்படவுள்ளதாக காணி உரிமையாளர்களும் தெரிவித்துள்ளனர்.

தையிட்டி விகாரை விவகாரம், ஒரு விகாரை பற்றிய பிரச்சினை மட்டு மல்ல. அது இந்த நாடு சட்டத்தின் அடிப்படையிலா, அதிகாரத்தின் அடிப்படையிலா இயங்குகிறது? என்ற அடிப்படை கேள்வியை எழுப்பிய ஒரு கேள்வியாகும். அநுர அரசும் முன் னைய அரசாங்கம் போன்றதா? என்ற சந்தேகத்தை தமிழ்மக்கள் மனங்களில் எழுவது இயல்பே.

நயினாதீவு நாகதீப விகாராதிபதியின் வலுவான குரலும், யாழ் நாகவிகாரை விகாராதிபதியின் தர்மப் பார்வையும் தையிட்டி விகாராதிபதியின் மன மாற்றமும் இந்த விவகாரத்தை மத மோதலிலிருந்து பாரிய மாற்றத்தை தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் மாற்றியுள்ளன.

இக்காணிப் பிரச்சனையை வைத்து அரசியலில் குளிர்காய்ந்த கட்சிகள் தலைவர்கள் மீண்டும் மீண்டும் மக்களைக் குழப்பாமல் இருப்பதே இக் கடினமான காரியத்திற்கு பேருதவியாக அமையும்.

இப்போது அரச நிர்வாகம் எடுத்துள்ள இந்த இணக்கம் வெறும் வாக்குறுதி யாக இல்லாமல், நடைமுறை நியாய மாக மாறுமா என்பதே மக்களின் எதிர் பார்ப்பாக உள்ளது. நியாயம் நடை முறைக்கு வந்தால் அதுவே உண்மையான தர்ம வெற்றி. நல்லி ணக்கத்திற்கான முதல் படி.

**- கனடாவில் இருந்து நவா**

# ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில் நடப்பவை:- யார் பொறுப்பு?

எனது நண்பரான உளவளத் துணை ஆலோசகர் ஒருவர் அடிக்கடி ஒரு மேற்கோளை சுட்டிக் காட்டுவார்… எதிர்த் தரப்பு உங்களை கோபப்படுத்தி விட்டதென்றால் அது அதன் முதலாவது வெற்றியைப் பெற்றுவிட்டது என்று பொருள்.

ஒருவர் உங்களை கோபப்படுகிறார் என்றால் உங்களைக் கோபப்படுத்துவது தான் அவருடைய நோக்கம் என்றால், நீங்கள் கோபப்படாமல் இருப்பது தான் அவரைத் தோல்வி அடையச் செய்யும். நீங்கள் கோபப்பட்டீர்கள் என்றால் கோபத்தில் வார்த்தைகளைக் கொட்டி விட்டீர்கள் என்றால் எதிரி நினைப்பதை நீங்கள் செய்கிறீர்கள் என்று பொருள்.

இது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கும் பொருந்தும். ஓர் அரசியல் செயற்பாட்டாளர் முகநூலில் எழுதுகின்றார்.. மருத்துவர் அர்ஜுனா அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலின் கருவி என்று. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அபிவிருத்தி தொடர்பான சீரியஸான உரையாடல்களை திசை திருப்பி, தனிநபர் தாக்குதல்கள், குழப்பங்கள் மோதல்கள் போன்றவற்றின் மூலம் முடிவுகளை எடுக்க விடாமல் தடுப்பது தான் அர்ஜுனாவுக்கு வழங்கப்பட்ட வேலை என்றும். அந்த வேலையை அவர் திறம்படச் செய்கிறார் என்றும்

இது ஒரு சதிக் கோட்பாடு. இக்கட்டுரை எப்பொழுதும் சதி சூழ்ச்சிக் கோட்பாடுகளை எடுத்த எடுப்பில் நம்புவதில்லை. மருத்துவர் அர்ஜுனா யாருடைய கருவி என்பதை விடவும் முக்கியமானது, ஆழமானது எதுவென்றால், அவர் உங்களைக் கோபப்படுத்தும் போது நீங்கள் எப்படிப் பொறுமையாக இருக்கிறீர்கள் என்பது தான். நீங்கள் கோபப்பட்டு அவரைப் போலவே தகாத வார்த்தைகளை பயன்படுத்துகிறீர்களா இல்லையா என்பது தான். நீங்கள் கோபப்படுவதன் மூலம் அவரை வெற்றி அடைய வைக்கிறீர்களா இல்லையா என்பதுதான்.

இது அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல. அரசு நிர்வாகிகளுக்கு குறிப்பாக அர்ஜுனா அடிக்கடி நோண்டும் மருத்துவத்துறை சார்ந்தவர்களுக்கும் பொருந்தும். அவர் உங்களிடமிருந்து கோபமான பதிலை, எதிர்வினையை எதிர்பார்க்கிறார் என்றால் நீங்கள் கோபப்படாமல் இருப்பது தான் உங்களுடைய முதிர்ச்சி பக்குவம். ஏன் அதுதான் உரிய உபாயமும் கூட.

ஆனால் கடந்த ஓராண்டு காலத்துக்கு மேலாக நடைபெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களைப் பார்த்தால் யாரும் நிதானமாக இருப்பதாகத் தெரியவில்லை. சில சமயங்களில் ஆளுநரும் அரச அதிபரும் சாட்சிகளாக இருக்கிறார்கள். அவர்கள் வாயைத் திறக்க விரும்பவில்லை. அவர்கள் அரச ஊழியர்கள். அரசியல்வாதிகளின் சண்டைகளுக்குள் வாயை கொடுத்து பதவியை கெடுத்துக் கொள்ள அவர்கள் தயாரில்லை. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் ஆளுநரும் அரச அதிபரும் அமைதியாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு, சில சமயங்களில் சிரிப்பையும் அடக்கிக் கொண்டு சென் பௌத்த ஞானிகள் போல சாட்சிகளாக இருக்கிறார்கள்.

அப்படி நமது அரசியல்வாதிகளும் இருந்தால் என்ன? அரசாங்கம் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை குழப்புவதற்காகத் தான் .ப்படிப்பட்ட வேலைகளை பின்னிருந்து ஊக்கிவிக்கின்றது என்று கூறுவோமாக இருந்தால், அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் தொடர்பாக தமிழ் கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒரு முடிவுக்கு வரலாம். அதை மக்களுக்கு வெளிப்படுத்தலாம். அதை அரசாங்கத்துக்கு ஒரு முறைப்பாடாகத் தெரியப்படுத்தலாம்.

இங்கு பிரச்சினையாக இருப்பது அர்ச்சுனா மட்டுமல்ல. அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தான். இப்படிப்பட்ட குழப்பங்கள். கோளாறுகள் சிங்களப் பகுதிகளில் இல்லை. குறிப்பாக யாழ்ப்பாணத்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தான்



இவை காணப்படுகின்றன என்று கூறிய ஓய்வு பெற்ற மூத்த நிர்வாகி ஒருவர். அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்குள் யாருடைய கமராவை அனுமதிப்பது என்ற முடிவை எடுப்பதன் மூலம் இந்தக் குழப்பங்களை உடனடியாகத் தடுக்கலாம் என்று.

ஆனால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் மட்டுமல்ல. ஆளுநரும் அடிக்கடி அரச ஊழியர்களை நிர்வாகிகளைக் குற்றம் சாட்டுகிறார். சில சமயங்களில் எச்சரிக்கின்றார். இதன் மூலம் தமிழ் அரச நிர்வாகிகளில் தான் தவறு உண்டு. அரசாங்கத்தில் இல்லை என்ற ஒரு தோற்றம் வெற்றிகரமாகக் கட்டி எழுப்பப்படுகிறது.

ஆளுநர் யார்? அவர் அரசாங்கத்தின் பிரதிநிதி. அவர் தன்னுடைய அதிகாரங்களைப் பயன்படுத்தி தனக்குக் கீழே வேலை செய்யும் நிர்வாகிகளை மாற்றலாம் தண்டிக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்வதை விடவும் அதிகமாக அரச நிர்வாகிகளைக் குறை கூறுகிறார் என்பது தான் கடந்த பல மாத கால அவதானிப்பு ஆகும்.

இவ்வாறு தமிழ் அதிகாரிகளை தமிழ் மக்களுடைய பிரதிநிதிகளோடு மோத விடுவதுதமிழ் மக்கள் பிரதிநிதிகள் தங்களுக்கு இடையே மோதிக் கொள்வது தங்களுடைய அபிவிருத்தியைத் தீர்மானிக்கும் கூட்டங்களை தமிழ் மக்கள் நகைச்சுவை காட்சிகளாகப் பார்ப்பது .போன்றவற்றின் மூலம் தமிழ் அரசியலின் சீரியஸைக் குறைத்து அதை ஒரு பகிடியாக்கி விடுவது என்பது ஒரு நிகழ்ச்சி நிரலாக இருக்க முடியும்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் குழப்பப்படுவதற்கு அல்லது கோமாளிக் கூத்துகளாக மாற்றப்படுவதற்கு பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

முதலாவது காரணம் ஏற்கனவே இக்கட்டுரையில் கூறப்பட்டது போல அரசாங்கத்தின் சூதான ஒரு நிகழ்ச்சி நிரல்.

இரண்டாவது காரணம், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தலைவர்களின் ஆளுமை குறைவு.

மூன்றாவது காரணம், அர்ஜுனாவும் உட்பட சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபை நாகரீகத்தைப் பேணாமை.

நான்காவது காரணம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குள் கமராக்கள் அனுமதிக்கப்படுவது. அல்லது அங்கே நடக்கும் விவாதங்களை சில ஊடகவியலாளர்கள் வணிக நோக்கு நிலையில் இருந்து கையாள்வது.

இதில் முதலாவதாகக் கூறப்படுவது ஒரு சூழ்ச்சிக் கோட்பாடு. ஆனாலும் தமிழர்களைத் தமிழர்களோடும் மோத விடுவதன் மூலம் தமிழ்த் தேசிய அரசியலை மதிப்பிறக்கம் செய்ய விரும்புகின்றவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து சிலரை அவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ கையாள முடியும் என்ற சந்தேகம் பலமாக உண்டு.

அரசாங்கத்தின் சதி சூழ்ச்சிகள் என்பவற்றிற்கும் அப்பால் அவ்வாறு அரசாங்கத்தால் கையாளப் படத்தக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்பொழுது தமிழ் மக்கள் மத்தியில் உண்டு என்பது தமிழ் அரசியல் வீழ்ச்சியைக் காட்டுவது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவையான முதிர்ச்சியோடும் பக்குவத்தோடும் இல்லை என்பது தான் இங்கு முதலாவது காரணம். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரின் ஆளுமை எதுவென்பதல்ல இங்கு பிரச்சனை. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆளுமை எதுவென்பது தான் இங்கு முதல் பிரச்சினை.

தமிழ்த் தேசிய அரசியல் அவ்வாறு சீரழிந்து போனதுக்கு எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் பொறுப்பேற்க வேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொருத்தமான முடிவுகளை எடுக்கத் தவறியதன் விளைவாக தமிழ் மக்கள் தொடர்ந்து தோற்றுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 16 ஆண்டுகளாக தமிழ் மக்களை தோற்கடிப்பது வெளித் தரப்புகள் என்பதை விடவும், தமிழ்த் தரப்பே என்பது தான் உண்மை.

தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசிய இனம் என்று அழைத்துக் கொண்டாலும், நடைமுறையில் அவர்கள் ஒரு தேசமாக இருக்கிறார்களா என்ற பாரதூரமான கேள்வியை இங்கே எழுப்ப வேண்டும். ஒரு தேசத்துக்குரிய கூட்டுணர்வோ சகோதரத்துவமோ தமிழ் மக்கள் மத்தியில் உண்டா?

ஒருவர் மற்றவரை துரோகியாக்குவது ஒருவர் மற்றவருக்கு பார் பட்டம் சூட்டுடுவது ஒருவர் மற்றவரை வெளிநாட்டுப் புலனாய்வு நிறுவனங்களின் முகவர் என்று முத்திரை குத்துவது ஒரு கட்சிக்குள்ளேயே இரு குழுக்கள் பிரிந்து நின்று ஒன்று மற்றதை அவதூறு செய்வது யாராவது சமூகத்தில் மினுங்கிக் கொண்டு எழுந்தால், யாராவது சமூகத்துக்கு நல்லதைச் செய்ய முயற்சித்தால், அல்லது நல்லதை சொல்ல முயற்சித்தால், அவரைச் சந்தேகிப்பது அவரை அவதூறு செய்வது வசை பாடுவது சிறுமைப் படுத்துவது… இப்படியே தமிழ் மக்கள் ஒருவர் மற்றவரை நம்பாமல், ஒருவர் மற்றவரை சந்தேகித்து, ஒருவர் மற்றவரைத் துரோகியாக்கி, ஒருவர் மற்றவரை சிறுமைப்படுத்திச் சீரழிய தமிழ் சமூகத்தில் யாருமே கதாநாயகர்களாக எழ முடியாமல் போய்விட்டது.

தாங்கள் வாக்களித்த தலைவர்களையே ஒரு சமூகம் சந்தேகிக்கின்றது அவதூறு செய்கிறது என்று சொன்னால் அது அந்த சமூகத்தின் வீழ்ச்சியைக் காட்டுகிறது. தான் வாக்களித்த ஒரு தலைவரைப் பார்த்து ஒரு சமூகம் சிரிக்கிறது என்று சொன்னால் அந்தச் சமூகம் தன்னுணர்வை கூருணர்வை இழந்து வருகிறது என்று பொருள்.


இவ்வாறு தமிழர்கள் ஒருவர் மற்றவரைத் துரோகியாக்கிக் கொண்டிருக்க யாருமே கதாநாயகர்களாக எழ முடியாத தோல்விகரமான ஒரு வெற்றிடத்தில் தென்னிலங்கையிலிருந்து அனுர குமார திஸநாயக்க கதாநாயகராக இறக்கப்படுகிறார். தமிழ்ப் பாடல்களின் பின்னணியில் அவர் நாயக நடை போடுகிறார். அனுரவைப் போல நாயக வலம் வரும் தமிழ்த் தலைவர் யாராவது உண்டா? ஏன் இல்லாமல் போனது?

எல்லாத் தோல்விகளுக்கும் எதிரியைப் பழி செல்வதும், சூழ்ச்சிக் கோட்பாடுகளை உற்பத்தி செய்வதும் ஒரு வழக்கமாகப் போய் விட்டது. நாங்கள் எங்கே பிழை விட்டோம்? நாங்கள் எங்கே தேசமாக .ல்லாமல் போனோம்? என்பதனை தமிழ்த் தரப்பு தன்னைத் தானே சுய விமர்சனம் செய்து கொள்ள வேண்டும்

இது தமிழ் மக்கள் தங்களை தாங்களே பார்த்துச் சிரிக்கும் ஒரு காலம். சில நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்சிகளையும் திட்டிக் கொண்டிருப்பதனால் பிரச்சனை தீராது. உள்ளதில் பெரிய கட்சி கடந்த ஓராண்டு காலப் பகுதிக்குள் எதையுமே கற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தான் கரைத்துறைப் பற்று பிரதேச சபையில் ஏற்பட்ட தோல்வி காட்டுகிறது.

ஒரு தேசமாகத் திரட்டப்படாத மக்கள் சிதறிக் கொண்டே போகிறார்கள். சிரிப்புக்கிடமாகி விட்டார்கள். அடுத்த ஆண்டாவது தமிழ் மக்கள் தங்களைப் பார்த்து தாங்களே சிரிக்காத ஒரு ஆண்டாக மலராதா?

- நிலாந்தன்



# யேசுவின் பிறப்பைக் கொண்டாடுவது வியாபாரமாகி விட்டது!

**கட்டுரையாளர்:-**
**- அழகு குணசீலன் -**

இலங்கை கத்தோலிக்கர்களின் பேராயர் கார்டினல் மல்கம் ரஞ்சித். அவரின் கடந்த கால அரசியல் ரீதியான கருத்துக்கள் கடுமையான விமர்சனங் களுக்கு உட்பட்டவை. சிறுபான்மை தேசிய இனங்களின் உரிமைகள் குறித்த கருத்துக்களும் இதில் அடங் கும். ஆனால் இந்த விமர்சனங்களுக்கு அப்பால் அண்மையில் நத்தார் பிரதான ஆராதனையின் போது பேராயர் ஆற்றிய உரையின் உள்ளடக்கம் பெரும் கவன ஈர்ப்பை பெற்றிருக் கிறது. பாப்பரசர் பிரான்சிஸ் விட்டுச் சென்ற இடத்தை தொட்டுச் செல்வ தாக உள்ளது.

அப்படி அவரின் உரையில் என்ன இருந்தது?

THE COMMERCIAL ECONOMY HAS GRADUALLY TRSNSFORMED CHIRIST MAS INTO AN OCCATION DRIVEN BY FINANCIAL GAIN RATHER THAN ITS TRUE SPRITUAL MEANING

PUBLIC MUST CLEARLY UNDERSTAND THAT CHIRISTMAS WAS NOT MEANT TO BE A MONEY MAKING FESTIVAL. JESUS CHIRIST URGING SOCIETY TO MOVE AWAY FROM MATERISLISM AND CON SUMERISM

பேராயர் மல்கம் ரஞ்சித் மேலும் விபரமாகவும், தெளிவாகவும் சமூகத திற்கு இந்த பகிரங்க அழைப்பை விடுத்துள்ளார். நத்தார் என்பது பணம் சம்பாதிக்கும் பண்டிகையல்ல. மாறாக நம்பிக்கை, பணிவு, மற்றும் இரத்தம் பற்றி சிந்திக்க வேண்டிய நேரம். அதிகப்படியான வணிக மயமாக்கல் யேசு கிறிஸ்துவின் பிறப்பு கொண்டாட்டத்துடன் தொடர்புடைய முக்கிய மதிப்புக்களை மறைத்து விட்டது. சமூகம் பொருள்முதல்வாதம் மற்றும் நுகர்வோர்வாதங்களில் இருந்து விலகிச் செல்லவேண்டும்.

நத்தார் கொண்டாட்டத்தில் உண்மை யில் முக்கியமானது நத்தார் மரம், தொழுவம், நத்தார் தாத்தா அல்ல. மாறாக யேசு கிறிஸ்து காட்டிய பாதை யைப் புரிந்து கொண்டு அதில் பயணிப்பது தான்.

பேராயரின் இந்த கருத்து இலங் கையை அவதானித்ததன் விளைவு அல்ல. முழு உலகை அவதானித்ததன் வெளிப்பாடு. உலக மயமாக்கமும் அதனூடான தாராள வர்த்தகமும் சமூகத்தை பொருளாதார ரீதியிலும் அதனூடான நுகர்வு மட்டத்திலும் வைத்து மதிப்பிடுகிறது. இது இறக்குமதி செய்யப்பட்ட முதலாளித் துவ நுகர்வு கலாச்சாரத்திற்குள் சமூகத்தை தள்ளி விடுகிறது. ஒருவரைக் கண்டு ஒருவர் இந்த பழக்கத்திற்கு அடிமையாகி வரு கிறார்கள். சிகரட், மதுபானம், போதைப்பொருள், பாலியல் போன்ற பழக்கங்களுக்கு அடிமையாடுவதை மட்டும் இது கருதவில்லை. அளவு க்கு அதிகமாக பொருட் சேர்த்தல், அளவுக்கு அதிகமான நுகர்வு என்பன வற்றையும் இது கருதுகிறது.

யேசுவின் பிறப்புச் சூழல் இந்த நிலையில் இருந்து அல்லது சமூகம் அதை இன்று விளங்கிக் கொண்டிரு ப்பதில் இருந்து முற்றிலும் வேறு பட்டது. யேசு பிறப்பதற்கு ஒரு இடம், தலைக்கு மேல் ஒரு கூரையில் லாத நிலையில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார் என்று கூறப்படுகிறது.

அவர் பஞ்சு மெத்தையில் அல்ல வைக்கோல் புதரில் பிறந்தார் என்றால் அவரின் பிறப்பை சமூகம் எவ்வாறு நினைவில் கொள்ள வேண்டும், எவ் வாறு கொண்டாட வேண்டும் என்பது குறித்த கேள்வி எழுப்பலாகவே பேராய ரின் உரை அமைகிறது.

இன்றைய உலகமயமாக்கல், தாராள வர்த்தக உலகில் மதமும், அதன் சடங்குகளும் வியாபாரமாக்கப்பட்டு ள்ளன. இந்த நிலையானது மத நம்பிக்கைகளுக்கு அப்பால் ஒரு களியாட்ட, நுகர்வு கொண்டாட்டமாக மட்டும் அல்ல தராதரம் பார்த்து, பணப்பெறுமதியை மதிப்பிட்டு அன்பளிப்புக்களை வழங்குவதாகவும் மாறிவிட்டது. யேசு பிறந்த போது வால்வெள்ளியின் திசையை நோக்கி பயணித்த மூவேந்தர்களும், மக்களும் மரியா யோசேப் யேசு குடும்பத்திற்கு என்ன பொருட்களை அன்பளிப்பாக எடுத்து வந்தார்கள்? தங்களிடம் என்ன இருந்ததோ, தங்களால் இயன் றதை கொண்டு வந்தார்கள். இந்த நம்பிக்கையிலான மானிடவியல் பாரம் பரியத்தை இன்றைய சமூகம் எவ்வாறு கொண்டாடுகிறது. அந்தஸ்து, பொரு ளாதார தரம், தகுதி பார்த்து அன்பளி ப்புக்களை பரிமாறிக் கொள்கிறது.

உண்மையில் யேசுவின் பிறப்பும், கிறிஸ்தவமும் அன்பளிப்பு தொடர்பாக எமக்கு சொல்லுகின்ற செய்தி இதற்கு முற்றிலும் மாறானதில்லையா? உள்ள வர்கள் தங்களிடம் மேலதிகமாக இருப்பவற்றை இல்லாதவர்களுக்கு வறுமையில், ஏழ்மையில் வாழ்பவர்களு டன் பகிர்ந்து கொள்ள வேண்டியதை அன்பளிப்பு செய்வதே இந்த பாரம் பரியத்தின் தாற்பரியம். ஆனால் இன்று இது முற்றிலும் பேராயர் குறிப்பிட்ட வர்த்தக மயமாக்கலின் ஒரு அங்கமாக மாறிவிட்டது.

மேற்கில் இருந்து மற்றைய திசைகளு க்கு நகர்த்தப்பட்ட இந்த வர்த்தக விரிவாக்கம் இன்று நவகாலனித் துவமாக முழு உலகிற்கும் வியாபித் துள்ளது. மேற்குலகில் கிறிஸ்தவ மதம் மீதான ஆர்வம் குறைவடைந்து வருகிறது. தேவாலய வரிகளை செலு த்த மறுத்த மக்கள் மதங்களில் இருந்து விலகிக் கொள்கிறார்கள். தேவாலயங்கள் இயங்குவதில் பொருளா தார நெருக்கடி மட்டும் அல்ல, மக்கள் இல்லாத குறையும் உள்ளது. ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனை க்கு வருபவர்கள் கையளவு வயோதிபர் கள் மட்டுமே. இதை ஊக்குவிக்க இலவச மதிய உணவு, இலவச கோப்பி வழங்கலை தேவாலயங்கள் அறிமுகம் செய்து படாத பாடுபடு கின்றன.

அதேவேளை முதலாளித்துவ வர்த்தக அரசியல் ஒரு காலத்தில் கட்டாய விடு முறையாக இருந்த ஞாயிற்றுக்கிழமை களில் வர்த்தக நிலையங்களை திறந்து வியாபாரம் செய்ய சட்டங்களை கொண்டு வந்து செயற்படுகிறது. ஆக ஞாயிற்றுக்கிழமை கோயிலுக்கு போகி ன்றவர்களை விடவும் ஷொப்பிங் போகிறவர்கள் நகர வீதிகளில் நிரம்பி வழிகிறார்கள். எல்லையற்ற நுகர்வு பொருளாதார இலக்காகாக இருக் கிறது. அது மட்டுமின்றி மதச் சண்டைகளைப் போடுகின்றவர்கள் கூட இன்று எல்லா மதக் கொண் டாட்டங்களையும் பார்ட்டி போட்டு அனுபவிக்கிறார்கள். அந்தளவுக்கு தாராளமயமாக்கல் வர்த்தகம் மதவேலி களை நுகர்வுக்காக திறந்து விட்டுள் ளது. இதற்கு பின்னால் அரசாங்கங் களின் ஏற்பாட்டிலும், இராட்சத பொரு ளாதார பல்தேசிய கம்பெனிகளின் ஏற்பாட்டிலும் நடாத்தப்படும் மத, கலாச்சார நிகழ்வுகள் காரணமாகி ன்றன. வெள்ளை மாளிகையில் தீபா வளி, டவுன்ஸரீட்டில் பொங்கல், புது டில்லியில் நத்தார், ஐரோப்பிய ஒன்றிய த்தில் ஹஜ்ஜிப்பெருநாள்..... குவைத் தில் வெசாக்..... இவை எல்லாம் வர்த்தக விளம்பர யுக்திகள். ஆனால் காட்டப்படும் படம் இதற்கு எதிர் மாறாக எம்மதமும் சம்மதம்.

பேராயர் மல்கம் ரஞ்சித் இந்த உரையை இவ்வாண்டு நத்தார் ஆராதனையில் கத்தோலிக்க மதம் சார்ந்து ஆற்றியிருந்தாலும். உலகின் சகல மத கொண்ணாட்டங்களினதும் பொதுப் பயணம் இந்த வழியே பயணி க்கிறது. எனவே பேராயர் மல்கம் ரஞ்சித் வழங்கியுள்ள நத்தார் பரிசு ஒரு 'ஒன் சைஸ்' (ONE SIZE) தொப்பி எல்லோருக்கும் அளவானது. போட்டுக் கொண்டு புத்தாண்டில் கண்ணாடிக்கு முன் நிற்க எத்தனை பேர் தயார்?




# பந்தை சீனா பக்கம் தட்டி விட்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்!

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



பேரிடர் நிகழ்ந்து நான்கு வாரங்களுக்கு பின்னர், பெரியதொரு உதவிப் பொதியுடன் கொழும்புக்கு பயணம் மேற்கொண்டிருந்தார் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர். கடந்த 22 ஆம் திகதி மாலை இந்திய விமானப்படையின் தனி விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய அவர், 24 மணிநேரத்தில் பல சந்திப்புகளை முடித்துக் கொண்டு



23ஆம் திகதி மாலை புதுடெல்லிக்கு புறப்பட்டுச்சென்றார். அவரது இந்தப் பயணம், 'ஒப்பரேஷன் சாகர் பந்து' என்ற இலங்கையின் பேரிடர் மீட்பு முயற்சிகளுக்கு உதவும் இந்தியாவின் வகிபாகத்தை மாத்திரம் வெளிப்படுத்தவில்லை.

அதற்கு அப்பால் பூகோள, பிராந்திய அரசியல், பாதுகாப்பு நடைமுறையில் இந்தியா கொண்டுள்ள பங்கை இன்னும் அதிகரிக்கச் செய்திருக்கிறது. இலங்கையில் ஏற்பட்ட பேரிடர் பெரும் இழப்புக்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த இழப்பில் இருந்து மீண்டெழுவது மிக மிக கடினமானது. இந்தச் சூழலில் சர்வதேச உதவிகள், ஒத்துழைப்புக்களை நாடு எதிர் பார்க்கிறது.

இது தொடர்பாக சர்வதேச சமூகத்திடம் உதவி கோரவிருப்பதாக அரசாங்கம் கூறி வருகிறது. இந்த நிலையில் தான், பேரிடருக்கு பின்னர் இலங்கைக்கு சர்வதேச இராஜதந்திரிகளின் வருகை அதிகரித்திருக்கிறது.

அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலர் அலிசன் ஹஜீக்கர், கொழும்புக்கு பயணம் மேற்கொண்டு இருந்தார். அவர் பேரிடர் மீட்பு மற்றும் மீள்கட்டுமான விடயங்களில் அதிகம் கவனம் செலுத்தவில்லை. அவரது முழு கவனமும் வர்த்தக உறவுகளை மீளமைப்பது மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிப்ப திலேயே இருந்தது.

அதேவேளை சீனாவில் இருந்து அடுத்தடுத்து 3 உயர்மட்ட குழுக்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளன.

முதலாவதாக இந்த மாத தொடக்கத்தில் சீனகம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச பிரிவின் தகவல் மையத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் காங் வாய், பீஜிங் நகராட்சி குழு கட்சிப் பாடசாலையின் உதவிப் பேராசிரியர் ஜியாங் வென், மற்றும் சீன கம்யுனிஸ்ட் கட்சியின் தகவல் ஆராய்ச்சி மையத்தின் பணிப்பாளர் ஜாங் குய்ஃபெங் ஆகியோர் அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

அதையடுத்து வெளிநாடுகளுடனான சீன மக்கள்நட்புறவு சங்கத்தின் தலைவர் யாங் வான்மிங் தலைமையிலான பிரதிநிதிகள் குழு, வந்தது. அவர்கள் கொழும்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்தை சந்தித்துப் பேச்சு நடத்திய போது, பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 82 ஆயிரம் டொலர் கொடையையும் வழங்கினர்.

அப்போது பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீதிகள், பாலங்கள், ரயில்வே உள்ளிட்ட உள்கட்டமைப்புகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு சீனாவின் ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் கூறியிருந்தார். அதையடுத்து சீனாவின், தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவின் துணைத் தலைவர் வாங் டோங்மிங், கொழும்பு வந்தார். அவர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவைச் சந்தித்த போது, மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவும், பேரிடர் சவால்களை சமாளிக்க இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, சீனா முழு ஆதரவை வழங்கும் என கூறியிருந்தார். அப்போது, கடுமையாக சேதமடைந்த ரயில்வே வலையமைப்பை மீட்டெடுப்பதற்கும் புனரமைப்பதற்கும், தொழில் நுட்ப உதவிகளை வழங்குமாறு சீன அரசாங்கத்திடமும், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கிடமும் அரசாங்கத்தின் சார்பில் கோரிக்கை விடுப்பதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கூறியிருந்தார்.

அதையடுத்து சீன கம்யூனிஸ்ட் கட்சி 20வது மத்திய குழு உறுப்பினரும், ஷிசாங் தன்னாட்சி பிராந்தியத்தின் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளருமான வாங் ஜீவான்செங் கொழும்பு வந்தார்.

13 பேர் கொண்ட குழுவுடன் வந்த வாங் ஜீவான்செங் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவைச் சந்தித்த போது, எல்லா நேரங்களிலும் இலங்கைக்கு தேவையான உதவிகளை வழங்க சீனா நடவடிக்கை எடுக்கும் என தெரிவித்திருந்தார். அத்துடன் மீளமைப்பு திட்டத்திற்கு சீனாவின் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளத் தயார் எனவும் கூறியிருந்தார்.

இந்த மாதம் சீனாவில் இருந்து மூன்று உயர் மட்ட பிரதிநிதிகள் அல்லது குழுக்கள் இலங்கைக்கு வந்திருக்கின்ற போதும், அவர்களின் ஊடாக சீனா பெரியளவிலான உதவியை வழங்குவதற்கு வாக்குறுதிகள் எதையும் வழங்கவில்லை. ஆனால் இலங்கை, சீனாவிடம் இருந்து பேரளவு உதவியை எதிர்பார்க்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தியா இந்த விடயத்தில் முந்திக் கொண்டு தன்னை நட்பையும் உரிமையையும் நிரூபித்திருக்கிறது. இலங்கைக்கு 450 மில்லியன் டொலர்களை உதவிப் பொதியாக அறிவித்துள்ளதன் மூலம், சீனாவுக்கு இந்தியா நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தச் சூழலில் சீனா எந்தளவுக்கு நிதி உதவி வழங்கப் போகிறது, என்ற கேள்வியை எழுப்ப வைத்திருக்கி றது.

இந்தியப் பிரதமருக்கு நரேந்திர மோடி, தனது சிறப்பு தூதுவராக அனுப்பிய ஜெய்சங்கரிடம், கொடுத்து விட்ட கடிதத்தில், 'நாங்கள் உங்களோடு தோளோடு தோள் நிற்போம்' என குறிப்பிட்டிருந்தார். அதன் அர்த்தம், எல்லா நேரங்களிலும் இந்தியா உதவும் என்பதாகும்.

அதேவேளை எல்லா நேரங்களிலும் இலங்கைக்கு தேவையான உதவிகளை வழங்க சீனா நடவடிக்கை எடுக்கும் என வாங் ஜீவான்செங் கூறியிருந்தார்.

இந்த இரண்டுமே ஒரே வகையிலான கருத்துக்கள் தான். எந்த நேரமும் எத்தகைய உதவிக்கும் இரண்டு நாடுகளும் தயாராக இருக்கின்றன என்பதற்காக காட்டப்பட்ட பச்சைக் கொடி தான் இது.ஆனால் இவ்வாறான வாக்குறுதிக்கு அப்பால் இலங்கைக்கு தேவைப்படுவது பேரளவு நிதியாகும்.

அதனை திரட்டுவதற்கு அல்லது இந்தியா அல்லது சீனா அல்லது வேறு நாடுகளிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு, இலங்கை கடும்பிராயத்தனங்களை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

இந்தியாவை பொறுத்தவரையில் அயல் நாட்டுக்கு முன்னுரிமை என்ற திட்டத்தின் அடிப்படையில், செயல்படுகிறது. அயல்நாடுகளில் ஏற்படக்கூடிய பேரிடர்களின் போதாயினும் அல்லது வேறு இடர்களின் போதாயினும் இந்தியா ஓடி வந்து உதவும் நிலையில் இருக்கிறது. அதன் ஊடாக பிராந்தியத்தின் முதல்வனாக இருக்கிறேன் என்று இந்தியா காட்டிக் கொள்கிறது.

அதேவேளை இலங்கையில், இந்தியாவுக்கு போட்டியாக தனது செல்வாக்கை நிரூபிப்பதற்கு சீனா முற்படுவது வெளிப்படையான விடயம்.



கடந்த இரண்டு தசாப்தங்களில், சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே இது தொடர்பான ஒரு பனிப்போர் நடந்து கொண்டிருக்கிறது.

கண்ணுக்குத் தெரியாமல் நடக்கின்ற பனிப்போர் இது. இந்த பனிப்போரில் இந்திய மேலாதிக்கம் செலுத்தினாலும், முதலீட்டு ரீதியாக சீனாவின் ஆதிக்கம் நிறைந்திருப்பதை மறுப்பதற்கு இல்லை. ஆனால் இலங்கையில் முதலீடு செய் வதற்கு முன்னுரிமை கொடுக்கின்ற அளவிற்கு, இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கு சீனா தயாராக இல்லை.

இந்த உண்மை, இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு வெளிப்பட்ட முதலாவது தருணம் பொருளாதார நெருக்கடியின் போதாகும்.

பொருளாதார நெருக்கடியின் போது இலங்கையை கை தூக்கி விடுவதற்கு சீனா போதியளவு நிதியை கொடுக்கவில்லை. ஆனால் இந்தியா 4 பில்லியன் டொலர்களை கொடுத்து நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்கு கை கொடுத்தது.

இப்பொழுது இரண்டாவது சந்தர்ப்பம், இந்தியாவுக்கு கிடைத்திருக்கிறது. பேரிடருக்கு பின்னர் நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றுவதற்கு, நாட்டு மக்களுக்கு உதவுவதற்கு அது 450 மில்லியன் டொலர்களை அறிவித்திருக்கிறது.

இந்தச் சூழலில், சீனா மீண்டும் ஒரு முறை இலங்கைக்கு கை கொடுத்து உதவும் விடயத்தில் தோல்வி அடையப் போகிறதா அல்லது தனது தனித்துவத்தை நிரூபித்துக் கொள்ளப் போகிறதா? இலங்கைக்கு ஏற்பட்டிருக்கின்ற பெரும் பாதிப்பிலிருந்து, இலங்கையை மீட்டெடுப்பதற்கு சீனா பெரியளவில் நிதி உதவியை அறிவிக்க கூடும். ஆனால் இதுவரை அதனை செய்யவில்லை. இலங்கையில் முதலீடு செய்கின்ற அளவுடன் ஒப்பிடுகையில் அதிகளவு உதவிகளை வழங்காத சீனா, தோளோடு தோள் நிற்போம் என்று கூறுகிறதே தவிர, இதுவரை உதவிப்பொதியோடு யாரையும் அனுப்பி வைக்கவில்லை.

சீனாவின் உயர்மட்ட குழுக்கள் வெறும் வாக்குறுதிகளோடு தான் வந்து செல்லுகின்றன. இந்தியாவின் ஒப்பிடுகையில் சீனா கஞ்சத்தனத்துடன் நடந்து கொள்கிறது. பந்து இப்பொழுது சீனாவின் அரங்கிற்கு தட்டி விடப்பட்டிருக்கிறது. அதனை சீனா எப்படி கையாளப் போகிறது?

# அமெரிக்காவின் 15 ஆண்டு பாதுகாப்பு உத்தரவாதம்:- யுக்ரேன் ஏற்பு?

நாங்கள் உடன்பாட்டை நெருங்கி வருகிறோம். யுக்ரேன் அதிபர் ஜெலன்ஸ்கியை சந்தித்த பிறகு டிரம்ப் சொன்ன வார்த்தைகள் இவை.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று யுக்ரேன் அதிபர் ஜெலென்ஸ்கி, அதிபர் டிரம்ப் இடையே சந்திப்பு நடைபெற்றது. பின் இருவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்துப் பேசினர்.

### சந்திப்பில் நடந்தது என்ன?

ரஷ்யா யுக்ரேன் போர் தொடர்பான இந்த பேச்சுவார்த்தை சிறப்பாக இருந்ததாக இரு தலைவர்களுமே கூறினர். அதே நேரம் நிலப்பரப்பு தொடர்பான பிரச்னை இன்னும் முட்டுக்கட்டையாக இருப்பதாக டிரம்ப் கூறினார். முன்னர், கூடுதலாக சில நிலங்களை ஒப்படைக்க வேண்டும் என ரஷ்யா கூறியிருந்தது.

பேச்சுவார்த்தைக்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ஜெலென்ஸ்கி, 20 அம்சங்களைக் கொண்ட அமைதி திட்டத்தில் 90வீதம் வரை உடன்பாடு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். யுக்ரேனுக்கான பாதுகாப்பு உத்தரவாதம் தொடர்பான விவகாரம் 95வீதம் வரை நிறைவடைந்ததாக டிரம்ப் தெரிவித்தார்.

15 ஆண்டுகள் வரையிலான பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குவதாக அமெரிக்கா உறுதியளித்துள்ளதாக யுக்ரேன் அதிபர் ஜெலென்ஸ்கி கூறியுள்ளார். எனினும் இதனை அமெரிக்கா உறுதி செய்யவில்லை.

### டான்பாஸ் பிராந்தியம் குறித்த முடிவு

மேலும் சுமார் 4 ஆண்டுகளாக நீடிக்கும் ரஷ்யா-யுக்ரேன் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான மற்ற விஷயங்கள் குறித்து அமெரிக்க மற்றும் யுக்ரேன் குழுக்கள் அடுத்த வாரம் மீண்டும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

இந்த சந்திப்புக்கு பிறகு டெலிகிராம் செயலியில் வெளியிட்ட அறிக்கையில், அனைத்து விஷயங்களிலும் நாங்கள் ஆழமான மற்றும் பொருத்தமான பேச்சுவார்த்தையை நடத்தினோம். கடந்த சில வாரங்களில் யுக்ரேன் மற்றும் அமெரிக்க குழுக்கள் எட்டிய முன்னேற்றத்தை பெரிதும் மதிக்கிறோம் என ஜெலென்ஸ்கி குறிப்பிட்டிருந்தார்.

2022 பிப்ரவரியில் யுக்ரேன் மீது முழுமையான தாக்குதலை ரஷ்யா தொடங்கியது. தற்போது, யுக்ரேனின் நிலப்பரப்பின் சுமார் 20வீதம் பகுதிகளை ரஷ்யா தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

ரஷ்யா பெரும்பாலும் கட்டுப்பாட்டில் வைத்துள்ள கிழக்கு யுக்ரேனின் டான்பாஸ் பகுதியை ஆயுதமற்ற மண்டலமாக மாற்றும் முன்மொழிவில் இன்னும் முடிவு எட்டப்படவில்லை என டிரம்ப் கூறினார்.

தற்போது, டோனெட்ஸ்க் (Donetsk) பகுதியின் சுமார் 75 சதவிகிதத்தையும், அதற்கு அடுத்துள்ள லுஹான்ஸ்க் (Luhansk) பகுதியின் சுமார் 99 சதவிகித பகுதிகளையும் ரஷ்யா கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இந்த இரு பகுதிகளை உள்ளடக்கியது தான் டான்பாஸ் என அழைக்கப்படுகிறது.

இந்த பகுதியில் யுக்ரேன் கட்டுப்பாட்டில் உள்ள சிறிய பகுதியிலிருந்தும் யுக்ரேன் படைகள் பின்வாங்க வேண்டும் என ரஷ்யா கூறுகிறது. ஆனால், அந்த பகுதியை யுக்ரேன் படைகள் கண்காணிக்கும் ஒரு சுதந்திர பொருளாதார மண்டலமாக மாற்றலாம் என யுக்ரேன் வலியுறுத்துகிறது.

யுக்ரேன் இழந்த நிலப்பரப்புகள் தொடர்பாக அமெரிக்க அதிபர் டிரம்ப்



தனது நிலைப்பாட்டை பல முறை மாற்றியுள்ளார். செப்டம்பரில் யுக்ரேன் அந்த பகுதிகளை மீட்டெடுக்கக் கூடும் என்று கூறினார். பின்னர், அந்த நிலைப்பாட்டை மாற்றினார். தற்போது 'அது மிகவும் கடினமான விவகாரம். ஆனால் ஒரு கட்டத்தில் தீர்வு காணப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

### முத்தரப்பு பேச்சுவார்த்தை

யுக்ரேனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்கள் 95வீதம் வரை முடிவடைந்து விட்டதாக டிரம்ப் கூறினார். அதே நேரம், எதிர்கால தாக்குதல்களிலிருந்து யுக்ரேனைப் பாதுகாக்க படைகள் அல்லது தளவாட ஆதரவு வழங்குவது குறித்து முறையான உத்தரவாதம் எதையும் டிரம்ப் வழங்கவில்லை.

மேலும் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் யுக்ரேன் ஆகிய 3 நாடுகளும் பங்கேற்கும் முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் நடைபெறக்கூடும் எனக் கூறிய டிரம்ப், சரியான நேரத்தில் இது சாத்தியமாகும் என்றார்.

அதே நேரம் பேச்சுவார்த்தைகள் முற்றிலுமாக தோல்வியடைந்தாலோ அல்லது மிக மோசமாக சென்றாலோ போர் தொடர்ந்து நீடிக்கலாம் என்றும் எச்சரித்தார்.

### அமெரிக்காவின் உத்தரவாதம்

ஆனால் 15 ஆண்டு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க அமெரிக்கா முன் வந்ததாக ஜெலென்ஸ்கி கூறுகிறார்.

பாதுகாப்பு உத்தரவாதங்கள் இல்லாமல் இந்தப் போர் உண்மையில் முடிவுக்கு வந்ததாகக் கருத முடியாது. அத்தகைய அண்டை நாடு (ரஷ்யா) இருக்கின்ற போது. ஆக்கிரமிப்பு மீண்டும் தொடங்குவதற்கான ஆபத்து இருப்பதால் இந்தப் போர் முடிந்ததாக நாங்கள் ஒப்புக் கொள்ள முடியாது, என ஜெலென்ஸ்கி விளக்கியதாக ஏஎஃப்பி செய்தி முகமை கூறுகிறது.

அமெரிக்கா 30, 40 அல்லது 50 ஆண்டுகளுக்கான சாத்தியத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.' எனவும் அவர் தெரிவித்தார்.

கால அளவு பற்றி அமெரிக்கா எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. ஒப்பந்தத்தை நெருங்கி விட்டதாகக் கூடிய டிரம்ப் ஐரோப்பிய கூட்டாளிகள் அமெரிக்காவின் ஆதரவுடன் அந்த முயற்சியின் 'பெரும்பங்கை எடுத்துக் கொள்வார்கள்' என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

சமீபத்தில் ரஷ்ய அதிபர் புதினுடன் தொலைபேசி மூலம் டிரம்ப் உரையாடினார். அந்த உரையாடல் குறித்த விவரங்களை டிரம்ப் அதிகம் வெளியிடவில்லை என்றாலும் யுக்ரேன் வெற்றி பெற வேண்டும் என புதின் விரும்புகிறார் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகக் கூறினார்.

அதே நேரம் யுக்ரேன் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்த வழி வகுக்கும் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் ரஷ்யாவுக்கு அதிக ஆர்வம் இல்லை என்றும் டிரம்ப் கூறினார்.

பரவலாக எதிர்பார்க்கப்பட்ட இந்தப் பேச்சுவார்த்தை இரண்டரை மணி நேரம் நீடித்தது, அதுவே ஒரு குறிப்பிடத்தக்க சாதனை தான். டிரம்ப் மற்றும் ஜெலென்ஸ்கி இதற்கு முன் ஒருபோதும் இவ்வளவு நேரம் ஒரே அறையில் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியதில்லை என்கிறார் பிபிசி மானிட்டரிங்கின் ரஷ்ய ஆசிரியர் விட்டலி ஷெவ்சென்கா.

இரு அதிபர்களும் முன்பை விட அதிக நம்பிக்கையுடன் பேசினாலும், முந்தைய பேச்சுவார்த்தைகளைப் போலவே இந்த முறையும் எந்த வெளிப்படையான முன்னேற்றத்தையும் பார்க்க முடியவில்லை என்றும் அவர் கூறுகிறார்.

டிரம்பின் அழுத்தம், எரிச்சல் மற்றும் கோபத்தின் சுமையை யுக்ரேன் தலைவரே சுமந்து வருகிறார். புதின் பற்றி டிரம்ப் தொடர்ந்து நேர்மறையாகப் பேசுவது, இது மாற வாய்ப்பில்லை என்பதைக் காட்டுகிறது. டிரம்ப் மற்றும் ஜெலன்ஸிகியிடம் நம்பிக்கை தென்பட்டாலும் யுக்ரேனில் விரைவில் நீடித்த அமைதி நிலவும் என்பதற்கான சிறிய அறிகுறியே தெரிவதாகவும் அவர் கூறுகிறார்.

நன்றி:- பிபிசி

# ராயல் கனடிய கடற்படையை பயங்கரவாத அமைப்பாக அறிவித்தது ஈரான்!

ஈரான் ராயல் கனடிய கடற்படையை பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. இது கனேடிய அரசாங்கம் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையை (IRGC) பயங்கரவாதக் குழுவாக அறிவிக்க எடுத்த முடிவின் பிரதிபலிப்பாகும்.



ஈரானிய இராணுவத்தின் அதிகாரப்பூர்வ பிரிவான IRGC-I ஜீன் 19, 2024 அன்று கனடா தனது பயங்கரவாத பட்டியலில் சேர்த்தது.

இது சர்வதேச சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை மீறுவதாக ஈரான் கூறுகிறது. பதிலடி கொடுக்கும் விதமாக, இது கனடாவின் நடவடிக்கைகளுக்கு எதிரான பரஸ்பரக் கொள்கையின் அடிப்படையில் ஒரு பழிவாங்கும் நடவடிக்கை என்று ஈரானிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த முடிவை எடுக்க ஈரான் 2019 இல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் 7வது பிரிவைப் பயன்படுத்தியுள்ளது.

அந்தச் சட்டத்தின்படி IRGC-ஐ அமெரிக்கா கருப்புப் பட்டியலில் சேர்த்ததை ஆதரிக்கும் அல்லது பின்பற்றும் எந்தவொரு நாட்டிற்கும் எதிராக இதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்க ஈரானுக்கு அதிகாரம் உள்ளது. IRGC அதன் நாட்டின் அதிகாரப்பூர்வ ஆயுதப் படைகளின் ஒரு பகுதியாக இருப்பதால், அதை பயங்கரவாத அமைப்பு என்று அழைப்பது சட்டவிரோதமானது என்று ஈரானிய அரசாங்கம் வலியுறுத்துகிறது.

இது இவ்றிருக்க கனடா 50 ஆண்டுகளுக்குப் பின்னர் உறைய வைக்கும் கடும் குளிரால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தற்போது வட அமெரிக்க கண்டம் இருவேறு தீவிர வானிலை நிலைகளை எதிர்கொண்டு வருகிறது.

ஒருபுறம் கனடா உறையவைக்கும் கடும் குளிரிலும், மறுபுறம் அமெரிக்காவின் பல பகுதிகள் வசந்த காலத்தைப் போன்ற வெப்பத்திலும் காணப்படுகின்றன. வடக்கு கனடாவில் கடந்த சில வாரங்களாக வெப்ப நிலை -20°C முதல் -40°C வரை நீடித்து வருகிறது

# வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளும் இந்தியாவும்!

கட்டுரையாளர்:-
கொழும்பில் இருந்து மூத்த ஊடகவியலாளர்
- வீரகத்தி தனபாலசிங்கம் -

வழமை போன்றே வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் கடந்த வாரமும் இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரை சந்திப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தின் போது மாகாணசபை தேர்தல்களை விரைவில் நடத்துவதுடன் அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா நெருக்குதலைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தன.

கடந்த மாதம் டித்வா சூறாவளியின் விளைவான பேரழிவில் இருந்து இலங்கை மீண்டெழுவதற்கான இந்தியாவின் உதவித் திட்டத்தை அறிவிப்பதற்காக ஜெய்சங்கர் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட தூதுவராக கொழும்புக்கு ஒரு நாள் விஜயமாக கடந்த செவ்வாய்கிழமை வந்திருந்தார்.

இலங்கை தமிழரசு கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவர்கள் இந்தியா இல்லத்தில் ஜெய்சங்கரை கூட்டாகச் சந்தித்துப் பேசினர். அவரிடம் கூற வேண்டிய விடயங்கள் குறித்து இந்த தலைவர்கள் முன்கூட்டியே தங்களுக்குள் வேறு ஒரு இடத்தில் கலந்தாலோசனை நடத்தியது இந்த தடவை வித்தியாசமான ஒரு அணுகுமுறையாக அமைந்திருந்தது. தங்களுக்குள் முரண்பாடுகள் இருக்கின்ற போதிலும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேசும் போது தங்களுக்குள் ஒரு குறைந்தபட்ச புரிந்துணர்வாவது இருப்பது அவசியம் என்று இப்போது தமிழ் அரசியல்வாதிகள் சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றார்கள் போலும்.

இயற்கை அனர்த்தத்தினால் வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நிவாரண மற்றும் புனரமைப்பு பணிகள் குறித்தும் இந்திய வெளியுறவு அமைச்சருடன் பேசிய இந்த தலைவர்கள் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு இலங்கையை இந்தியா வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையையே பிதானமாக முன்வைத்தனர். அத்துடன் பிரதமர் மோடிக்கான கடிதம் ஒன்றையும் அவரிடம் இவர்கள் கையளித்தனர்.

மாகாணசபைகளை பற்றி வழமையாக அக்கறை காட்டாமல் இருந்துவரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டியது அவசியம் என்று ஏனைய தலைவர்களுடன் சேர்ந்து ஜெய்சங்கரிடம் கூறியிருக்கிறார். தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்புக்களை இடைநடுவில் நிறுத்திவிட்டு ஜெய்சங்கருடனான சந்திப்புக்காக அவர் அவசரமாக கொழும்பு திரும்பினார்.

மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டிய அவசியத்தை மற்றைய தமிழ் தலைவர்களுடன் சேர்ந்து இந்திய வெளியுறவு அமைச்சருக்கு கூறிய அதேவேளை கஜேந்திரகுமார் இலங்கையில் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பரவலாக்கலை உருப்படியாகச் செய்வது சாத்தியமில்லை என்றும் அதனால் கூட்டாட்சி (Federal system) அடிப்படையிலான ஏற்பாடு மாத்திரமே இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமைய முடியும் என்றும் சுட்டிக்காட்டியதன் மூலமாக தன்னை மற்றையவர்களிடம் இருந்து வேறுபடுத்துவதில் அக்கறை காட்டினார்.

ஆனால் தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் உடனடியாகவே தாங்களும் இனப்பிரச்சினைக்கு நிலைபேறான அரசியல் தீர்வாக கூட்டாட்சி முறையே இருக்க முடியும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும் தங்களைப் பொறுத்தவரை கூட்டாட்சி என்ற அடையாளப் பெயரில் அல்ல, அதிகாரங்களின் உள்ளடக்கத்திலேயே அக்கறை கொண்டிருப்பதாகவும் கூறினார்.



ஜெய்சங்கருடனான சந்திப்புக்கு பிறகு கஜேந்திரகுமார் கடந்த வாரம் நடத்திய செய்தியாளர்கள் மகாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் மற்றைய தமிழ்க் கட்சிகளுக்கும் தனது கட்சிக்கும் இடையிலான கொள்கை வேறுபாட்டை விளக்கும் நோக்கில் அமைந்திருந்தன. தமிழரசு கட்சியும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் மாகாண சபை தேர்தல்களிலும் 13வது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தலிலும் அக்கறை செலுத்திய அதே வேளை, கூட்டாட்சி முறையின் அடிப்படையிலான அரசியலமைப்பை இலங்கை அரசாங்கம் கொண்டு வருவதற்கு இந்தியா ஊக்கம் கொடுக்க வேண்டும் என்பதை ஜெய்சங்கரிடம் வலியுறுத்தியுறுத்துவதில் மாத்திரமே கவனம் செலுத்தியதாக கூறினார்.

பிரதமர் மோடிக்கான கடிதத்தின் உள்ளடக்கம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் அது என்றைக்குமே தெரிய வராமலும் போகலாம் என்றும் கூட கஜேந்திரகுமார் செய்தியாளர்களிடம் கூறினார். அந்த கடிதத்தில் மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலை கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளடங்கியிருக்கிறதே தவிர, கூட்டாட்சி முறை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

மாகாணசபை தேர்தல் தொர்பிலான தமிழ்க் கட்சிகளின் வலியுறுத்தலோ அல்லது கூட்டாட்சி முறை பற்றிய நிலைப்பாடோ ஜெய்சங்கருக்கு புதியவை அல்ல. வெளியுறவு அமைச்சராக மாத்திரமல்ல, அதற்கு முன்னர் வெளியுறவு செயலாளராக பதவி வகித்த நாட்களிலும் அவர் இலங்கை தமிழ்க் கட்சிளுடன் பல தடவைகள் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறார். அவர் வெளியுறவு செயலாளராக இருந்த போது கொழும்பில் தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பு ஒன்றில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு குறித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் கவனத்துக்கு கொண்டு வந்த சந்தர்ப்பத்தில் இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கைக்கு பிறகு பெருமளவு நிகழ்வுகள் இடம் பெற்று விட்டன என்றும் மீண்டும் இரு மாகாணங்களின் இணைப்பு குறித்து கொழும்புடன் பேசக்கூடிய நிலையில் இந்தியா இல்லை என்றும் கூறியிருந்தார்.

வெளியுறவு அமைச்சராக வந்த பிறகு கொழும்பில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பு ஒன்றில் 13வது அரசியலமைப்பு திருத்தத்தை தானும் மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக நடைமுறைப்படுத்தாமல் இருந்து வரும் இலங்கை அரசாங்கங்களிடம் கூட்டாட்சி கோரிக்கையை எவ்வாறு முன்வைக்க முடியும் என்று ஜெய்சங்கர் கேள்வியெழுப்பினார். கஜேந்திரகுமாரும் கலந்து கொண்ட அந்த சந்திப்பில் கூட்டாட்சி முறை குறித்து வாழ்நாள் பூராவும் பேசிக் கொண்டிருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

கடந்த வாரத்தைய சந்திப்பில் அவர் கூட்டாட்சி முறையைப் பற்றி முன்னரைப் போன்று எதையும் கூறியதாக தெரிய வரவில்லை. மாகாணசபை தேர்தல்களை விரைவில் நடத்துவதற்கு கொழும்பை இந்தியா வலியுறுத்த வேண்டும் என்ற தமிழ்த் தலைவர்களின் வேண்டுகோளுக்கு கூட நேரடியான பதில் எதையும் அவர் கூறவில்லை என்று அதில் கலந்து கொண்ட தலைவர் ஒருவர் தெரிவித்த தகவல்களின் மூலம் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. பதிலாக, இயற்கை அனர்த்தம் பேரழிவை ஏற்படுத்தியிருக்கும் சூழ்நிலையில் மாகாணசபை தேர்தல்களை எவ்வாறு நடத்தச் செய்வது என்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடமே ஜெய்சங்கர் ஆலோசனை கேட்கும் தொனியில் பேசியதாகவும் தெரியவருகிறது.

தேசிய மக்கள் சக்தியின் பிரதான அங்கத்துவக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவின் ( ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா புதுடில்லிக்கு வரும்போது மாகாண சபை தேர்தல்களை விரைவாக நடத்துவது குறித்தும் மாகாண சபைகள் முறைமையை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்தும் அவரிடம் வலியுறுத்திக்கூறுமாறு தமிழ் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கும் ஜெய்சங்கர் பதில் எதையும் கூறாமல் சகலவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்ததாக சந்திப்பில் கலந்து கொண்ட ஒரு தலைவர் கூறினார்.

சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதற்கு பின்னரான 38 வருட காலத்தில் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இலங்கையை வழிக்குக் கொண்டு வர இந்தியாவினால் முடியவில்லை. பெருமளவுக்கு மாறி விட்ட புவிசார் அரசியல் நிலைவரங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் அரசாங்கத்தின் மீது இனப்பிரச்சினை விவகாரத்தில் எந்தவிதமான நெருக்குதலையும் கொடுப்பதற்கு மோடி அரசாங்கம் நாட்டம் காட்டும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.


ஆனால் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதுடன் இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்தியா தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டேயிருக்கும் என்பதை மாத்திரம் எதிர்பார்க்கலாம். அதுவும் குறிப்பாக, இயற்கை அனர்த்தத்தின் அழிவுகளில் இருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் தீவிர கவனத்தை செலுத்துகின்ற ஒரு அரசாங்கத்திடம் மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று உடனடியாக கேட்பதற்கு மோடி அரசாங்கம் முன்வரும் என்றும் எதிர்பார்க்க முடியாது.

மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்தைக் கோரும் அரசியல் பாராட்ட இயக்கம் ஒன்றை ஜனவரி முதல் முன்னெடுக்கப் போவதாக தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் சூறாவளிக்கு முன்னர் கூறியிருந்தார். மாகாணசபை தேர்தல்களை நடத்துவதில் அக்கறையில்லாமல் இருந்து வரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அவற்றை மேலும் பின்போடுவதற்கு சூறாவளியின் வடிவில் வசதியான சாட்டு ஒன்று கிடைத்திருக்கிறது.


இந்தியாவிடம் வேண்டுகோள் விடுப்பதை தவிர, தமிழ்க் கட்சிகளுக்கு வேறு மார்க்கமே இல்லை. ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வை முடக்காமல் கூட்டாட்சி அடிப்படையிலான

(22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! தடைபட்டு வந்த காரியங்கள் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.. உடல் நலம் சீரடையும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்





ரிஷபராசி அன்பர்களே! வீண் மனகு ழப்பம் ஏற்பட்டு நீங்கும். ஆன்மிக எண்ணம் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் வியாபாரத்தில் கூடுதல் லாபம் பெற முடியும். உத்யோகத்தில் கூடுதல் பணிச்சுமையும், வீண் அலைச்சலும் உண்டாகும். சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தினருடன் சில்லறை சண்டைகள் உண்டாகலாம்.





மிதுனராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் குறித்த காலத்தில் வெற்றி பெறும். மனம் ஒருநிலைப்படும். கவுரவம், அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் மற்றவர்கள் மூலம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மந்தமானபோக்கு காணப்பட்டாலும் பணவரத்து குறைவு இருக்காது.தொழிலில் கூட்டாளிகளுடன் அனுசரித் செல்வது நன்மை தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது.




கடகராசி அன்பர்களே! மனோதைரியம் அதிகரிக்கும். எல்லா காரியங்களும் சாதகமாக நடந்து முடியும். எல்லா இடங்களிலும் மரியாதையும், கவுரவமும் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். போட்டிகள் குறையும். தொழில் தொடர்பான தகராறுகள் நீங்கும். கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகத் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும்.





சிங்கராசி அன்பர்களே! மன குழப்பம் நீங்கும். மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கவுரவம் அந்தஸ்து அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி அவற்றை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உத்யோகத்தில் மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளை கவனமாக செய்து முடித்து பாராட்டு பெறுவர்.




கன்னிராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கும். தர்மசிந்தனை அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்படையும். புதிய ஆர்டர்கள் கிடைக்க பெறுவீர்கள். வியாபார வளர்ச்சிக்கு இருந்த தடைகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். அரசாங்கம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக முடியும். உத்யோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். பணியாளர்கள் உதவியும் கிடைக்கும்





துலாம்ராசி அன்பர்களே! சுபச் செலவுகள் கூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். துணிச்சல் உண்டாகும். எதை பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கி விடுவீர்கள். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் சரக்குகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும்.





விருச்சிகராசி அன்பர்களே! மன நிம்மதி கிடைக்கும். புத்திசாதுர்யம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். புதிய ஆர்டர்கள் பெறவும், வாடிக்கையாளர்களை திருப்தி செய்யவும் அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற்கும் போது மிகவும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.








தனுசுராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பம் நீங்கும். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாட்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும்.




மகரராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்டு செயல்படுத்துவது வளர்ச்சிக்கு உதவும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு துணிச்சல் அதிகரிக்கும். எதை பற்றியும் கவலைப் படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது அவசரப்படாமல் இருப்பது நல்லது. தன்மையாக பேசுவது நல்லது.




கும்பராசி அன்பர்களே! சுபச் செலவுகள் உண்டாகும். வியாபாரம் தொடர்பான கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும் போது எச்சரிக்கை தேவை. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது.




மீனராசி அன்பர்களே! எல்லாவிதமான முன்னேற்றமும் ஏற்படும். பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். புதிய நண்பர்களின் நட்பு கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். புதிய தொழில் அல்லது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு செயல்திறன் அதிகரிக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## 2025 அநுர அலையில் தொடங்கி மனிதாபிமான

(15ம் பக்கத் தொடர்ச்சி) அவ்வாறு அரசியல் உள்நோக்கத்தோடு பயன்படுத்த மேற்குநாடுகள் முயற்சித்தன. முதற்கட்டமாக அதில் வெற்றியும் அடைந்தன. அரசாங்கமும் விடுதலைப்புலிகள் இயக்கமும் சுனாமி பொதுக் கட்டமைப்புக்கு இணங்கின.

ஆனால் அந்த மனிதாபிமானச் சூழலுக்குள் இனவாத அலையைத் தூண்டியா ஜேவிபி அதைத் தோற்கடித்தது. சுனாமிக்குப் பின்னரான ஒரு மனிதாபிமானச் சூழலை இனவாதத்தின் மூலம் தோற்கடித்த அதே இயக்கத்தை அடித்தளமாகக் கொண்ட இப்போதுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது, புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழலை தன்னைப் பலப்படுத்துவதற்கும் எதிர்க் கட்சிகளை பலவீனப்படுத்துவதற்கும் கெட்டித்தனமாகப் பயன்படுத்துகின்றது. ஆனால் இந்த அசாதாரண மனிதாபிமானச் சூழலை அரசாங்கம் இனவாதத்துக்கு எதிராக கட்டமைக்கவில்லை. அவ்வாறு கட்டமைக்கும் என்று நம்பத்தக்கதாக தேசிய மக்கள் சக்தியின் கடந்த ஓராண்டு காலம் அமையவில்லை

## தையிட்டி சட்டவிரோத விகாரை:- காணி உரிமையாளர்களின் நயினாதீவு நோக்கிய பயணமும் உரிமை மீட்புக்கான குரலும்!

(5ம் பக்கத் தொடர்ச்சி) என்றும் காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர். எங்களுக்குச் சொந்தமான காணியை எங்களிடம் திருப்பிக் கொடுக்குமாறு கேட்பது ஒரு குற்றமல்ல. அது எங்கள் அடிப்படை உரிமை என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு மதங்களுக்கிடையிலான முரண்பாட்டைத் தூண்டும் நோக்கத்துடன் அல்லாமல் சட்டத்திற்கும் மனித உரிமைக்கும் உட்பட்ட ஒரு நியாய மான தீர்வை நாடி மேற்கொள்ளப் பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ள னர். காணி உரிமை தொடர்பான பிரச்சினைகள் மதச்சாயம் பூசப்பட்டு அரசியலாக்கப்படாமல், உரிய சட்ட வழி முறைகளின் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே, இந்தக் காணி விவகாரம் தொடர்பாக அரசாங்கமும் சம்பந்தப் பட்ட அதிகாரிகளும் இன்னும் தெளிவான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச் சாட்டும் தொடர்கிறது. நீதிமன்றத் தீர்ப்புகளும் சட்ட விதிகளும் புறக்கணிக்கப்படும் நிலை தொடரு மானால், பாதிக்கப்பட்ட மக்கள் ஜன நாயக வழிகளில் தமது போராட்டங் களைத் தொடர வேண்டிய கட்டாயத் திற்குத் தள்ளப்படுவார்கள் என்ற அச்ச மும் வெளிப்படுகிறது.

நயினாதீவில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பு சட்டவிரோத காணி கையகப்படுத்தல்களுக்கு எதிராக பாதிக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளை அமைதியான முறையில் முன் வைக்கும் இன்னொரு முயற்சியாகவே பார்க்கப்படுகிறது. இது வெறும் ஒரு சந்திப்பாக முடிவடையுமா? அல்லது காணி உரிமை மீட்புக்கான ஒரு தீர்மானமான திருப்புமுனையாக மாறுமா? என்பதே இப்போது யாழ்ப்பாணத் தமிழ்சமூகத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## வடக்கு கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளும்..

(21ம் பக்கத் தொடர்ச்சி) தீர்வொன்றை புதிய அரசியலமைப்பின் மூலம் அறிமுகப்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இந்தியாவைக் கொண்டு நெருக்குதல் கொடுப்பதற்கு தமிழக அரசியல் கட்சிகளின் உதவியை கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசியப் பேரவை நாடியிருக்கிறது.

தமிழகத்தில் இன்னமும் நான்கு மாதங்களில் சட்டசபை தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் பிரசாரங்களில் மீண்டும் இலங்கை தமிழர் பிரச்சினையை முக்கியத்துவம் பெறச் செய்வதற்கான ஒரு முயற்சியாகவும் இதை சில அவதானிகள் கருதுகிறார்கள். மாகாணசபை தேர்தல் தொடக்கம் கூட்டாட்சிக் கோரிக்கை வரை இலங்கை தமிழர்களின் கதியை இந்தியாவின் காலடியில் சமர்ப்பித்து விட்டு நிற்கின்றன தமிழ்க் கட்சிகள். இலங்கை அரசாங்கத்தை அசைப்பதற்காக இந்திய அரசாங்கத்தை முதலில் அசைப்பதே தற்போது பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

சமாதான உடன்படிக்கைக்கு பின்னரான காலப் பகுதியில் இந்தியாவைக் கையாளுவதில் தமிழர் தரப்பு இழைத்த மாபெரும் தவறையும் அதற்கு காரணமான முக்கிய சக்திகளையும் பற்றிய தெளிவான விளக்கப்பாட்டை தமிழ்க் கட்சிகள் கொண்டிருப்பது அவசியம். மாகாணசபை முறைமையின் இன்றைய சீரழிவுக்கு தமிழர் தரப்பும் கணிசமானளவுக்கு காரணம் என்பதும் வெளிப்படையாக ஒத்துக் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.

## புதிய அரசியலமைப்பு உருவாக்கமும்..

(09ம் பக்கத் தொடர்ச்சி) 450 மில்லியனையும் இந்திய உதவியாக வழங்கிவிட்டு, தமிழர் பிரதிநிதிகளுக்கு பெப்பே காட்டிச் சென்றுவிட்டார். இவரைச் சந்தித்த தமிழர் பிரதிநிதிகள், யாவும் அக்களத்தே விட்டு வெறுங்கையோடு வீடு திரும்பினர்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்துக் களமாடிய ஜே.வி.பி.யின் பிரதிநிதியான அநுரகுமர திஸ்ஸநாயக்க ஜனாதிபதியானதும் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுப் பயணம் இந்தியாவுக்கானது என்பதை நினைவில் கொண்டால் - பழையன கழிந்ததும் புதியன புகுந்ததும் புரியும்.

எதிர்பாருங்கள்! காத்திருங்கள்!
காணத் தவறாதீர்கள்!
ஈழநாடு பத்திரிகையின் 33வது ஆண்டு விழா
தமிழ் இயலும் - இசையும்
21 மார்ச் 2026 சனிக்கிழமை
தொடர்புகளுக்கு:-
ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# திரை மீது எழும் ஈழத்தமிழர் அலை!



இந்தியத் தமிழக சினிமா வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் காலத்துக்குக் காலம் ஈழத்தமிழரின் பங்களிப்பு மௌனமாக இருந்ததில்லை. திரையின் ஒளிக் கதிர்களில் கரைந்தாலும், அந்த ஒளிக்குப் பின்னால் ஈழத் தமிழின் உழைப்பும் கலைநயமும் ஆழமாக பதிந்தே வந்திருக்கிறது. விசி. குகநாதன் தொடக்கம் பாலு மகேந்திரா வரை, இயக்கத்தில் ஒரு தனித்த கையெழுத்தை உருவாக்கியவர்கள் ஈழத் தமிழர்கள். அவர்கள் கொண்டு வந்த காட்சி மொழி, உணர்வின் நுட்பம், அமைதியான ஆழம் இவை அனைத்தும் தமிழ் சினிமாவின் தரத்தை உயர்த்தியவை.

நடிப்புத் துறையிலும் ஈழத் தமிழின் தடம் தெளிவாகப் பதிந்திருக்கிறது. எஸ். எஸ். சந்திரன், சிலோ விஜேந்திரன், ஏ. ஈ. மனோகரன், ஜெயபாலன் போன்றவர்கள் தங்கள் நடிப்புத் திறமையால் தமிழ் சினிமாவில் தனி இடத்தைப் பிடித்தவர்கள். அவர்கள் பெரும்பாலும் குணச்சித்திர வேடங்களில் அடங்கியிருந்தாலும், அந்த வேடங்களுக்குள் உயிர் கொடுத்தவர்கள். அவர்களின் குரலில், உடல் மொழியில், சொற்களின் உச்சரிப்பில ஈழத்தின் மணம் இருந்தது.

இப்போது அந்தப் பயணம் இன்னொரு முக்கியத் திருப்பத்தை எட்டுகிறது. வாகீசன் ஈழத்தமிழன் கதாநாயகனாகவே திரையில் தோன்றவிருக்கிறார் என்ற செய்தி, ஒரு தனி மனிதரின் வெற்றியைத் தாண்டி ஒரு சமூகத்தின் கனவாக மாறுகிறது. இது நாமும் மையக் கதாநாயகர்கள் ஆகலாம் என்ற நம்பிக்கையை விதைக்கும் தருணம். நீண்ட காலமாக ஓரங்கட்டப்பட்ட குரல், இப்போது மையத்தில் ஒலிக்கத் தயாராகிறது.



இன்றைய தொழில்நுட்ப உலகம் எல்லைகளை அழித்து விட்டது. கடல் அலைகள் இனி தடையல்ல. இணைய அலைகள் பாலமாகி விட்டன. யூ டியூ ப், ஓடிடி தளங்கள், சமூக ஊடகங்கள் இவை அனைத்தும் ஈழத் தமிழின் கலை, இலக்கியம், சினிமா கனவுகள் உலகை அடைய வாயில்களாகத் திறந்துள்ளன. இனி வாய்ப்பு இல்லை என்பது ஒரு காரணமாக இருக்க முடியாது. தயாராக இருக்கும் திறமைக்கு மேடைகள் பல.

ஆனால் ஒரு விடயம் மட்டும் மறக்கக் கூடாது. ஈழத்தமிழர் சினிமாவில் அடையாளம் பெறுவது பெயருக்காக அல்ல தரத்துக்காக. எங்கள் கலை, எங்கள் மொழி, எங்கள் அனுபவம் இவை எல்லாம் தனித்துவம் கொண்டவை. யாழ்ப்பாணத் தமிழ் பேசும் நயம், மெல்லிய உணர்ச்சி, வலி கலந்த அமைதி இவை திரையில் வந்தால், அது தமிழ் சினிமாவுக்கு ஒரு புதிய சுவாசமாகும்.

பத்திரிகைகளும், விமர்சகர்களும், ரசிகர்களும் இந்தப் பயணத்தை உணர்ந்து ஆதரிக்க வேண்டிய நேரம் இது. இது ஒருவரின் நடிப்பு பயணம் அல்ல ஈழத் தமிழ் கலை இலக்கியம் கடல் தாண்டி தன் உரிய இடத்தைப் பிடிக்கும் முயற்சி. அந்த முயற்சியில் வாகீசன் ஒரு முகம் மட்டுமே பின்னால் நிற்பது ஒரு நீண்ட வரலாறு, ஒரு அடங்காத பேராவல்.

திரை விரியும் போதெல்லாம், அந்தத் திரையில் ஈழத்தின் குரலும் ஒலிக்கட்டும். அது வெறும் கலை அல்ல. அடையாளத்தின் அரசியல், பண்பாட்டின் உரிமை. அந்த அலை இனி நின்றுவிடக் கூடாது் கடலைத் தாண்டி, உலகைத் தழுவ வேண்டும் என்பதே ஈழநாடு பத்திரிகையின் வேண்டுதலாகும்






வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Give you solutions without bankruptcy.


CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca









# தையிட்டி விகாரையில் புதிய கட்டுமானங்களை மேற்கொள்ள மாட்டேன்! விசாரணையில் விகாரைக்குரிய காணி சட்டவிரோதம் என்றால் ஏற்கவும் தயார்!

யாழ். தையிட்டி விகாரை பிரச்சனை தீர்க்கப்படும் வரையில் விகாரை வளாகத்தில் எவ்விதமான புதிய கட்டுமானங்களையும் மேற்கொள்ள மாட்டோம் என தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஜின் தோட்டை நந்தாராம தேரர் உறுதியளித்துள்ளார்.

தையிட்டி விகாரையில் உள்ள விகாராதிபதியின் வாசஸ்தலத்தில் 30 டிசம்பர் 2025தினம் செவ்வாய்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

தையிட்டியில் திஸ்ஸ விகாரையில் எதிர்வரும் 03ஆம் திகதி பௌர்னமி தினத்தில் வழமையான பூஜை வழிபாடுகள் தான் நடைபெறும். விசேட பூஜை வழிபாடுகள் எதற்கும் விகாராதிபதியாக நான் எதற்கும் இடமளிக்கவில்லை.

தெற்கில் இருந்து புத்தர் சிலை எடுத்து வருவதாகவும், அன்றைய தினம் விசேட பெரஹரா நடைபெறவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் நான் எவ்வாறான விசேட அனுமதியும் எதற்கும் கொடுக்கவில்லை. அரசியல் நோக்கத்திற்காக குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம் என கோருகிறோன்.

அதேவேளை தையிட்டி விகாரை அமைந்துள்ள தனியார் காணிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள என அரசாங்கத்தால், புதிய குழு அமைத்துள்ளார்கள், அந்த குழுவிடம் எமது விகாரைக்கான ஆவணங்களை கையளித்துள்ளோம்.

அதே போன்று காணியை உரிமை கோரும் நபர்களும் தமது காணி தான் என்பதற்கான ஆவணங்களை கையளித்துள்ளனர். இந்த விவாகரத்தில் இதொரு சட்டவிரோத செயல் என தீர்பளிக்கப்பட்டால் அதனையும் ஏற்க நான் தயார்.

விகாரை காணி விடுவிப்பு தொடர்பில்



இதுவரை யாரும் என்னுடன் பேசவில்லை. அரசாங்கத்தின் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கு மதிப்பளித்து விகாரை வளாகத்தில் எவ்விதமான புதிய கட்டுமானங்களையும் மேற்கொள்ள மாட்டோம் என உறுதியளிக்கிறேன் என்றார்.

இது இவ்வாறிருக்க வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வடக்கில் உள்ள ஒரு விகாரையை ஜனவரி 3 ஆம் திகதி தாக்கி இனக் கலவரத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார் என டெயிலி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

விகாரையைத் தாக்கி இன வன்முறையைத் தூண்டுவதே திட்டம் என்று அவர் கூறினார்.

வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமிழர்களின் மனதை மூளைச் சலவை செய்து பிரிவினைவாதத்தை ஊக்குவிக்க முயற்சிப்பதாக அவர் கூறினார்.

# வவுனியாவில் நாளை கூடும் தமிழரசுக்கட்சிக் கூட்டம்! ஸ்ரீதரனிடம் விளக்கம் கேட்கவும் முடிவு!

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

2026ஆம் ஆண்டின் முதலாவது கூட்டமாக அமையவுள்ள இக்கூட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் விசேடமாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

அதேவேளை குறிப்பாக 2026 இல் மாகாணசபைத் தேர்தலை நடாத்துவதற்கான அழுத்தங்களைப் பிரயோகித்தல் மற்றும் அவ்விடயம் சார்ந்து முன்னெடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் இக்கூட்டத்தின் போது ஆராயப்படவுள்ளது.

அதேபோன்று நீண்டகால வெற்றிடம் நிலவிய கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு சேவையில் உள்ள இராணுவ அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்மொழிந்திருந்த நிலையில், அரசியலமைப்புப் பேரவையில் சிறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவஞானம் சிறிதரன் அம்முன்மொழிவுக்கு ஆதரவாக வாக்களித்தமை கடும் விமர்சனங்களைத் தோற்றுவித்துள்ளது.

இவ்விவகாரம் தொடர்பிலும் சனிக்கிழமையன்று நடைபெறவிருக்கும்




இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டத்தில் சிறிதரனிடம் விளக்கம் கோரப்படவிருப்பதாக அறியமுடிகின்றது.

